ஸ்ரீரஸ்து.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

காஞ்சிபுரம் தேவப்பெருமாள் ஸன்னிதியின்
வைதிக லௌகிக பௌராணிக வரலாறுகளை
யெல்லாம் ஸப்ரமாணமாக விவரிக்கும்

வரதன் ஸன்னிதி வரலாறு.

18-11-73

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

எழுதியது.

ஸ்ரீராமானுஜன் வெளியீடு.

காஞ்சி ஸ்ரீ வெங்கடேச்வர ப்ரெஸ்ஸில் அச்சிட்டது.

10 – போகாமலே தரப்பட்டது

விலை ரூ. 1.

கிடைக்குமிடம்:

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம்.

1–6–1955.

acharya.org

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரிய ஸ்வாமி

acharya.org

ஸ்ரீ :

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



வரதன் ஸன்னிதி வரலாறு.

தேவப்பெருமாள் ஸன்னிதியில், தீர்த்த மரியாதையும்
அத்யாபக மிராசுமுடையவரான
ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதியது.

மங்களாசரணம்

"திவ்யாவயவ ஸௌந்தர்ய திவ்யாபரண ஹேதயே.
தந்தாவனகிரீசாய தேவராஜாய மங்களம்."

[மணவாளமாமுனிகள்.]

முதல் அத்யாயம்.

1. உபய விபூதிநாத னென்று உலகம் போற்றநின்ற எம்பெருமான் நித்யவிபூதியான ஸ்ரீவைகுண்டத்திற் காட்டிலும் லீலா விபூதியான இம்மண்டலத்திலே அநுக்ரஹம் மிகுந்தவ னென்பதை நம்மாழ்வார் *கடல் ஞாலத்து அளிமிக்கான்* (திருவாய் 4-8-5) என்கிற பாசுரத்தினால் வெளியிட்டருளினர். நித்ய ஸூரிகளும் முக்தர்களும் நிரந்தர ஸேவை பண்ணப் பரிபூர்ணநுபவம் நடைபெறுமிடமான த்ரிபாத் விபூதியிற்காட்டிலும் இவ்விருள்தருமா ஞாலத் திலே எம்பெருமானுக்கு மிகுந்த ஆதர முண்டாவதற்குக் காரணம்—ஸம்ஸாரிகள் படுமிழவைப் போக்கவேண்டி யிருத்தல் என்பதுதவிர, இம்மண்ணுலகில் திவ்ய தேசங்கள் திசைதொறும் மலிந்திருப்பதே முக்கிய காரணமாகும். இங்கு நூற்றுக்கணக்கான திவ்ய தேசங்கள் திகழ்ந் தாலும் "கோயில் திருமலை பெருமாள்கோயில்" என்று மூன்று திவ்ய தேசங்கள் மிக முக்கியமாகக் குலாவப்படுகின்றன. ஸ்ரீரங்கம் திருவேங்கடமலை ஸ்ரீகாஞ்சி என்னுமிவையே கோயில் திருமலை பெருமாள்கோயில் என்று ஸம்ப்ரதாய முறையில் வழங்கப்படுகின்றன.

2. ஸகலதிவ்யதேசங்களுக்குள்ளும் இம்மூன்று திவ்யதேசங்களுக்கு விசேஷமான ஏற்றம் எதனாலுண்டாயிற்றென்னில்; நம்மாழ்வார் தம்முடைய முதற்பிரபந்தமான திரு

acharya.org

விருத்தத்தில் இம்மூன்று திவ்யதேசங்களேமட்டுமே மங்களாசாஸனம் செய்தருளினபடியாலே யென்று பெரியார் கூறுவர். "பொருநீர்த்திருவரங்கா வருளாய்" (28) என்று ஸ்ரீரங்கத் தையும், "பெருமான்மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே" (60) என்று திருவேங்கடமலையையும், "விண்ணோர் தொழுங்கண்ணன் வெஃகாவுது" (25) என்று ஸ்ரீ காஞ்சியையும் மங்களாசாஸனம் செய்திருப்பது காணத்தக்கது. இம்மூன்று திவ்ய தேசங் கள் தவிர வேறொரு திவ்யதேசம் ப்ரதமப்ரபந்தமான திருவிருத்தத்தில் போற்றப்பட்டிலாமை யினாலே ஆழ்வார்திருவுள்ளத்தினால் இம்மூன்று திவ்ய தேசங்களுக்கே முக்கியத்வம் கொள் ளப்பட்டதென்று கொண்டு ஸ்ரீவைஷ்ணவப் பேராசிரியர்கள் இவற்றுக்கே தலைமை கொடுத்து வழங்கிவருகின்றார்கள்.

3. மேலே குறித்த மூன்று தலங்களுக்குள்ளும் ஸ்ரீ காஞ்சீபுரிக்கே மிகவும் ப்ராதான் யம் ப்ரஸித்திபெற்றுள்ளது. அதற்கும் காரணம் ஆழ்வாருடைய ஸ்ரீ ஸுக்தியே. நம்மாழ் வார் முதற் பிரபந்தத்தின் முதற்பாட்டிலும் சரமப்ரபந்தமான திருவாய்மொழியின் முதற் பாட்டிலும் நம் தேவப்பெருமாளையேயன்றே போற்றியுள்ளார். திருவிருத்தத்தின் முதற் பாட்டில் "இமையோர்தலைவா! மெய்க்கின்று கேட்டருளாய்" என்றார். தேவாதிராஜன் என்னுந்திருநாமத்தையே உட்கொண்டு *இமையோர் தலைவா! என்றது; திருவாய்மொழியின் முதற்பாட்டில்*அமரர்களதிபதியென்றதும் தேவப்பெருமாளைத் திருவுள்ளத்திற்கொண்டே; ப்ரணதார்த்திஹரனென்ற திருநாமத்தையுட்கொண்டு *துயரறுசுடரடியென்றுமருளிச்செய் தது. "ப்ரதமசதகே வீக்ஷ்ய வரதம்" என்று வேதாந்த வாசிரியர் வகுத்திருப்பதும் இந்த நிர்வாஹத்தை நிலைநாட்டித் தரும்.

4. இத்தலத்தைப் பெருமாள்கோயிலென்று வழங்கிவருவதுகொண்டும் இதன் ப்ராதான்யத்தை யுணரலாம். உலகில் எல்லாதிவ்யதேசங்களுமே பெருமாள்கோயிலாயிருக்க, இதனைமட்டும் பெருமாள்கோயிலென அநாதிகாலமாக வழங்கிவருவது குறிக்கொள்ளத் தக்கது. சாரீரகமீமாம்ஸையென்கிற ப்ரஹ்மஸூத்ரத்திற்குப் பலபாஷ்யங்கள் தோன்றி யுள்ளன. இவைபாஷ்யங்களை சங்கரபாஷ்யமென்றும் மத்வபாஷ்யமென்றும் நீலகண்ட பாஷ்ய மென்றும் கார்த்தாக்களின் பெயரையிட்டு வ்யவஹரித்துவருகிறார்கள். ஸ்வாமி யருளிச்செய்த பாஷ்யத்தை மாத்ரம் ராமாநுஜ பாஷ்யமென்னாமல் ஸ்ரீபாஷ்ய மென்றே உலகமெல்லாம் வழங்கிவருகின்றது. அதுபோலவேயாம் இத்தலத்தை மாத்ரம் பெருமாள்கோயிலென்பது.

5. இன்னமும் இத்தலத்தின் சிறப்பைக் கேண்மின். வெளியூரிலிருந்து புறப்பட்டு இவ்வூர்க்கு வருகிறவர்கள் அங்கேபுறப்படும்போது பெருமாள்கோயிலுக்குப் போவதாகச் சொல்லுவதும்; இவ்வூர்வந்துசேர்ந்து க்ருஹத்தினின்றும் ஸன்னிதிக்குப் போம்போது கோயிலுக்குப் போவதாகச் சொல்லுவதும், கோயிலுக்குள்ளே போனபிறகு ஸ்ரீஹஸ்திசைல சிகரோத்துங்கவலபாரிஜாதனை ஸேவிக்கவேண்டித் திருமலைக்குப் போவதாகச் சொல்லுவதும் வ்யவஹாரத்தில் காண்கையாலே கோயில் திருமலை பெருமாள்கோயிலென்னும் மூன்று திவ்ய தேசங்களும் இவ்விடத்தே யுள்ளன வென்று கொள்ளத் தகுதியுண்டு.

6. இங்ஙனே சிறப்புப்பெற்ற இத்தலத்தின் வரலாறுகளை உள்ளபடியுணர விரும்பு மவர்கள் எங்குமுள்ளார்கள். அன்னவர்கட்கு ஸகலபாஷைகளிலும் இத்தலத்தின் வரலாறு களை விளக்கிப் புத்தகங்கள் அச்சிட்டு உதவவேண்டுவது மிக முக்கியமானது. ஹஸ்திகிரி

acharya.org

மாஹாத்மியம் என்கிற புராணநூல்கொண்டு தெரிந்து கொள்ளக்கூடிய வரலாறுகளை நாம் வடமொழி, தென்மொழி, தெலுங்கு பாஷைகளில் ஸாரமாகவெழுதிப் பலவாண்டுகட்கு முன்னமே வெளியிட்டிருக்கிறோம். [அவை இந்நூலின் அநுபந்தமாகவும் வெளியிடப்பெறும்.]

7. புராண வரலாறுகள் தவிர, பிற்காலத்து வைதிக லௌகிக வரலாறுகள் பலவற்றையும் தெரிந்துகொள்ள விரும்புவது நவநாகரிகர்களுக்கு இயற்கையாதலால் அன்னவர்களையும் த்ருப்திசெய்விக்க இந்நூலெழுதப்படுகின்றது. ஸமீபகாலத்தில் [இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பு] "காஞ்சீபுரம் தேவராஜஸ்வாமி தேவஸ்தான வரலாறு" என்றொரு சிறுபுத்தகம் (27 பக்கமுள்ளது) தேவஸ்தான வெளியீடாக வெளியிடப்பட்டு நமதுபார்வைக்கு வந்தது. இந்த தேவஸ்தானத்தில் தற்காலம் எக்ஸிக்யூடிவ் டிரஸ்டி பதவியிலிருந்துவரும் ப்ரஹ்மஶ்ரீ விச்வநாதய்யரவர்கள் ஒரு அட்வகேட்டுக்கு நியமனம் தந்ததாகவும், அவர் மேலேசொன்ன வரலாற்றை யெழுதிக்கொடுத்ததாகவும், அதை தேவஸ்தான மூலமாக அச்சிட்டு வெளியிட்டதாகவும் காண்கிறது.

8. தேவஸ்தானத்தின் வரலாறுகளை வெளியிட விருப்பமும் அவசியமும் ஏற்பட்டால் இந்த தேவஸ்தானத்தின் நீண்டகால அநுபவமுள்ளவராய், கஷிகளில் மனத்தைச் சிறிதும் செலுத்தாமல் நடுநிலையில் நிற்பவராய், அப்ராமாணிகவிஷயங்களை நெஞ்சாலும் நினையாதவராய், ப்ராமாணிக விஷயங்களையே ஸ்ருதய ஶ்ருதயங்கமமாக எழுதுமியல்வினராய் விளங்குமவர்களை நாடிப் ப்ரார்த்திக்கவேணுமேயல்லது கஷிபேதங்களை வளரச் செய்வதொன்றிலேயே கண்ணுங்கருத்துமானவர்களைப் ப்ரார்த்திப்பதும் அன்னவர்களெழுதித்தரும் புத்தகங்களை தேவஸ்தான மூலமாக வெளியிடுவதும் மெச்சத்தக்கதாகாது. வீணை மாச்சரியத்தை வளர்க்கும் இத்தகையபுத்தகங்களினால் உலகுக்குயாதொரு நன்மையும் செய்யப்பட்டதாகாது. நன்மை செய்யப்படாததோடு தீமையும் செய்யப்பட்டதாகும். ப்ரஸ்தாவித்த வரலாற்றுச் சுவடியில் உண்மையான விஷயங்கள் பல விடுபட்டும், உண்மைக்குமாறான விஷயங்கள் பல பல புகுத்தப்பட்டு மிருக்கின்றன. லோகாபிராமமாக எழுதிவருகையில் "இக்காஞ்சிமாநகர் சென்னைக்குத் தென்மேற்காய் 45 மைல் தூரத்திலுள்ளது; ஸதரன் ரைல்வேயில் செங்கற்பட்டு—அரக்கோணம் கிளைப்பிரிவில் அதன் நடுவேயுள்ளது. காஞ்சீபுரம் ரைல்வேஸ்டேஷன் பெரிய காஞ்சீபுரத்திற்குச் சமீபமானது. இது செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தது. இங்கே பஸ்ஸுகள் ஏராளம். கடைகள் கடைவீதிகள் விசேஷம். நெசவுத்தொழில்கள் அபாரம்" "இக்கோவில் கோபுரம் மிகவும் உயரமானது; மேலண்டை கோபுரத்தைவிட கீழண்டை கோபுரம் அதிகவுயரம்; வெகுதூரத்திலிருந்து பார்த்தாலும் கோபுரம் கண்ணுக்குத் தெரியும்" என்றிப்படி எழுதியுள்ளவை சிறிதும் ஆக்ஷேபிக்கத்தகாதவை. இவ்வண்ணமாகவே 100, 200 பக்கங்களும் எழுதிக்கொண்டே போகலாம். அதனால் நூலின் கௌரவத்திற்குச்சிறிதும் ஹானியில்லாமலேயிருக்கும். இந்த அபூர்வார்த்த ப்ரகாசனங்களோடு நின்றிருந்தால் மிகவழகியதே.

9. உலகில் சிலர் ராமாயணம் சொல்லுகிறேனென்று ஆரம்பித்து வாய்போன படி யதேஷ்டமாக அபார்த்தங்களை யெல்லாம் கலந்து பொழிவதுண்டு; சிலரோவென்னில், உட்பொருள்களில் பிரவேசியாமல் "ராமாயணம் மிகவுயர்ந்தநூல்; இதை த்ரிமதஸ்தர்களும் கொண்டாடுகிறார்கள்; இதற்கு த்ரிமதஸ்தர்களும் வியாக்கியானங்கள் செய்திருக்கிறார்கள். இது பல லிபிகளில் பலதடவை அச்சிடப்பட்டிருக்கிறது. இதற்குப் பல பாஷைகளில்

acharya.org

மொழிபெயர்ப்புகள் தோன்றியிருக்கின்றன." என்றிப்படி மணிக்கணக்காகப் பேசிக் கொண்டு போவதுண்டு. "அபார்த்தங்கள் சொல்லி அனர்த்தத்தை விளைப்பதிற் காட்டிலும் இங்ஙனே பேசிக்கொண்டு போவது தேவலே" என்று அவ்வுபன்யாஸங்களை மஹான்கள் கொண்டாடுவதுண்டு. அவ்வண்ணமாகவே இந்த வரலாற்று நூலெழுதப்புகுந்தவரும் காஞ்சீபுரத்தின் அகல நீளங்களை வருணிப்பது, கடைவீதிகளின் காட்சிகளை விவரிப்பது, ஸன்னிதியில் நூற்றுக்கால் மண்டபம் முதலானவற்றிலுள்ள சிற்பங்களின் சிறப்புக்களைச் செப்புவது, தேவப்பெருமாளுக்கு உத்ஸவங்கள் நடக்கிறவிதம் வெகு ஆச்சரியம், மிகமிகவற்புதம், இப்படி எங்குமே ஸேவித்ததில்லையென்று கண்ணீர்மழை பொழிந்து எழுதுவது; ஆக இப்படிப்பட்ட தொண்டு செய்வதோடு நின்றிருந்தால் உண்மையில் மிகமிக மெச்சும்படியாகவேயிருக்கும். புத்தகமும் விசேஷமாக விற்பனையாகும்.

10. இந்த தேவாலயத்தில் இடையில் பல வருஷங்கள் தலைவிரித்தாடி 25, 30 வருஷங்களாக சாந்தமாயிருக்கின்ற கலாவிவாதங்களை மீண்டும் கிளப்புவதற்கென்றே எழுதப்பட்ட விவாத வரலாற்றுச்சுவடியை தேவஸ்தான வெளியீடாகக் காட்டுவதும், தேவஸ்தானத்தில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிப்பதும் தகுதியற்றது. "ஆத்தான் ஜீயர், வடகலை ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த இந்தக்கோயிலில் தமது தென்கலையாசாரியரது பத்யத்தை யநுஸந்தித்துப் பிரபந்த ஸேவாகாலம் தொடங்க அனுமதி பெற்றார்" என்பது முதலான அஸம்பத்த விஷயங்கள் மலிந்த விவாத வரலாற்றுச்சுவடியானது இந்த தேவஸ்தானத்திற்கு வெகு தூரத்தளவிலே நிற்கத்தக்கதென்பதை நாம் விரிவுக்கு அஞ்சாது விபுலமாகவே நிரூபிப்போம்.

முதலத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்யாயம்.

11. இந்த நமது நூலுக்கு விவாதவரலாற்றுச் சுவடியின் மறுப்புரைத்தல் ப்ரதான லக்ஷ்யமன்று. இந்த தேவஸ்தானத்தின் மஹிமைகளையும் சரித்திரங்களையும் ருஜுவான ஆதாரங்களுடன் ப்ராமாணிகர்கள் உகக்கும்படியாயும், அப்ராமாணிகர்களுக்கும் வாய்திறக்க இடமில்லாதபடியாயும் விவரிப்பதுதான் இந்த நமது நூலுக்கு ப்ரதானலக்ஷ்யம். விவாத வரலாற்றுச்சுவடியிலுள்ள, "தாதாசாரியர்களுடைய வம்சஸ்தர்களே வெகுகாலம் தர்மகர்த்தாக்களாகயிருந்துவந்தார்கள்" என்ற வாக்கியத்தில் "ஆகயிருந்து" என்ற சொல்தொடையைக் காணும் இலக்கணவிலக்கியப் புலவர்கள் எப்படி வெறுப்பர்களோ, அப்படியேதான் விஷயங்களைக் காணும் விவேகிகளும் மிகமிக வெறுப்பர்களென்பதில் ஐயமில்லை. சுருதி விஷயங்களில் ஸம்பந்தப்படாமல் ஸாதாரணமாக எழுதியிருக்கும் விஷயங்களிலுங்கூட விபரீதங்களே மிக மலிந்து கிடக்கின்றன. கேண்மின்;—

12. "தெப்போத்ஸவத்துக்காக வருஷத்துக்கு இருமுறை பெருமாள் வெளியூருக்கு எழுந்தருளுகிறார். தென்னேரிக்கும், ராய்ஜீகுளத்துக்கும் எழுந்தருளி அங்கே தெப்போத்ஸவம்" என்றெழுதப்பட்டுள்ளது. தென்னேரித்தெப்பம் இடையில் ஆரம்பித்துச் சில வருஷங்கள் நடந்து அறவே நின்றுபோய் அனேக வருஷங்களாயிற்று. இதைப்பற்றி எழுத வேண்டிய முறை இதுவா? (2 "வனபோஜன உத்ஸவம் தற்காலம் தைமாதச்ரவணத்தில் நடந்துவருகிறது" என்றெழுதப்பட்டுள்ளது. 30, 40 ஆண்டுகட்கு முன்பு இவ்வுத்ஸவம் ச்ரவணத்தில் நடந்துவந்ததுண்டு. இவர் தற்காலம் என்று குறிப்பிட்டு ச்ரவணத்தில் நடந்து

acharya.org

வருவதாக எழுதுவது தவறு. ஒரு ஞாயிற்றுக்கிழமை பார்த்து அதிலேயே நியமமாய் நடத்தப்பட்டு வருகிறது. அந்த நாளில் சரவண நக்ஷத்திரம் யாத்ருச்சிகமாகக் கூட இதுவரை சேர்ந்ததில்லை. நிகழும் மன்மத வருஷத் தைமாதத்தில் திருவோணம் ஞாயிற்றுக்கிழமையோடு சேர்ந்துவருகிறது; ஆனால் அதில் வனபோஜன உத்ஸவம் நடத்தமாட்டார்களென்பது திண்ணம். பார்க்கலாமே. இப்படிப்பட்ட சிறு விஷயங்களும் அஸம்பத்தமாக எழுதப் படும்போது மற்ற விஷயங்களில் கேட்கவேணுமோ? பாஷையின் வ்யுத்பத்தியிலும் குறைகள் பல. (பக்கம் 3-ல்) பஞ்சப்பிராகாரங்கள் என மகுடமிட்டு "இக்கோயிலுக்குப் பிராகாரங்கள் ஐந்து; மாடவீதி எனப்படும் மடவிளாகம் வெளிப்பிராகாரம்" என்றெழுதியுள்ளது. ப்ராகார மென்று திரு மதிளுக்குப் பெயரேயொழிய திருவீதிக்குப் பெயரன்று. மாட வீதிகளில் காட்சிதருவது வெளிப்பிராகாரம் என்றெழுதி யிருக்கவேணுமேயொழிய, மாட வீதியையே வெளிப்பிராகாரமாக எழுதியிருப்பது மருள். இத்தகைய விஷயங்களை நாம் எழுதுவதற்கு இவரை லக்ஷ்யமாகக் கொள்வது பொருத்தமற்றதென விடுப்போம்.

13. திவ்யதேசங்களுக்கு ப்ரபாவம் முக்கியமாக ஆழ்வாராசாரியர்களின் ஈடுபாடு பற்றியேயாகும். நம் தேவப்பெருமாள்ஸன்னிதிக்கு ஆசாரியர்களின் ஈடுபாடு விசேஷமாக இருந்தாலும் ஆழ்வார்களின் பாடல் கிடையாதென்று சில அறிவிலிகள் பிரசாரம் செய்து போருவதுண்டு. இதைப்பற்றி விசாரநூல்களும் பலவாண்டுகட்கு முன் வெளிவந்துள்ளன. பலஆழ்வார்களால் பாடப்பட்டதலமிது வென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. விவாத வரலாற்று நூலில் (பக்கம் 18-ல்) இலக்கியப்பகுதி யென்று தொடங்கி இத்தலத்தைப் பாடியவர்களைப் பற்றி ஏதோ எழுதப்பட்டுள்ளது. ஆழ்வார்கள்யாவரும் ஆளவந்தார் முதலான ஆசாரியர்களுக்கு மிக முற்பட்டவர்களாதலால் அப்படிப்பட்ட ஆழ்வார்களின் பாடலைப்பற்றியே முன்னம் விரிவான நிரூபணம் செய்யவேண்டும். விவாதவரலாற்றில் அஃது அடியோடு செய்யப்படவில்லை. "சுமார் 900 வருடங்களுக்குமுன் ஆளவந்தாரென்கிற ஆசார்ய ச்ரேஷ்டர் வரதனைக்குறித்து ஒரே ஒரு ச்லோகம் பாடினர்" என்று இலக்கியப்பகுதி ஆரம்பம் செய்யப்பட்டிருக்கின்றது. "ஸ்தோத்ரரத்ந மென்கிற ஆளவந்தார் ஸ்தோத்ரம் தேவப்பெருமாள் விஷயமேயென்பது பெரியோர் கொள்கை" என்று, ஸம்ப்ரதாய ஸரணியில் நடையாடாத வொருவிஷயம் நூதனமாக ப்ரஸ்தாவிக்கப்படுகிறது. அபிமானவிசேஷத்தினால் இங்ஙனே யெழுதுவதில் தவறு ஒன்றுமில்லையாதலால் இதுகிடக்க.

14. ஆளவந்தார்பாடலையறிவித்த பிறகு ஆழ்வார்பாடலைப்பற்றிச் சில வார்த்தைக ளெழுதப்பட்டுள்ளன. "ஆழ்வார்களால் பாராட்டப் பெற்று பாடல்பெற்ற ஸ்தலமிது என்பதே தொன்று தொட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்..... இத்திருக் கோயில் ஒரு திருப்பதியன்று, திவ்யதேசமன்று என்று சொல்லப் பிராமாணிகர்களால் இய லாது" என்கிற வார்த்தைகளைக் காண்கிறோம். ஆர்யர்காள்!, இத்தலத்தைப் பாடின ஆழ்வார்களின் திருநாமங்களையும் அவ்வாழ்வார்களின் பாசுரங்களையும் எடுத்துக்காட்டி ஆனந்தமாக அநுபவிக்க வேண்டியது ப்ராப்தமாயிருக்க இவ்வண்ண மெழுதுவது பக்தர் களுக்குத் தகுமா? பிரபலகவியான பிள்ளைப் பெருமாளையங்கார் இத்தலத்தைப் பாடியிருக்கிற படியாலே ஆழ்வார்கள் பாடினரென்பது ஸித்தமாகிறதென்று அட்வகேட் முடித்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இத்தலத்திற்கு ஆழ்வார் பாடல் கிடையாதென்று கூறுகின்ற பிரதிவாதிகளைக் கண்டனம் செய்ய வேண்டும்போது ஐயங்கார் பாடலையெடுத்துக் காட்டுவது

acharya.org

ஏற்கும். உண்மையை யுணர்த்தப் புகுந்த நூலில் இன்னின்ன ஆழ்வார்கள் இத்தலத்தைப் பாடினர்களென்று விவரிக்கவேண்டியிருக்க, அதைப்பற்றி ப்ரஸ்தாவலேசமும் செய்யாதிருப்பது ஹ்ருதயத்தில் ஆர்ஜவமில்லையென்றுதானே காட்டும். அருந்ததிபோன்றவொரு மாதரசியைப் புகழத் தொடங்கினவர் "இவள் பதிவ்ரதையல்லளென்றும் ஸ்வைரிணி யென்றும் சொல்ல இயலாது" என்று பேசுவது முண்டோ? அப்படி பேசப்படுமாயின் அது குறை கூறுதற்கே யிட்டவழியென்பது வெளிப்படையல்லவா? ஆழ்வார்பரிஜனங்களின்மீது இவர்க்கு உள்ளுறையும் மாச்சரியமே (அல்லது) அநுராகமே இங்ஙனமெழுதுவித்த தென்னத் தட்டுண்டோ? அஃதில்லையென்னில், அசட்டுத்தன மென்றிசைய வேண்டும்.

15. இத்தலத்தைப்பாடின ஆழ்வார்களையும் அவர்களது பாசுரங்களையும் ஸ்பஷ்டமாகத் தெரிந்து கொள்ளவும் தெரிவிக்கவும் ஆற்றலில்லாமலிருக்கலாம். அப்படியாகில் ஒன்று செய்திருக்கவேணும். (அதாவது) இங்ஙகருக்கு வடமொழியில் காஞ்சீ என்று வழங்கிவரும் பெயரானது "க இதி ப்ரஹ்மணே நாம தேந தத்ராஞ்சிதோ ஹரிः, தஸ்மாத் காஞ்சீதி விக்க்யாதா" என்கிற புராணச்லோகத்தின்படி நான்முகனால் ஆராதிக்கப்பட்ட தலம் என்பதுபற்றியே தோன்றியதாதலாலும், இத்தகைய விசேஷம் ஸ்ரீஹஸ்திகிரிக்கே உள்ளபடியாலும், தமிழில் கச்சி யென்னுஞ் சொல் காஞ்சீ என்கிற வட சொல்லின் விகாரமேயாதலாலும், கச்சியென்று திவ்யப்ரபந்தங்களில் எங்குவந்தாலும் அங்கெல்லாம் தேவப்பெருமாள்தலத்தின் மங்களாசாஸனமே யென்று கொள்வதில் குறையில்லை—என்று இவ்வளவு எழுதியிருந்தாலும் போதும். இவ்வண்ணமாக எழுதாமலும், இன்னின்ன பாசுரங்கள் இத்தலத்திற்கு உரியன என்று காட்டாமலும் "இத்தலத்தை திவ்யதேச மன்றென்று சொல்ல இயலாது" என்றெழுதிவைப்பதானது என்னகருத்தினலென்பதை விவேகிகள் உய்த்துணர்க.

இரண்டாமத்யாயம் முற்றிற்று.

மூன்றாமத்யாயம்.

தேவப்பெருமாளும் மணவாளமாமுனிகளும்.

16. இதற்கடுத்தபடியாக "வடமொழிநூல்கள்" "தென்மொழி நூல்கள்" என மகுடமிட்டுத் தேவப்பெருமாள்விஷயமாக வடமொழி தென்மொழிகளில் அவதரித்துள்ள நூல்களைக் குறிப்பிட்டு வருகையில், ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் சேராதவர்களும் விஷ்ணுத்வேஷிகளுமானவர்கள் இயற்றிய நூலையும், ஆசார்ய கோஷ்டியில் சேராத நவீந விகடகவிகள் இயற்றிய நூலையும், களத்தூர் வீரராகவமுதலியாரியற்றிய நூலையும் குறிப்பிட்டிருக்குமிவர்க்கு ஆசார்யஸார்வபௌமரான மணவாளமாமுனிகள் இயற்றியருளின தேவாதிராஜமங்கள நூல் நினைவுக்கு வரவில்லைபோலும்; இந்த மங்கள நூல் இந்த தேவஸ்தானத்திற்கு அபூர்வமானதன்று. இதைப்பற்றி நியாயாலய மறிந்த இதிஹாஸம் கேண்மின்;

17. ஸ்ரீவைஷ்ணவ தேவாலயங்களுக்கு மிகவும் முக்கியமானது அத்யயநோத்ஸவம். அது ஸகல ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் எழுந்தருளச் செய்து இருபத்தொருநாள் நடத்து முத்ஸவம். முற்காலத்தில் இந்த தேவஸ்தானத்தில் தர்மகர்த்தம் பார்த்துவந்த வடகலை தாதாசாரியர்களுக்கு இம்மஹோத்ஸவம் தலைவேதனையாயிருந்தபடியால் எழுபது எண்பது வருஷங்களுக்கு முன்பு இவ்வத்யயநோத்ஸவத்தை அடியோடு நிறுத்திவிட்டார்கள். ஆழ்வாராசாரியர்களுக்கு மாஸ திருநக்ஷத்ரம் வருஷ திருநக்ஷத்ரம் முதலான எந்த விசேஷமும் நடத்தாமல்

acharya.org

அறவே நிறுத்திவிட்டார்கள். அப்போது தென்கலையார்கள் இதைப்பற்றி நீதிமன்றங்களில் அடிக்கடி முறையிட்டுக்கொண்டே யிருந்தார்கள். சில ஸமயங்களில் மாஜிஸ்ட்ரேட்டாக வருகிற அதிகாரிகள் தர்மகர்த்தாக்களை யழைத்து "வைஷ்ணவக் கோவில்களுக்கு மிகவழகிய அனுஷ்டானமாகிய அத்யயநோத்ஸவத்தை எதுக்கு நிறுத்துகிறீர்கள்? இது நன்றுயில்லை; நடத்துங்கள்" என்று சொல்ல, அப்படியே நடத்துகிறோமென்று அவ்வதிகாரிகளிடமொப்புக் கொண்டு, திருமங்கையாழ்வார், ஆளவந்தார், ஸ்ரீராமாநுஜர், கூரத்தாழ்வான், தேசிகர் ஆகிய இவ்வைந்து திருநாமங்களை மாத்திரம் எழுந்தருளச் செய்து அவ்வுத்ஸவத்தை நடத்துவதாக சிச்சயித்திருந்தார்கள். இந்த திவ்ய தேசத்தில் க்ரந்த நிர்மாண முகத்தாலோ கைங்கர்ய முகத்தாலோ ஈடுபட்டவர்கள் இவ்வைந்து திருநாமங்களே யென்றும், இவர்களை மாத்திரமே கொண்டு இவ்வுத்ஸவத்தை நடத்துவது யுக்த மென்றும் வாதிக்கத் தலைப்பட்டார்கள். தேவராஜாஷ்டகமருளிச்செய்தவரும் அநந்யஸாமாந்யமான அத்தாணிச்சேவகம் செய்தவருமான திருக்கச்சிநம்பிகளை இந்த ச்ரேணியில் அவர்கள் சேர்க்காததற்குக்காரணமாக அவர் (தென்கலையானதுபற்றி) இந்த தேவஸ்தானத்தைச் சேர்ந்தவரல்லரென்று பொய் சொல்லப் பட்டது. அது பொய்யுரையே யென்று நீதிபதிகளே முடித்திட்டார்கள்.

18. அப்போது நீதிமன்றத்தில் பிரபலமான விசாரணை எற்பட, தென்கலையார்கள் மணவாளமாமுனிகளின் வைபவநூலாகிய யதீந்த்ரப்ரவண ப்ரபாவ மென்கிற வசனநூலை கோர்ட்டில் தாக்கல் செய்து, மணவாளமாமுனிகளும் தேவப்பெருமாளை தேவாதிராஜமங்கள மென்கிற மங்களாசாஸநஸ்துதியினால் பாடினவரே யென்பதை நிரூபிக்க, இதை தர்மகர்த்தாக்கள் மறுக்க முடியாமல் திகைத்துநிற்க, அதிகாரிகளால் தீர்ப்பு செய்யப்பட்டதாவது, "இத்தலத்தைப் பாடினவர்களை மாத்திரமே கொண்டு அத்யயநோத்ஸவம் நடத்துவதென்று வடகலை டிரஸ்டிகள் கூறும் வாதம் விசித்திரமாயிருக்கிறது; அப்படியே ஒப்புக்கொண்டாலும், இத்தலத்தைப் பாடினவர்களுள் மணவாளமாமுனிகளும் சேர்ந்தவராகத் தீர்மானிக்கப்படுகிற படியாலே அவரில்லாமல் நடத்தவிருக்கும் பகல்பத்திராப்பத்து உத்ஸவமானது கலஹாஸ்பத மாகையாலே **144** ஸெக்ஷன்படி தடைசெய்யப்படுகிறது" என்று.

19. இவவண்ணமாக ஒரு முறையன்று, இரண்டு முறை தாதாசார்ய டிரஸ்டிகளின் முயற்சி நீதிபதிகளால் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்களை இந்த அட்வகேட் அறியாதவரல்லர். நன்கு அறிந்தவரே. மணவாளமாமுனிகளின் அந்த மங்களாசாஸந நூலை வியாக்கியானத்தோடுங்கூட பலகால் ஸேவித்தவரே. யதார்த்தங்களை மறைத்து அயதார்த்தங்களையே ஸங்கோசமில்லாமல் எழுதிவரவேண்டுமென்பது இவருடைய தீக்ஷையாதலாலும், பல வருஷங்களாக இந்த தீக்ஷையையே இவர் அடிக்கடி பரிபாலநம் செய்து கொண்டு வருவதாலும், வெளிவரும் மறுப்புரைகளினால் தாமெழுதியது அப்ராமாணிகமேயென்று நெஞ்சார அறிந்து வைத்தும் திருப்பித் திருப்பிப் பழைய அபத்தங்களையே ஒயாமல் எழுதி மறுபதிப்பும் செய்துவருமியல்வினராதலாலும், தம்முடைய உக்திகளில் சிலபாமரர்களாவது மயங்கட்டுமே யென்றெண்ணியிருப்பவராதலாலும் இத் தன்மைகளுக்கேற்பக் காரியம் செய்து வருகின்றார்.

20. இந்த தேவாதிராஜமங்களம் இந்த தேவஸ்தானத்தில் ப்ரஹ்மோத்ஸவாதி ஸமயங்களில் நிகழும் "அர்ச்சகர்களின்படிப்பு" என்று ப்ரஸித்தமான விஜ்ஞாபனத்தில் இன்றளவும் இடையறாது அர்ச்சகர்களினால் விஜ்ஞாபனம் செய்யப்பட்டுவருகிறது. கூரத்தாழ்வான் போல்வார் வரதராஜஸ்தவாதிகள் அருளிச்செய்திருந்தாலும் மங்களாசாஸநரூபமாக ஒரு

acharya.org

ஆசார்யரும் ஒரு ச்லோகமும் அருளிச்செய்யவில்லையே யென்று குறைபட்டு, அக்குறைதீரவே மணவாளமாமுனிகள் இந்த மங்களாசாஸனஸ்துதியை யருளிச்செய்தது. பேரருளாளனும் இந்த ஸ்துதியினால் ப்ரஸந்நனாகியே இந்த தேவஸ்தானத்தில் மாமுனிகளுக்கும் அவரடியார் களுக்கும் பலவாண்டுகள் எதிர்கொழித்த இன்னல்களை அறவே அகற்றி அந்நாள் தொடங்கி இந்நாள்வரை கைவிடாது காத்தருள்வது.

19. மணவாளமாமுனிகள் தேவப்பெருமாளைப்பற்றியும், தேவப்பெருமாள் ஸன்னி தியிலுள்ள ஸந்நிவேசங்களைப்பற்றியும், ஸ்ரீ காஞ்சியிலுள்ள மற்றும் ஸகல ஸன்னிதிகளைப் பற்றியும் அருளிச்செய்துள்ள ச்லோகரூபமான ஸ்ரீ ஸூக்திகள் அவருடைய வைபவ நூல்களிலிருப்பவை உரையோடுங்கூட ஏற்கெனவே பலகால் அச்சிடப்பட்டிருந்தாலும், ஸகலபக்தர்களும் அநுஸந்தித்து உய்வதற்காக இதுதன்னிலும் மேலே அநுபந்தமாகச் சேர்க் கப்படுகிறது. மாத்ஸர்ய மலிநஹ்ருதயரானவர்களுக்கு இதனால் பலனென்றும் விளையாதா யினும் உண்மைபக்திமான்களுக்குப் பேருதவியாகுமென்பது எமது துணிபு.

20. இவர்தாமே நேற்று நந்தன வருஷத்தில் நடந்த வைசாகோத்ஸவ விசேஷங்களைப் பற்றி 'நந்த னோத்ஸவம்' என்று ஒரு சிறுநூல் வெளியிட்டுள்ளார். அதுவும் இந்த தேவஸ் தான கார்யாலயத்தில் கிடைப்பதாக வெளியிடப்பட்டிருக்கின்றது. அதில், மூன்றுவது திருநா ளாகிய கருடோத்ஸவதினத்து விசேஷங்களை யெழுதிவருமிவர்க்கு, அன்று நம்மாழ்வா ருடைய சாத்துமுறை யென்பதும், வேதப்பெருமாள் அன்று நம்மாழ்வார் ஸன்னிதிக்கெழுந் தருளி ஆறுமணிகாலம் ஆச்சரியமாக விபவங்கள் கண்டருளுகிறரென்பதும் நினைக்கே அணுகவில்லையன்றே? அஃதொன்றுகொண்டே இவருடைய பக்தியின்கனத்தையும் பரமப்ரா மாணிகத்வத்தையும், தடஸ்தபாவத்தையும் உலகம் மிக மெச்சுகின்றதன்றே. இவருடைய உள்ளுறிய பகைக்கு மணவாளமாமுனிகளோடு நம்மாழ்வாரோடு அவரடியார்களோடு வாசியில்லை. அதன்காரணத்தை நாம் விவரிக்கவேணுமோ? இப்போது இவர் விவாத வரலாற்றுச்சுவடியை வெளியிட்டது உண்மையில் உலகுக்குப் பெரும்பாக்கியமே. பல நூற்றுக்கணக்கான மருமங்களை உள்ளபடி உலகம் உணர்ந்துகொள்வதற்கு ப்ரஸக்தியை விளைத்தாரென்று உகப்போம்.

மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

நான்காமத்யாயம்—தேவஸ்தானமும் ஆழ்வார்கள் ஸன்னிதிகளும்.

21. விவாதவரலாற்றுச் சுவடியில் "3. பஞ்சப் பிராகாரங்கள்" என்ற பகுதியின் கீழ் எழுதியுள்ளதாவது– "முற்காலத்தில் (ஆழ்வார்திருவீதி) பிராகாரத்தின் வடபுறத்தில் பெரியாழ் வாருக்கு ஒரு ஸன்னிதியும், தொண்டரடிப் பொடிகள் திருப்பாணாழ்வார் இருவர்களுக்கும் ஒரு ஸன்னிதியும் ஆக இரு ஸன்னிதிகள் இருந்ததாகவும், இப்பிராகாரத்தின் தென்கிழக்கு மூலையில் மேற்குப்பார்த்தபடி திருமங்கையாழ்வாருக்கு ஒரு ஸன்னிதியும், பிராகாரத்தின் தென்புறத்தில் திருமழிசைப்பிரானுக்கும் குலசேகராழ்வாருக்கும் சேர்ந்து ஒரு ஸன்னிதியும் மூதலாழ்வார்கள் மூவருக்கும் மற்றொரு ஸன்னிதியும் இருந்ததாகவும் தெரியவருகிறது. அவ் வைந்து ஸன்னிதிகளும் இப்போது இடிந்து போய் வெகு கிலமாகக் காண்கின்றன" என்று.

22. மனமாரத்தெரிந்த உண்மைகளை மறைத்து எழுதப்பட்ட வாசகங்களன்றே இவை. இவ்விடத்து வரலாறுகள் கேண்மின். மேலே குறிந்த ஐந்து ஸன்னிதிகள் இருந்ததாகத்

acharya.org

தெரியவருகிறது — என்றெழுதியிருப்பது என்னவார்த்தை. குறிப்பிட்ட ஸன்னிதிகள் ஐந்தும் நாளைக்கும் ப்ரத்யக்ஷமாகக் காணப்படுமவை. மண்கட்டிடமல்ல, செங்கல் கட்டிட மல்ல; கற்பாந்தமான கருங்கல் கட்டிடங்கள். ஸன்னிதிகள் சிறியவையல்ல; ஒவ்வொரு ஸன்னிதியும் பெரிதே. இடிந்துபோய் வெகுகிலமாகக் காண்கிற தென்பதும் தவறு. ஸன்னிதிக்குள்ளே போக்குவரத்துக்கு ப்ரஸக்தியில்லாதபடி முன்னிருந்த வடகலைட்ரஸ்டிகள் செய்தமையாலே உட்புறங்களில் புற்றும் புதரும் உண்டாகி ஸர்ப்பங்களுக்கு வாஸஸ்தானமா யிராகின்றதத்தனே.

23. கி. பி. 1842ல் இந்த தேவஸ்தானமானது அரசாங்கத்தாரால் வடகலை தாதாசாரி யர்களிடம் ஒப்பிக்கப்பட்ட பிறகு தர்மஹர்த்தாக்களான மூடி தாதாசாரியர்கள் மிகச்சில வரு ஷங்களுக்குள்ளாகவே பல அதற்கணச் செய்கைகளைச் செய்யத்தலைப்பட்டு, முதன் முதலாக ஆழ்வார்களை உள்ளேயடக்கி அவர்களுடைய ஸன்னிதிகளில் வாசலில் மண்சுவரெழுப்பி மூள் ளடைத்து வைத்திட்டார்கள். ஸமீபகாலத்தில் 35 வருஷங்களுக்கு முன் வில்லியம்பாக்கம் பையாகண்ணு தாதாசாரியர் என்பவரும், மேல்மா கிருஷ்ணஸாமி தாதாசாரியரென்பவரும் இந்த தேவஸ்தானத்தில் தர்மஹர்த்ரு பதவியை வஹித்திருந்தபோது "இந்த கோவிலில் எந்த ஆழ்வாருக்கும் ஒரு உத்ஸவமும் கிடையாது, ஒரு மரியாதையும் கிடையாது" என்று எழுத்து மூலமாக நியாயாலயத்தில் ஆக்ஷேபித்திருப்பதும், ஒரு ஆண்டாள் திருக்கல்யாணத்தில் பெரி யாழ்வார்க்குப் பரிவட்டம்கட்ட, அதை மேலே சொன்ன பையாகண்ணுதாதாசாரியர் தட் டிப்போட்டதும், அவ்விதமாகவே திருப்பாணழ்வாரிடத்திலும் அபசாரப்பட்டதும் இங்ஙனே மற்றும் பல சரிதைகளும் ரிகார்டுகளில் எறிக்கிடக்கிறன. இந்த ஸன்னிதியில் ஆழ்வாராசாரி யர்களுக்கு அத்யயநோத்ஸவமே கிடையாதென்று மூன்று கோர்ட்டுவரை வியாஜ்ஜியமாடித் தோற்றவர்களு மிவர்களே. இப்படி ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் உதாஹரிக்கத்தக்க சரித் திரங்கள் மஹாபாரத ராமாயணைதிகளுக்கும் மேலாகவுண்டு.

24. இந்த தேவஸ்தானத்தில் தாதாசாரியர்கள் விசேஷமான திருப்பணிகள் செய்திருப் பதாக விவாத வரலாற்றுச்சுவடியில் எழுதப்பட்டிருக்கிறதல்லவா ? மேலே விவரித்த திருப் பணிகளே உண்மையில் இந்த தேவஸ்தானத்தில் தாதாசார்யர்கள் செய்தவை. நாம் தெரி விக்கும் எந்த விஷயமும் நியாயஸ்தான ரிகார்டுகளைக்கொண்டு மூதலிக்கக்கூடியதே என்பது மத்யஸ்தர்களின் மனத்தில் திடமாகப் பதிந்திருக்கும். தாதாசார்யர்களுக்கு சிஷ்யரென்று ப்ரஸித்தரானவிவர் ஸ்வாசார்ய குடும்பத்திற்குப் பெருமையை ரக்ஷித்து வைக்கவேணு மென்று பாடுபடுகிறார். அவர்களின் பெருமைகள் ஸ்ரீ பெரும்பூதூர், திருப்புட்குழி முத லான விடங்களில் நடந்த நீண்டகாலத்து வியாஜ்ஜியங்களிலேற்பட்ட ரிகார்டுகளிலுங்கூட குன்றத்திட்ட விளக்குப்போல் ப்ரகாசிக்குமவை.

25. ப்ரஸங்காத்முக்கியமான விஷயம் கேண்மின். கடைசியாக ஸ்ரீபெரும்பூதூர் ஜட்ஜ் மெண்டில்தான் தாதாசாரியர்களின் பிரபாவம் மிக விளங்கிற்று. அவ்விடத்தில் ஒருவித மான கலஹமுமில்லாமல் நடந்துவந்துகொண்டிருக்கையில் வெகுநாள் கழித்து வடகலையார் சண்டைகளைக் கிளப்ப அபரிமிதமான வியவஹாரங்கள் நடந்தன. ப்ரஹ்மஸ்ரீ V. கிருஷ்ண ஸாமி ஐயர் என்கிறவொரு பிரபல அட்வகேட் அங்கு வடகலையார்களுக்கு வக்கீலாக இருந் தார். அப்போது ஸ்ரீபெரும்பூதூர் வியாஜ்ஜியம் கடைசியாக ஹைகோர்ட்டில் இருந்தது.

acharya.org

அந்த ஸமயத்தில், மேலே சொன்ன வடகலையார் வக்கீலான ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்தானத்தில் அமர்ந்தார். அப்போது ஹைகோர்ட்டிலிருந்த ஸ்ரீபெரும்பூதூர் ஸன்னிதி வ்யவஹாரத்தின் அப்பீல் அந்த கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய பெஞ்சில் வந்தது. ஏற்கெனவே பல வருஷங்கள் வடகலையார்க்கு வக்கீலாயிருந்த இவருடைய பெஞ்சில் இந்த அப்பீல் நடக்கத்தகாதென்றும், இவரிடம் நடந்தால் நியாயம் தேறுதென்றும் தென்கலையார் ஆக்ஷேபிக்கத் தீவிரமான முயற்சி செய்தும் பலிக்கவில்லை. அவரே விசாரிப்பதாக கேஸை எடுத்துக்கொண்டார். வடகலையார் நமக்கே வெற்றியென்று நிச்சயித்து ஆனந்தமாயிருக்கிறார்கள்; தென்கலையார் கவிழ்தலையிட்டு வருந்திக்கிடக்கிறார்கள். ஜட்ஜ் கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் கேஸை யெடுத்துக் கொண்டு அன்றே அலம்பிக் கவிழ்த்து விட்டார். அவர் நெடுநாள் வடகலையார்களுக்கு வக்கீலாயிருந்தபடியால் எல்லா ரிகார்டுகளையும் ஒன்று விடாமல் முற்றிலும் பார்த்தவராகையாலே ப்ராமாணிகராய் மனச்சாட்சியை மீறமாட்டாமல் எழுதினர்—

"தாதாசார்ய குடும்பஸ்தர்கள் தங்களுக்குக் குலபரம்பரையாக வந்த ஸ்ரீசைலேச மந்த்ரத்தை விட்டு வடகலை மந்த்ரத்தை ஆதரிக்கத் தொடங்கினதுதான் இவ்வளவுக்கும் காரணம்; இதிலிருந்தே தாதாசாரியர்கள் தங்கள் கௌரவங்களை இழக்க நேர்ந்தது" என்று.

26. இந்த விஷயத்தை இதுகாறும் நாம் பல புத்தகங்களில் பல தடவை எழுதியிருக்கிறோம்? மேலே குறித்த வாசகம் போன்ற பலபல வாசகங்களை த்வீபாந்தரஸ்தர்களான பெரிய பெரிய ஜட்ஜிகள் திருமலை திருப்பதி ப்ரிவிகௌன்ஸில் தீர்ப்பு முதலியவைகளில் அபரிமிதமாக எழுதியிருந்தாலும் அதைவிட மேலே உதாஹரித்த ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயர் திருவாசகத்திற்கு மஹத்தான கௌரவமுண்டு. எதனால்? அவர் பத்தெட்டு வருஷகாலம் வடகலையார்களுக்கு அந்தரங்க வக்கீலாயிருந்து, அவர்களிடம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பெற்றிருந்து ரிகார்டுகளை எழுத்தெழுத்தாகப் பார்த்திருந்தவராகையாலே உள்ளதை உள்ளபடி தெரிந்து கொண்டு எழுதினர்; இது அவராகவா எழுதினது? தெய்வமன்றே எழுதுவித்தது. இதைக் கண்டுவைத்தும், அந்த தாதாசார்ய குடும்பஸ்தர்களுக்கு மணவாளமாமுனிகளின் திருவடிகளில் அபசாரபுத்தி இன்னமும் நீங்கவில்லை. அவர்களை ஆசார்யராகக் கொண்டவிவர்க்கு வேறுவகை எங்ஙனே வரும்?

நான்காமத்யாயம் முற்றிற்று.

ஐந்தாம் அத்யாயம்—நடாதூரம்மாள் கோஷ்டி.

27. இந்த தேவாலயத்தில் நடாதூரம்மாளென்னும் ஆசார்யர் ஸ்ரீபாஷ்ய ப்ரவசனம் நடத்தியருளினரென்பது ப்ரஸித்தம். அந்த ப்ரவசந கோஷ்டி நடந்தது எவ்விடத்திலென்னில், திருமலைக்கு ஏறும் போது படிக்கட்டு இரண்டு பத்தியாக இருக்கிறதல்லவா? எந்தபத்தியில் ஸத்ஸம்ப்ரதாயஸ்தர்களான மஹான்கள் அந்நாள் தொடங்கி இந்நாள்வரையில் அடியிடுவதில்லையோ அந்த பத்தியில்தான் நடந்தது. அது ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் நடந்த விடமென்கிற கௌரவம் தோற்ற அவ்விடத்தை நோக்கி அஞ்ஜலி செய்துவிட்டு மற்றொரு பத்தியின் வழியாகவே திருமலைக்கு ஏறுவதும் இறங்குவதும் தொன்றுதொட்டு நிகழும் வழக்கம். கோவில்க ளெல்லாம் அவைதிகங்களென்று பழித்துக்கொண்டு விலகியிருந்த வகுப்பினர்கள் காரணார்த்தமாகக் கோவிலில் பிரவேசிக்க ஆரம்பித்து தேசிக ஸம்பந்தத்தையும் ஆவாஹநம்

acharya.org

செய்துகொண்ட பிறகு அனேக விபர்யாஸங்கள் செய்யத் தலைப்பட்டு இந்த அம்மாள் கோஷ்டி விஷயத்திலும் ஒரு விபரீத ப்ரசாரம் செய்யத் தொடங்கினர்கள். ஹஸ்திகிரியின் மேலே வையமாளிகை ப்ரதக்ஷிணத்தில் அம்மாளுடைய ஸ்ரீபாஷ்யப்ரவசந கோஷ்டி நடந்ததாக ஒரு கல்பனை ஏற்பட்டது.

28. அவ்விடத்தில் இருந்து ப்ரவசநம் நடத்துவதற்கு ஒருவித ஸௌகர்யமும் கிடையாது; ஸர்வாத்மநா அஸௌகரியமே. ஒளிபரந்த கீழ்ப்படியில் நடந்த கோஷ்டியை மேலே இருட்டிடத்தில் நடந்ததாக ப்ரசாரம் செய்யத்தொடங்கினதற்குக் காரணம் — கீழே சித்திரமெழுதுவதற்கு ஸௌகரிய மில்லாமையும், மேலே அதற்கு ஸௌகரியமிருந்ததுமேயாம். திருமலையில் பெருமாளே ஸேவிக்கப் போகிறவர்களெல்லாரும் முதன் முதலாக அந்தபக்கம் திரும்பிச் சென்று நமஸ்கரிப்பது 900 வருஷத்திய வழக்கம். மணவாளமாமுனிகளருளிச் செய்த மங்களாசாஸனத்தில் "ஸ்ரீ காஞ்சீபூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபீபாஷிணே, அதீதார்ச்சா வ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்" என்றருளிச் செய்தபடி திருக்கச்சிநம்பிகளோடு அர்ச்சாவதார ஸமாதியைக்கடந்து கலந்து பரிமாறினவிடம் அது — என்பது பற்றியே அங்குள்ள கச்சிவாய்த்தான் திருமண்டபத்தை நோக்கிப் பெரியார்கள் நமஸ்கரிப்பது. அம்மாள் கோஷ்டி அவ்விடத்தில் நடந்த தென்பது அத்யந்த நவீநப்ரவாதம்.

29. * துஷ்யது ந்யாயேந அவ்விடத்திலேதான் அம்மாள் கோஷ்டியென்று இசைந்தாலும், ஸ்வாமிதேசிகனுக்கு அம்மாள் கோஷ்டியில் உண்மையாக நடந்த ஆசீர்வாதம் அவ்விடத்திலன்று என்பது நிர்விவாதமான விஷயம். தேசிக திவ்ய சரித்ரத்தைத் தெரிவிக்கும் நூல்களில் வேதாந்தாசார்ய விஜயமென்கிற ஆசார்ய சம்பூக்ரந்தம் தலைமை பெற்றது; மிகவும் ப்ராமாணிகமானது. அதில் மூன்றுவது ஸ்தபகத்தில் (பக்கம் 28ல்) ஆறுவது கத்யத்தில் "கூயு கஹாகி.....வாஜி ஹம்மவாளீஃ வாஹதெளிகவூ, மஹநம் வூ தவ்வே—ஒருநாள் கிடாம்பியப்புள்ளார் நடாதூரம்மாளுடைய திருமாளிகைக்குப் புறப்பட்டார்" என்றும், மூப்பத்தொன்பதாம் ச்லோகத்தில் "கூமாஹம் வாஹா யடவூ ஜமாஹாதெ ஜவெந தெள—அப்புள்ளாரும் (சிறுவயதினரான) தேசிகரும் அம்மாளுடைய திருமாளிகையைச் சேர்ந்தார்கள்" என்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாள் தேசிகனை ஆசீர்வதித்ததும் அதில் உடனே எழுதப்பட்டிருக்கிறது. இதனால் தேசிகர் அம்மாளுடைய ஆசீர்வாதம் பெற்றது அவருடைய திருமாளிகையிலேயேயல்லது ஹஸ்திகிரியின் மேலன்று என்பது ப்ரபல ப்ரமாணஸித்தமாயிற்று.

30. இவ்வுண்மையை நாம் தெரிவிப்பதற்குக் காரணம் தேசிகத்வேஷமென்று நவீனர்கள் நினைத்தாலும், சரித்ரத்தை உள்ளது உள்ளபடியே உணர்த்தவேணுமென்பது தவிர வேறில்லை. ஸ்ரீராமாநுஜர் ஹஸ்திகிரியில் எழுந்தருளியிருந்து ஸ்ரீ பாஷ்யமருளிச்செய்தாரென்று சிலர் எழுதினால் அதையும் நாம் கண்டிக்கத்தான் நேரும். அது ஸ்ரீராமாநுஜத்வேஷத்தினால் என்று யோக்யர்கள் சொல்லார்கள். அப்ராமாணிக கதைகளை யெழுதுவதனால் தேசிகபக்தி லித்திக்கமாட்டாது; அப்படிப்பட்ட தப்புக் கதைகளைக் கண்டிப்பதனால் தேசிகத்வேஷம் வந்துபுகாது.

31. விவாத வரலாற்றுச் சுவடியெழுதினவர் பெரும்பாலும் தவறான பொய்யான ஐதிஹ்யங்களையே எழுதக்கற்றவராதலாலும், அவற்றை ஒருகாலன்றிக்கே பலகாலுமெழுது

acharya.org

கிறவராதலாலும் மேலே ப்ரஸ்தாவித்த பொய்க்கதையை இதுவரை இவர் பலதடவை யெழுதி வெளியிட்டுள்ளார்; அப்போதப்போது மறுப்பும் வெளிவந்தேயிருக்கிறது. நேற்று கார்த்திகைமீ பரணி தீபத்தன்று இவர் வெளியிட்டவொரு சிறுபுத்தகத்திலும் இந்த பொய்க் கதையுள்ளது. அப்போதே அதே மாதத்திலேயே அம்ருதலஹரி 136ல் விரிவாக இது மறுக்கப்பட்டு முடிந்திருக்கிறது. அதை இவர் பார்த்ததற்கு ஒரு பலன் கண்டோம். அதாவது, ஷே பொய்க்கதையை இப்போது எழுதுகையில் "அம்மாள் தமது சிஷ்யர்களுக்கு ஸ்ரீ பாஷ்யத்தை இந்த ப்ராகாரத்தின் இந்தக் கிழக்கு பார்சுவத்தில்தான் காலக்ஷேபமாகச் சொல்லிக்கொண்டு வந்தாராம்" என்று எழுதியுள்ளார். 'வந்தாராம்' என்பதனால் இந்தக் கதையைக் கல்பனை செய்தவர் தாமல்லவென்று காட்டுகிறபடி.

ஐந்தாம் அத்யாயம் முற்றிற்று.

ஆரும் அத்யாயம். தேவஸ்தான நிர்வாஹ விஷயம்.

32. விவாத வரலாற்றுச் சுவடியில் (பக்கம் 17-ல்) கோயில்நிர்வாஹம் என்ற மகுடத்தின் கீழ் — இந்த தேவஸ்தானத்தில் தாதாசார்ய வம்சஸ்தர்களுக்கு நிர்வாஹகத்வம் ஏற்பட்ட விதமும் அதுகழிந்தவிதமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 1842-ஆம் வருஷத்திலிருந்து 1907-ஆம் வருஷம் வரை (65 வருஷகாலம்) தாதாசார்ய வம்சஸ்தர்கள் தர்மகர்த்தாக்களாக இருந்தார்களென்றும், பிறகு ஸ்கீம்ஸூட் போடப்பட்டு கோவில் ஒரு ரிஸீவர் வசம் ஒப்புவிக்கப்பட்டதென்றும், அப்போது ஒருவிதமான முடிவு ஏற்பட்டதென்றும், மறுபடியும் ஸ்கீம்வழக்கு தொடுக்கப்பட்டு தேவஸ்தானம் மீண்டும் மற்றொரு ரிஸீவரிடம் ஒப்புவிக்கப்பட்டதென்றும், 1941-ஆம் ஹு அந்த வழக்கு சென்னை ஹைகோர்ட்டில் முடிவுபெற்று வைஷ்ணவரல்லாத வொரு ப்ராமணர் நிர்வாஹ டிரஸ்டியாயிருக்கவேண்டு மென்று தீர்ந்ததென்றும், அது முதல் அவ்விதமாகவே நடந்து வருகிறதென்றும் வெகு சுருக்கமாக எழுதி முடிக்கப்பட்டிருக்கிறது.

33. தாதாசாரியர்களின் கதைகளைச் சிறிதும் தொடாமல் விட்டிருந்தால் மிகநன்றே. அதை ப்ரஸங்கித்துவிட்டு முக்கியமான சரித்ரங்களை மறைத்திட்டு மழப்பியெழுதிச் சுருக்கமாக முடித்துவிடுவதனால் உண்மைவிஷயங்கள் மறைந்து போகுமோ? ஒரு தடவைக்கு இரு தடவையாக தாதாசாரியர்களின்மேல் ஸ்கீம்ஸூட்டுகள் தொடர்ந்ததாகவும், தேவஸ்தானம் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டதாகவும், முடிவாக அறவேபறிக்கப்பட்டதாகவும் எழுதினவர் இதற்கு இன்னது காரண மென்று காட்டியிருக்க வேண்டியது அவசியமல்லவா? இந்த லிடிகேஷன்களில் அடியோடு தலையிடாமல் தடஸ்தராய் பகவத் ஸௌந்தர்ய லாவண்ய—மஹோதாஸ்வாத்யநுபவத்தளவிலே நின்றிருந்தால் மிகவழகியதேயாகும் 'தேவஸ்தான நிர்வாஹ விஷயத்திலே நாம் தலையிட்டடெழுதுவது அபாயம்' என்று தெரிந்துகொள்ளக் கூடியவராயிருந்தும், உண்மை விஷயங்கள் க்ரமேண வெளிவரட்டு மென்றே இதில் தலையிட்டுக் கோடிகாட்டிவிட்டார் போலும். ஸ்வாசார்ய குடும்பத்தின் ஊழல்களைத் தமது திருக்கையால் எப்படியெழுதுவர் பாவம்!

34. இவ்விடத்தைக் கொண்ட விஷயத்திலே நாம் ஸத்யமும் ஸாரமுமாக அவசியமான வற்றைத் தெரிவிக்கிறோம். புராதந தாதாசார்ய சரித்ரமென்றும் நூதந தாதாசார்ய சரித்ர

acharya.org

மென்றும் இருவகையான சரித்திரமுண்டு. அறுபத்தைந்தாவது வயதிலிருக்கும் என்னுடைய அநுபவத்திற்கு எட்டின சரித்திரங்கள் நூதந தாதாசார்ய சரித்திரமாகும். எனக்கு நேராகத் தெரியாமல் உண்மையான ரிகார்டுகளைக்கொண்டு தெரியவந்த சரித்திரங்கள் புராதந தாதாசார்ய சரித்ரமாகும். நூதந தாதாசார்ய சரித்ரத்தை முன்னம் எழுதுகிறேன். இந்த தேவஸ்தானத்தில் சிலகாலம் ஏகதேசமாக தர்மகர்த்ரு பதவியை வஹித்து வந்த தாதாசார்ய வம்சஸ்தர்கள் தர்ம பரிபாலனங்களை ஒழுங்குபாடாகச் செய்வதில்லையென்றும் அவர்களை விலக்கி நியாயம் செலுத்தவேண்டுமென்றும் சுமார் 45 வருஷங்களுக்கு முன் வியவஹாரம் (ஸ்கீம்கேஸ்) ஆரம்பமாயிற்று. இந்த ஸ்கீம்ஸூட் போட்டவர்கள் மூடி தேவஸ்தானத்தில் கைங்கர்ய பரர்கள் பலர் எனினும் தென்கலையார்களே முக்கியமாக நின்றார்கள். அப்போது தேவஸ்தான நிர்வாஹம் ஒரு ரிஸீவர் மூலமாக நடந்துவந்தது. நல்ல புகழ்பெற்ற தோணுங் குளம் ராமாநுஜாசாரியரென்பவரே அப்போது பல வருஷங்கள் ரிஸீவராயிருந்தவர். அந்த ஸ்கீம் வியாஜ்ஜியம் சென்னை ஹைகோர்ட்டாரவர்களால் ஒருவாறு முடிவு செய்யப்பட்டது, தாதாசார்ய வம்சஸ்தர்களில் ஐந்து பேர்கள் தர்மகர்த்தாக்களாயிருக்கவேண்டு மென்றும். ஒவ்வொரு வருஷத்தில் ஒவ்வொருவர் எக்ஸிக்யூடிவ் டிரஸ்டியாக இருந்து அதிகாரம் செலுத்தி வரவேண்டியதென்றும், இவர்கள் அநீதியாக நடந்துகொண்டால் அதைப் பரிசீலனை செய்து நியாயம் செலுத்துவதற்காக இவர்களுக்கு மேல் ஒரு ட்ரஸ்டு போர்டு இருக்கவேண்டிய தென்றும், அந்த டிரஸ்டு போர்டில் ஒரு தென்கலை ஸ்ரீ வைஷ்ணவர், (தாதாசார்யரல்லாத) ஒரு வடகலை ஸ்ரீ வைஷ்ணவர், ஸ்ரீ வைஷ்ணவரல்லாத ஒரு ப்ராஹ்மணர் ஆக மூவர் அதிகாரிகளாக இருந்து தணிக்கை செய்யவேண்டியதென்றும்; அவசியம் நேருங்காலங்களில் இந்த ஸ்கீமை மாறுதல் (மாடிபிகேஷன்) செய்யலாமென்றும் முடிக்கப்பட்டது. அவ்விதமாகவே சுமார் இருபது வருஷகாலம் நடந்து வந்தது.

35. அதிலும் தரும நிர்வாஹங்கள் மிகவும் சீர்கேடாகவேயிருந்ததனால் ஸ்கீம் மாடிபி கேஷன் செய்யப்பட வேணுமென்று மறுபடியும் தென்கலை ஸம்ப்ரதாயஸ்தர்களால் வியாஜ் ஜியம் தொடுக்கப்பட்டது. அப்போதும் ஐந்தாறு வருஷ காலம் மூடி தாதாசார்ய வம்சஸ்த தர்மகர்த்தாக்கள் விலக்கப்பட்டு ஸ்மார்த்த ப்ராஹ்மணரொருவர் ரெஸீவராக ஜில்லா கோர்ட் டாரால் நியமிக்கப்பெற்று தேவஸ்தான பரிபாலனம் நடந்து வந்தது. அந்த வியவஹார மானது விசேஷபலனைப் பெறுவியாமலே முடிந்திட்டதனால் மறுபடியும் மூடி தாதாசார்ய வம்சஸ்தர்களே ஐந்து பேர்கள் தர்மகர்த்தர்களாக இருந்துவர நேர்ந்தது. வாதிகளான தென்கலையார்களால் சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளப்பட்டிருந்தது. அந்த அப்பீல் 17—1—1941 தேதியில் கனம் ஜட்ஜ் வார்ட்ஸ்வொர்த் துரையவர்களாலும் ப்ரஹ்மஸ்ரீ. கனம் ஜட்ஜ் பதஞ்சலிசாஸ்திரியவர்களாலும் பரிஷ்காரமாக முடிவு செய்யப் பட்டது. இந்த முடிவின் ஸாராம்சங்களை மேலே விளக்கிக் காட்டுகிறோம். (இடையில்)

36. மூடி தாதாசாரியர்களுக்குண்டான இந்த தர்மகர்த்ருத்வஹக்கானது பரம்பரை மிராசா ? அன்ரு ? என்கிற ஒரு வியாஜ்ஜியமும் தனிப்பட நடந்தது. பரம்பரை மிராசுதான் என்று முன்னம் ஜில்லாகோர்ட்டில் முடிந்திருந்தது. அதன் பேரில் தென்கலையார் ஹை கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள, பரம்பரை மிராசு அல்ல என்று தீர்மானிக்கப்பட்டுக் கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பு வலிதாக மறுக்கப்பட்டது.

acharya.org

37. கடைசியான முடிவு என்னவென்றால் ; "ஸ்ரீ வைஷ்ணவரல்லாத ஒரு ப்ராஞ்ச் மணர் (ஸ்மார்த்தர் அல்லது மாத்வர்) ஸர்வாதிகார ஸம்பந்தரான மேனேஜிங் டிரஸ்டியாக நூறு ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப்படவேண்டும். தேவஸ்தான ஸம்பந்தமான லௌகிக வைதிக ஸகல அதிகாரங்களும் அவரொருவர்க்கே அதீனம். தாதாசார்ய வம்சஸ்தர்களில் கீழண்டை வகுப்பிலும் மேலண்டை வகுப்பிலுமாக இரண்டு பேர்கள் ஒருவிதமான அதிகாரமுமின்றிக்கே நாமமாத்ரமான (ஹானரரி) டிரஸ்டிகளாக இருக்கவேண்டியது. மேனேஜிங் டிரஸ்டியின் நடவடிக்கைகளின் மீது தணிக்கை பார்க்கவேண்டிய அதிகாரம் முழுவதும் ரிலிஜியஸ் எண்டோமெண்டு போர்டைச் சேர்ந்தது. ஷெட்ஸ்கீம் கேஸ் அப்பீல் வாதிகளான ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரியர் ஆகிய அடியேன் முதலான ஏழு தென்கலையார்களுக்கு கோர்ட்டு காஸ்டு சுமார் ரூ. 450 வரையில் தேவஸ்தானத்திலிருந்து செலுத்தவேண்டியது" என்பது தீர்ப்பின் ஸாராம்சம். இது இப்படியே நிறைவேற்றப்பட்டது.

38. ஷெட் தீர்ப்பை கோர்ட்டார் வெளியிட்டவளவில் அப்போது தர்மகர்த்தாக்களாக இருந்து வந்த தாதாசாரியர்கள் "நாளது வைகாசி மாதத்தில் நடைபெற வேண்டிய ப்ரஹ்மோத்ஸவம் வரையில் நாங்களே யிருந்து அநுபவித்துவிட்டு உடனே விலகிப் போய் விடுகிறோம் ; கோர்ட்டார் தயவு செய்து அந்தப்படிக்கு உத்தரவு அளிக்கவேணும்" என்று கேட்டுக்கொண்டார்கள். அதைக் கோர்ட்டார் சிறிதும் அநுமதிக்கவில்லை. "நாளது மார்ச்சு மாதம் 17உக்குள் இந்த ஆர்டர் ஆசாரத்திற்கு வரவேண்டியது அவசியம்" என்று முடிவு செய்திட்டார்கள். அப்படியே அன்று முதலாகவே ஆசாரத்திற்கு வந்து விட்டது.

39. பகவத் ஸந்நிதிகளில் தர்மகர்த்தாக்கள் என்கிற பதவி கிடைப்பது ஸாமான்யமல்ல; ஜன்மாந்தர ஸஹஸ்ரநற்றவப்பயன் என்னவேணும். அப்படி அலப்ய லாபமான பதவியைப்பெற்றவர்கள் உண்மையில் தர்மகர்த்தாக்களாகவே இருந்து வந்தால் ஒரு பங்கமுமடையாமல் நீடூழி வாழ்வர்களென்பதில் ஐயமில்லை. தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டு வந்து சேர்ந்த அன்றைக்கே தர்மஹர்த்தாக்களாகத் துணியுமவர்களைப் பற்றி நாம் தெரிவிக்க வேண்டியது என்ன இருக்கிறது ? இந்த தேவஸ்தானமானது பலவகையிலும் ப்ரஸித்தி பெற்றது. இதற்கு நிகரான திவ்ய தேசம் வேறொன்றில்லை. இப்படிப்பட்ட திவ்ய தேசத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஆலயங்களுக்கு உரிய லக்ஷணங்கள் நெடுநாளாக மிகவும் பங்கமடைந்திருந்தன. ஆழ்வார்களுக்குத் திருநக்ஷத்திரங்கள் கொண்டாடுவதும், பகல் பத்து, இராப் பத்து என்கிற அத்யயனோத்ஸவத்தை விபவமாக நடத்துவதும் முதலியவை விஷ்ணு வாலயங்களுக்கு விசேஷ லக்ஷணங்கள் என்பது நாம் சொல்லவேண்டுமோ ? ஆழ்வார்கள் இருக்குமிடம் தெரியாமல் மூலையிலொடுக்கிவைத்திட்டு, அவர்களுடைய ஸந்நிதிகளின் வாசல்களில் மண் சுவரெழுப்பி முள்ளடைத்து.....இப்படியாகச் செய்து வைத்திருந்தார்கள் முன்னே யிருந்த டிரஸ்டிகள். கோஷ்டியின் பெருமைகளோ, ஆழ்வாராசார்யோத்ஸவ பரிபாலன வைபவங்களோ எல்லாம் தென்கலை வகுப்பினருடையதாகவே யிருக்கின்றனவென்கிற நிர்வேதத்தினால் தேவாலய லக்ஷணங்களையெல்லாம் சீர்குலைத்து நடத்தி வந்தார்கள். மணவாளமாமுனிகளில்லாமல் அத்யயனோத்ஸவம் நடத்தக்கூடாதென்கிற நியாயாலயத்தீர்ப்பு வலிதாக இருந்ததனாலே அறுபதெழுபது வருஷ காலம் அத்யயனோத்ஸவத்தையே அடியோடு அடக்கியிருந்தார்கள். இப்படிப்பட்ட கில்விஷமங்கள் பன்னியுரைக்குங்கால் பாரதமாம்.

acharya.org

40. ஆதியில் தாதாசார்யவம்சத்தவர்களுக்கு ஏற்பட்ட பெருமைகளெல்லாம் மணவாள மாமுனிகளிடத்தில் பக்தி ஸ்பத்தினாலேயே என்பது பிஷ்டபேஷணம். என்றைக்கு இவர்கள் மணவாள மாமுனிகளிடத்தில் பகை கொண்டு நடக்க ஆரம்பித்தார்களோ அன்றைக்கே இவர்களுடைய ஸ்ரீ க்ஷயிக்கத் தொடங்கிற்று. ஸ்ரீ பெரும்பூதூர் எம்பெருமானார் ஸந்நிதியில் இவர்களுக்கு எப்படிப்பட்ட மரியாதைகள் இருந்தன! காஞ்சீ க்ஷேத்ரத்து ஸகல தேவாலயங்களிலும் எப்படிப்பட்ட மரியாதைகள் இருந்தன! அந்தோ! எல்லாம் மழிந்தன. இதற்கு என்னகாரணமென்பது இவர்களுக்குத் தெரியாமலா இருக்கிறது? எல்லாம் ரிகார்டுகளிலன்றோ ஏறிவிளங்குகின்றது. இதர ஸன்னிதிகளில் இவர்களுக்கு தர்மகர்த்த ஹக்கு இல்லாமல் போனாலும் ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தொடங்கி அதற்கு மரியாதையாக முதல்தீர்த்தமநுபவிக்கிறமிராசு இருந்தது. தொடங்குவதில் விபரீதம் செய்து மரியாதைகளை இழந்தார்கள். அதற்குப்ரதிக்ரியை பண்ணமாட்டாமல் தங்களுக்கு தர்மகர்த்த ஹோதாவுள்ள இந்த தேவஸ்தானத்தில் தென்கலையார்களுடைய தீர்த்தமரியாதைகளையெல்லாம் நிறுத்தினார்கள். ஒவ்வொரு தீர்த்தகாரரும் வியாஜ்ஜியமாடி ஸ்தாபித்துக்கொண்டார்கள். தென்கலையான சாத்துப்படி மிராசுதாரரை விலக்கினார்கள்; அவரும் வியாஜ்ஜியமாடி ஸ்தாபித்துக்கொண்டார். இப்படிப்பட்ட விஷயங்கள் பல பல. வடகலை நாமம் போட்டுக்கொண்டால்தான் உங்கள் மிராசுகளை யநுபவிக்கலாமென்று சில மிராசுதாரர்களை நிர்ப்பந்தித்தார்கள்; அதற்கு முதலியார்கள் கணக்குப் பிள்ளைகள் முதலானார் சிலர் இசைந்தார்கள். ஆழ்வார் ஸன்னிதிக்காரரையும் இப்படி நிர்பந்தித்தார்கள்; இசையாமற்போகவே பட்டம் பகலில் பகற்கொள்ளைக் காரர்களைப்போல் வாயில் துணியையடைத்து ஹிம்ஸைகளைப் பண்ணி மூன்று கோர்ட்டுவரை இதற்காக வியாஜ்ஜியம் நடந்து வாசாமகோசரமாக பங்கமடைந்தார்கள். இப்படிப்பட்ட தப்புவியாஜ்ஜியங்களை அநாவச்யகமாகக் கிளப்பி, அவற்றுக்குச் செலவுசெய்ய தேவஸ்தானப் பணம் அப்போது இவர்களுக்கு ஸ்வாதீனமாயிருந்தபடியால் அந்தப்பணத்திற்கு இப்படிப்பட்ட விநியோகங்களே செய்துவந்தார்கள்.

41. இந்தப்பெருமைகளெல்லாம் அட்வகேட்டின் வரலாற்று நூலில் விளங்கவேண்டியது அவசியமல்லவா? இன்னமும் கேண்மின்; 1842-ஆம் வருஷத்தில் தாதாசாரியர்கள் இந்த தேவஸ்தான நிர்வாஹத்தை ஒப்புக்கொண்டபின் இரண்டு மூன்று வருஷகாலம் ஸாத்விகர்களாயிருந்தார்கள் போலும். பிறகு முதற்காரியம் ஆழ்வார்களின் ஸன்னிதிகளையெல்லாம் பாழ்படுத்தியது. அதற்கடுத்த காரியம் நம்மாழ்வார் ஸன்னிதிக்காரர்களோடு வியாஜ்ஜியம் தொடங்கியது. [அது 1850-ஆம் வருஷத்தில்.] அதுதான் தாதாசாரியர்கள் ஆரம்பித்த முதன் முதலான வியாஜ்ஜியம். "ஆழ்வாரைத் தொட்டுத் திருவாராதனம் செய்ய உங்களுக்கு அதிகாரமில்லை; நீங்கள் வெறும் பரிசாரகர்களே யொழிய அர்ச்சகர்களல்ல; தேவஸ்தான அர்ச்சகர்களே அங்கும் பூஜை செய்ய வேண்டும்" என்று வியாஜ்ஜியம் தொடங்கி ஆழ்வார் ஸன்னிதி திட்டங்களையெல்லாம் நிறுத்தி மூன்று கோர்ட்டு வரை நீண்டகாலம் வழக்காடித் தோல்வியடைந்து நின்றார்கள்.

42. பிறகு பல வருஷங்கள் கழித்து, அந்த ஆழ்வார் ஸன்னிதிக்காரர்களுள் ஒருவரான (Late) திருமணி ராகவாசாரிய ரென்பவரை வதம் செய்வதாகவும் துணிந்து, யாரேனுக்கு மதம் பிடித்திருப்பதாக ஒரு பொய்யான ப்ரவாதத்தைக் கிளப்பி இரண்டு கோபுரவாசற்கதவுகளையும் பகலிலேயே அடைத்து, அந்த ராகவாசாரியர் ஆழ்வாருக்குக் காலைத்

acharya.org

திருவாராதனம் செய்து கொண்டிருக்கையில் அவரை வெளியில்தள்ளிக் கைகால்களைக்கட்டி வாயிலும் துணியையடைத்து ஆழ்வார் மதுரகவிகள் நாத முனிகள் மூவரையும் திருமலைமேல் கொண்டு சேர்த்துத் திருமணி மாற்றுவதாக இருக்கையில் போலீஸ் ப்ருந்தம் நூற்றுக்கணக்காக மலைமேல் வந்து சேர்ந்து பிறகு க்ரிமினல் கோர்ட்டுகளிலும் ஸிவில் கோர்ட்டுகளிலும் நடந்த நடவடிக்கைகள் பாரத ராமாயணதிகளைப் போலே அச்சாகி யிருக்கின்றன வென்பதை உலகமறியும். இவற்றில் இவர்களுக்கு நேர்ந்த பராஜயங்கள் பேச்சுக்குநிலமன்று.

ஆரும் அத்யாயம் முற்றிற்று.

ஏழாமத்யாயம்—தாதாசாரியர்களின் அத்புத சரித்ரங்கள்.

43. இந்த தேவஸ்தானத்தில் ஒரு நூறுவருஷகாலம் ஏகதேசமாக தர்மகர்த்தம் பார்த்துவந்த தாதாசாரிய குடும்பஸ்தர்கள் அதிகாரத்திலிருந்து அறவே நீக்கப்பட்டது ஹைகோர்ட்டு அதிகாரிகளாலென்று உலகம் நினைத்திருக்கிறது; நாமும் அவ்விதமாகவே எழுதினோம். ஆனால் உள்ளபடி சொல்லுமளவில், மணவாளமாமுனிகளே நீக்கிவைத்தாரென்பது ஸத்யம். *யத் நக்ஷத்ரம் யஜ்ஞவதி தத்தஸ்ய காரணம்*—யதநந்தரம் யத்பவதி தத் தஸ்ய காரணம்* என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் கூறுவர்கள். அதன்படி பார்த்தால் நாம் தெரிவிக்கின்ற உண்மை ஒவ்வொருவருடைய வுள்ளத்திலும் நன்கு பதியும். இவர்கள் தர்ம கர்த்ரு பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு நெருங்கின முன்னுட்களில் நடந்த இவர்களது நடத்தைகளைச் சுருக்கமாக நிரூபிப்போம். உலமறிந்தவற்றையே இப்போது நினைப்பூட்டுகிறோமத்தனை.

44. கனம் ஹைகோர்ட்டு ஜட்ஜ் (Late) ஸ்ரீ. ஸுந்தரமையரவர்கள் ஒரு வருஷத்தில் ஐப்பசி மாதத்தில் ஏதோ கார்யவசமாகக் காஞ்சீபுரம் வந்திருந்து அன்றிரவு 7-மணிக்குத் தேவப்பெருமாளை ஸேவிக்க வந்திருந்தார். உபயகஸ்தர்களும் அவரை வரவேற்று உபசாரங்கள் செய்து பெருமாள் தாயார் ஸேவைகளைச் சிறப்பாகச் செய்வித்தார்கள். அவரும் ஆனந்தமாக ஸேவித்துத் திரும்புகையில், அப்போது மணவாளமாமுனிகளுத்ஸவம் நடந்து கொண்டிருந்தபடியால் வெளிப்புறப்பாட்டுக்காக அதிர்வெடிபோட, அதுகேட்ட ஜட்ஜ் அவர்கள் என்னவிசேஷமிப்போது? என்றுகேட்க, மணவாளமாமுனிகளுத்ஸவம் நடந்து கொண்டிருக்கிறது; வெளியில் பந்தலில் பத்தியுலாத்தப் புறப்பாடு ஆரம்பமாகிறது; அதற்காக அதிர்வெடி" என்று சொல்லிவிட்டு "தாங்களும் அங்கே ஐந்து நிமிஷம் விஜயம்செய்தால் நன்றுயிருக்கும்" என்று தென்கலைத்தலைவர்கள் சொல்ல, அவரும் "அதற்கென்ன? அவசியம் வருகிறேன்" என்று சொல்லி பெருந்திரளுடனே மணவாளமாமுனிகள் ஸன்னிதி பக்கமாகத் திரும்பினவாறே அப்போது தேவஸ்தானத்தில் தர்மகர்த்தாவாயிருந்த பெருங்கட்டூர் குமார தாதாசாரியரென்பவர் அப்பெருங் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு முன்னே ஓடிவந்து ஸத்யோவைதவ்யமடைந்தவளைப்போல் சரேலென்று நிலத்தில் விழுத்து வாயிலும் வயிற்றிலுமடித்துக்கொண்டு "ஐயோ! தங்களை சாகடிபோடுவதற்கென்றே இன்று புதிதாக இந்த புறப்பாட்டை ஆரம்பிக்கின்றார்கள், நீங்கள் அங்கே சென்றால் ப்ரேதங்கள் விழுகிற வேடிக்கையைத்தான் பார்க்கவேண்டும்" என்று கத்தினர். ஜட்ஜ் அவர்கள் திகைத்துப்போய் உடனே திரும்பிப்போய்விட்டார். அந்த குமாரதாதாசாரியருடைய சாதுர்யத்தை வடகலையார்கள் மிகவும் மெச்சி உடனே அவரைத் தேவப்பெருமாளிடம் கொண்டுபோய் மாலை மரியாதைகள் செய்வித்து பேஷ்! பேஷ்! என்று குலைமடித்தார்கள். பிறகு அந்த குமாரதாதாசாரியருக்கு நேர்ந்த கதியைக்கேளுங்கள். இரண்டுமூன்று மாதங்களுக்குள்ளே உடலெல்லாம் புழுத்து

acharya.org

நடமாட்டமுமிழந்திருந்து துன்பக்கடலுள் துவண்டு இப்படி நாலைந்துவருஷம் யாதனைகள் பட்டு, சரமகாலத்திலே வேஷ்டியால் ஏணைகட்டி அதிலே தன்னைக் கொண்டுபோய் திருமலையிலே பெரியபெருமாளைத் தாம் ஸேவிக்கும்படி செய்விக்கவேணுமென்று சிலரை வேண்டிக்கொண்டு அப்படியே ஏணையிலே தூக்கிக்கொண்டுபோகப்பட்டு, திருமலையிலே சேவித்துத் திரும்புகையில் ஆழ்வார் திருவீதிவலமாக அந்த ஏணையைக்கொண்டுபோகச் சொல்லி மணவாளமாமுனிகள் ஸன்னிதிவாசல்வந்தவாறே அங்கு இறக்கச் சொல்லி "ஸ்வாமிந்! முன்பு திருப்புட்குழி ஸ்வாமியின் அபசாரங்களை க்ஷமித்தருளினதுபோல அடியேனுடைய அபசாரங்களையும் க்ஷமித்தருளவேணும்" என்று கதறிக்கதறிக் கத்திக்கத்தியழுது க்ருஹம் வந்துசேர்ந்து அன்று மாலையே பரலோகம் சென்று சேர்ந்தாரென்பது ஜகத்ப்ரஸித்தம். [இங்கே திருப்புட்குழி ஸ்வாமிப்ரஸ்தாவம் வந்திருக்கிறது; அந்த விஷயம் மேலே விளங்கும்.]

45. மேல்பாக்கம் குமாரதாதாசாரியாரென்பவர் ஸ்வல்பகாலம் தர்மகர்த்த நடனமாடினார். பதவிக்கு வந்தவுடனே தென்கலையார்களை வரவழைத்து "உங்களில் நாலாயிர அத்யாபகர்கள் எத்தனை பேர்கள்? சிலசிலபாகம் தெரிந்த அத்யாபர்கள் எத்தனை பேர்கள்? எல்லாம் விலேவாரியாக எழுதிக் கொடுத்துவிட்டே கைங்கர்யம் பார்க்கவேணும்" என்று சில அட்டஹாஸங்கள் செய்தார். அடுத்தவாரத்தில் கைசிகத்வாதசி ப்ராப்தமாக, அன்று அந்த குமாரதாதாசார் புராணம் வாசிப்பதாக வந்து பரிவட்டங்கட்டிக்கொண்டு கோலப்படி பக்கத்திலேயே போலீஸ் பந்தோபஸ்துடன் பகல் 12 மணி வரை நாற்றிசையும் நோக்கி விழித்திருந்து பரிவட்டத்தைத் தாமே களைந்து கொடுத்துவிட்டு வீடு சேர்ந்து ட்ரஸ்டி பதவிக்கு ராஜிநாமா கொடுத்துவிட்டு அன்றிரவே சென்னைமாநகர் போய்ச் சேர்ந்து நாளடைவில் அங்கிருந்தே பெரியபரஞ்சோதி புக்கார்.

46. சாமா திருமலை தாதாசாரிய ரென்பவர் மணவாளமாமுனிகளையும் அவரடியார்களையும் வாசாமகோசரமாக நிந்தித்து ஸ்ரீவசனபூஷணச் சீர்கேடு முதலான அபத்த பஞ்சாங்கங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்; அதே ஸமயத்தில் தர்மகர்த்த பதவிக்கும் பிரபலமுயற்சி செய்து நிற்க, "இந்த ஸ்தானத்திற்கு இவர் வந்தால் கோவிலே குட்டிச்சுவராய் விடும்" என்று தாயாதிகளே வெளிப்படையாகவந்து ஆக்ஷேபிக்கும்படியாகி அந்த பதவி கிடைக்காததோடு பலவகைப்பட்ட பங்கங்களையடைந்து பரிதாபநிலைகளையெய்தி முடிந்தார்.

47. பூந்தி தாதாசாரி யென்பவர் சில நாட்கள் தர்மகர்த்தக் கூத்தாடினார்; அப்போது அவர் சாவுதீட்டுடனே மணவாளமாமுனிகள் ஸன்னிதியிலேவந்து, மாமுனிகளின் திருமுற்றப்பந்தல் பத்திபுலாத்தல் ஸமயத்தில் தண்டைப்பிடித்துத் தள்ளிச் சில அதர்க்கண சேஷ்டைகள் செய்ய "தெய்வம் நின்றுகொல்லும்" என்கிற பழமொழியும் பழுதாகி அடுத்த நாளிலேயே அவர் "வானை மறிகடலோ மாருதமோ தீயகமோ கானை வொருங்கிற்று" என்ன வேண்டும் படியான சோசநீயஸ்திதிகளை யடைந்த சரிதைகளை ஒருவரும் மறந்திருக்க முடியாது.

48. சோணன்தாதாசாரிய ரென்பவரும் சிலகாலம் தர்மகர்த்த நடத்தினார். ஒருவருஷம் வைசாகோத்ஸவத்தில் த்வாதசாராதனத்தினன்று திருவபிஷேக மண்டபத்தின்கீழ் இருநூறு ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்து திருவாய்மொழி ஸேவித்துக் கொண்டிருக்கிறார்கள். பெருமாளுக்கு அலங்காரமாகி த்வாதசாராதனம் நடைபெறவேணும். திருத்திரை சேர்த்

acharya.org

திருக்கிறது. "இன்று த்வாதசாராதனமும் கிடையாது, த்ரயோதசாராதனமும் கிடையாது; பெருமாளைக் கண்ணுடியறையிலேயிட்டுக் கதவைப்பூட்டும்" என்று மணியகாரருக்கும் அர்ச்சகபரிசாரகர்களுக்கும் கட்டளையிட்டார் ஷை சோணன் தர்மஹர்த்தா. பெருமாள் உள்ளே போய்ச் சேர்ந்துவிட்டார். பிறகு நடந்த வியாஜ்ஜியத்தில் 200 ரூ. (இருநூறு) அபராதம் செலுத்தவேணுமென்றும் இதை தேவஸ்தானப்பணத்திலிருந்து செலுத்தாமல் கைவிட்டுக் கட்டவேணு மென்றும் கட்டளையாயிற்று. பிக்ஷாடனம்பண்ணிக் கட்டிவிட்டு விலகினார். இந்த தாதாசாரியரே மணவாளமாமுனிகள் ஸன்னிதியில் பந்தல் போடுவதை ஆக்ஷேபித்தும் பலவாயிரக் கணக்கான ரூபாய்களை தேவஸ்தானத்திலிருந்து அநியாயச் செலவு செய்து மூன்று கோர்ட்டுவரை வழக்காடித் தோற்றழிந்தார்.

49. இந்த தாதாசாரியர்கள் தேவஸ்தானப்பணத்தை இவ்விதமாக அநியாயச் செலவுகள் செய்ததைக் கணக்கிட்டால், உண்மையில் இந்த தேவஸ்தானம்போல் இரண்டு மூன்று தேவாலயங்கள் கட்டுவதற்குப் போதுமான பணம் செலவாகியிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. பலர்க்கோ சிலர்க்கோ பாபப்ராசுர்யத்தாலே பெற்றதாயினிடத்திலேயே நிஷ்காரணமான பகையுண்டாவது போல, இவர்களுக்கு மணவாளமாமுனிகளிடத்திலே பகை தோன்றியதுதான் ஆச்சரியம். மாமுனிகளின் உத்ஸவத் திருமேனியைக் களவாடிப் பொற்முமரையிலே பலகாலம் எழுந்தருளப்பண்ணிவைத்த மஹானுபாவர்கள் இவர்கள். இந்த தேவாலயத்தில் அநந்த புஷ்கரிணியொன்றே புண்யதீர்த்தமென்றும், பின்புறத்திலிருக்கிற பொற்முமரைக்குளம் சில நூற்முண்டுகட்கு முன்னம் தோண்டப்பட்டதாகையாலே அது ஸாதாரண தடாகமென்றும் எண்ணியிருந்தோம். அதையும் புண்ய தீர்த்தமாக அட்வகேட் எழுதியிருப்பது எதனாலேயென்று ஆலோசித்தோம். தன்னுடைய ஆசார்ய குடும்பம் மணவாளமாமுனிகளைப் பலகாலம் இந்த தடாகத்திலே எழுந்தருளப்பண்ணிவைத்ததனால் இதையும் புண்யதீர்த்தமாகப் பரிகணநம் செய்தாரென்று தத்துவமுணர்ந்தோம்.

50. இவர்களில் தலைவராக எழுந்தருளியிருந்த திருப்புட்குழிபப்ரஹ்மாமியே இப்படிப்பட்ட அதிமானுஷ சேஷ்டிதங்களுக்கு ப்ரவர்த்தகராக விளங்கியருளினாராம். நியாயாலயத்தில் சென்று "இந்த தேவஸ்தானத்தில் மணவாளமாமுனிகள் மூலவிக்ரஹம் மாத்திரமுண்டேயல்லது உத்ஸவ விக்ரஹம் கிடையாதென்று அகோரப்ரமாணம் பண்ணுவேன்" என்று அதிகாரிகள் முன்னிலையில் நாற்காலியில் வீற்றிருந்து திருவாய்மலர்ந்தருளினாராம். பெரும்புளுகரிவரென்று அதிகாரிகளால் அறுதியிடப்பட்டு அவஜ்ஞையுடன் க்ருஹம் திரும்பின மஹான் அவர். அகோரப்ரமாணசார்யரென்றே விருது பெற்றிருந்தார். மணவாளமாமுனிகள் விஜயஸ்ரீயுடன் நியாயஸ்தானத்திலிருந்து யதாஸ்தானமெழுந்தருளின பின்பு இந்த திருப்புட்குழி ஸ்வாமி [விவேகியாகையாலே] மாமுனிகளின் ஸன்னிதிக்குவந்து ஸேவித்தருள ப்ரணமமென்று சொல்லிக்கொண்டு பன்னிரண்டுமுறை நமஸ்கரித்து புநஃபுநஃ க்ஷமித்தருள வேணுமென்று அஞ்ஜலிமுத்ரையுடன் விஜ்ஞாபித்து மீண்டனராம்.

51. ப்ரக்ருதவிஷயத்தை நிகமனம் செய்கிறேம். தேவப்பெருமாள் ஸன்னிதியை ஆண்டுவந்த பழைய டிரஸ்டிகள் ஷை ஸன்னிதியில் மணவாள மாமுனிகளுக்கும் மற்றுமுள்ள ஆழ்வாராசாரியர்களுக்கும் இழைத்த தீங்குகள் உண்மையாகவே ராமாயணமும் பாரதமும் போன்றது. அவை பல புத்தகங்கள் மூலமாக வெளிவந்துமிருக்கின்றன. கோர்ட்டு கிகார்டுகளிலும் ஏறிக்கிடக்கின்றன. அப்படிப்பட்ட தீங்குகள் அற்முழிய

acharya.org

வேணுமென்றே இந்த தேவஸ்தானத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களல்லாத பிராமணர்கள் அதிகாரம் செலுத்தும் டிரஸ்டியாக நியமிக்கப்பட்டார்கள். 17—3—41 தேதி முதலாக மேலேகுறித்த பிராமணர்களின் அதிகாரத்திலேயே இந்த தேவஸ்தான நிர்வாஹம் நடைபெற்று வருகின்றது. ஆழ்வாராசார்யர்களின் திருநக்ஷத்திரோத்ஸவ பரிபாலனங்களும் அத்யயநோத்ஸவமும் மணவாளமாமுனிகளின் திருநக்ஷத்ரோத்ஸவமும் இந்த தேவஸ்தானத்தில் பல வருஷங்களாகவே நிறுத்தப்பட்டு அதுவே ஒரு மாமூலாக வந்திருந்தபடியால் மத்யஸ்தர்களான புது டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டுங்கூட அநாதி மாமூல்படி உத்ஸவாதிகளை நடத்துவிக்க ஸௌகரியமில்லாமற் போகவே அவைகளுக்காகவும் தனி வியாஜ்ஜியங்கள் நடத்தி அநாதி மாமூல்கள் அநேகமாகப் புதுப்பிக்கப்பட்டன; அவை பத்து வருஷ காலமாகவே ஒழுங்காக நடந்து வருகின்றன. அவை நடக்க ஆரம்பித்தபிறகுதான் இந்த தேவஸ்தானத்தை விஷ்ணுவாலயமென்று சிறப்பித்துச் சொல்ல அவகாசமுண்டாயிற்று. ப்ரஹ்மஸ்ரீ S. நரஸிம்ஹய்யரவர்களென்பவர் இவ்வாலயத்தில் 4, 5 வருஷங்கள் எக்ஸிகியூடிவ் டிரஸ்டியாயிருந்து நல்ல புகழ் பெற்றார். ஒருதலைக்கு வசப்பட்டிருத்தல் முதலான தீயகுணங்கள் அவரிடம் இடம்பெறுமலிருந்தன. ஸகல பக்தர்களும் அவரையே அடிக்கடி நினைக்கிறார்கள்.

ஏழாமத்யாயம் முற்றிற்று.

எட்டாமத்யாயம்—இந்த தேவஸ்தானத்தின் தென்கலையாசாரங்கள்.

52. இந்த தேவஸ்தானம் வடகலை சம்ப்ரதாயத்தைச் சேர்ந்ததென்று சிறிதும் கூசாமல் (பக்கம் 25ல்) எழுதப்பட்டிருக்கிறது. ப்ரத்யக்ஷமாகக் காண்கிற பலபலசெய்திகளினால் இந்த தேவஸ்தானம் தென்கலை ஸம்ப்ரதாயமே யென்பது சிறுவர்களும் நன்கு தெரிந்து கொள்ளும்படி மூதலிக்கப்படுகிறது. திருமண்காப்பு விஷயமாக மேலே விரிவாக எழுதப்படும். மற்றபடி கோவில் ஆசாரங்களெல்லாம் தென்கலை ஸம்பிரதாயத்திற்கே ஆதிக்யமளிப்பவை யென்பதை மத்யஸ்தர்கள் மதிக்க நிரூபிக்கிறோம். ஸ்ரீராமநவமி, ஸ்ரீக்ருஷ்ணஜயந்தி என்னுமிவை சாஸ்த்ரவித்தங்களான மிகச்சிறந்த விரதங்கள். இதில் தென்கலைபார்க்கும் வடகலையார்க்கும் அனுஷ்டானபேதமிருப்பது ஜகத்ப்ரஸித்தம். ஸ்ரீராமநவமியை யனுஷ்டிப்பதில் மாஸமே வேறுபடுகிறது. ஸ்ரீ ஜயந்தியை யநுஷ்டிப்பதில் மாதம் ஒத்திருந்தாலும் நாள் வேறுபடுகிறது. [அநேக வருஷங்களுக்கு ஒரு முறைதான் மிகவும் அபூர்வமாக நாள் ஒத்தவரும்; நிகழும் மன்மத வருஷத்தில் அப்படி வருகிறது.] ஆக, ஸ்ரீராமநவமியும் ஸ்ரீஜயந்தியும் இந்த தேவஸ்தானத்தில் தென்கலையாருடைய அனுஷ்டானப்படி அநாதிகாலமாக நடந்துவருகிறதேயொழிய வடகலையாருடைய அனுஷ்டானப்படி கிடையாது. இதை எப்படியாவது மாற்றிவிடவேணுமென்று தாதாசாரியர்கள் தங்களுக்கு ஸ்வாதந்திரியமிருந்த காலத்தில் பிரபலப்ரயத்னம் செய்தும் பலிக்கவில்லை. நாளைவரையில் தென்கலையனுஷ்டானப்படியேதான் இவை நடந்துவருகின்றன.

53. இந்த தக்கம் நம் அட்வகேட்டின் மனதில் மிகவும் வேலை செய்து கொண்டிருப்பதனாலேயே விவாதவரலாற்றுச் சுவடியில் புதியனவும் இல்லாதனவுமான உத்ஸவங்களைக் குறிப்பிட்டவர் புராதனமான இவ்வுத்ஸவங்களை ஒரு மூலையிலும் குறிக்கவில்லை. ப்ரம்மோத்ஸவம், வேளியூருத்ஸவங்கள், மற்ற உத்ஸவங்கள் என்றிப்படி மகுடமிட்டு ஸகலோத்ஸவங்களையும் தெரிவித்துவருமிவர், தைமாதம் தொடங்கிவிசேஷோத்ஸவங்களைக் குறிப்பிட்டு வரும்போது சித்திரை

acharya.org

மாதத்தில் ஸ்ரீராமநவமியைத் தொட்டவரல்லர்; ஆவணி மாதத்தில் ஸ்ரீஜயந்தியையும் உறியடி யுத்ஸவத்தையும் தொட்டவரல்லர். மார்கழி மாதத்தில் அனுஷ்டானகுல உத்ஸவ மொன்று தான் இவர்க்குத் தெரியுமாம். பூலோகவைகுண்டமென்னும்படி 21-நாள் அற்புதமாக அநுப விக்கப்படுகிற பகல்பத்திராப்பத்தென்னும் திருவத்யயநோத்ஸவத்தில் ஸ்வாசார்ய குடும்பத் திற்கு இருந்த தலைவேதனை இவர்க்கு இன்னமுமிருந்து வருகிற தென்பது நிராசேஷபமாக விளங்கிவிட்டது. ஒரு வருஷம் முழுதும் இவ்வூரில் தங்கியிருந்து எல்லாவுத்ஸவங்களையும் அநுபவிக்க வேணுமென்கிற ஆசம்ஸையை (பக்கம் 14ல்) காட்டியிருக்குமிவர், ஸ்ரீராமநவமீ ஸ்ரீஜயந்தீ திருவத்யயநோத்ஸவங்களில் இவ்வூரை விட்டு வெளியூருக்குப் போய்விடவேணு மென்று தெரிவித்தவராகிறார். அஹஹ! என்ன ஹ்ருதய வைசால்யம்.

54. ஸன்னிதி வரலாறுகளை இவர் ப்ராமாணிகமாக எழுதுகிறவராயிருந்தால் திரு வத்யயநோத்ஸவம் என்று மிகப்பெரிய எழுத்தில் மகுடமிட்டு அவ்வுத்ஸவத்தின் வைகரிகளை குறைந்தபக்ஷம் இரண்டு பக்கமாவது எழுதியிருக்கவேண்டாவா? ஸ்ரீ வைஷ்ணவாலயங் களுக்கு இவ்வுத்ஸவந்தான் தலையானதென்றும், முன்னேயிருந்த தாதாசார்ய டிரஸ்டிகள் பல வருஷங்கள் இம்மஹோத்ஸவத்தைப் பாழ்படுத்தியிருந்தார்களென்றும், இதைப்பற்றிப் பலவாண்டுகள் நியாயாலயங்களில் வழக்குகள் நடந்து 10, 12 வருஷமாகவே நல்ல தீர்ப்புகள் ஏற்பட்டு ஒழுங்கானமுறையில் இவ்வுத்ஸவம் லோகோத்தரமாக நடந்துவருகின்றதென்றும், தாதாசார்யர்கள் கோவில் நிர்வாஹத்திலிருந்து விலக்கப்பட்டதற்கு இம்மஹோத்ஸவத்தை அநியாயமாய் நிறுத்தினதும் ஒரு நிமித்தமென்றும்.....இப்படி உண்மைகளைக் கண்ணீர் பெருக எழுதியிருக்கவேண்டாமா? இவ்வுத்ஸவங்கள் இந்த தேவஸ்தானத்தில் இன்னமும் நடைபெறுவது கிடையாதென்று ஸமயவிசேஷங்களில் வாதிக்கவேணுமென்கிற ஆசாமோதக மன்றே இவருள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. இந்த தேவஸ்தானத்தின் வரலாற்றை யெழுதுவதற்கு இவர் தகுந்த அதிகாரிதானு? என்பதை மத்தியஸ்தர்களே விமர்சிக்க.

55. மேல் விஷயங்களையுங் கேண்மின். தேவப்பெருமாள், ஸன்னிதிவீதிக்கு மாத்திர மெழுந்தருளித் திரும்புகிற புறப்பாடுகள் பலபலவுண்டு. அப்போது நியமேந திருவடி ஸன்னிதியில் பஹுமானமாகித் திருமுகயில் இயல்கோஷ்டி தொடங்குவது. அதற்கு அங்கமாக சுருளமுது [வெற்றிலைபாக்கு] அமுது செய்யப்பண்ணுவதென்று அநாதிகாலமாக தேவஸ்தானநிட்டமாகவே ஏற்பட்டிருக்கிறது; நடந்தும் வருகிறது. இதைப்பற்றி மணிய காரர்களையும் ஸன்னிதி பரிஜனங்களையும் விசாரித்தால் பல மருமங்கள் தெரியவரும்.

56. வைகாசிமீ நடைபெறும் வஸந்தோத்ஸவத்தில் கோஷ்டிக்கு சாத்துப்படியும் வஸந்தமும் விநியோகம் செய்யும்படி தேவஸ்தான தன்நிக்கிலேயே ஏற்பட்டிருக்கிறது. அநாதிகாலமாக இன்றளவும் நடந்துவருகிறது. இந்த விநியோகம் எவ்விடத்தில் நடக்கிற தென்பதை பக்தர்கள் கவனிக்கவேணும். ஸன்னிதியை விட்டுப் பெருமாள் புறப்படும் போதே வேதபாராயண கோஷ்டி ஆரம்பமாகிறது. விநியோகம் செய்வதற்கு கோஷ்டி தானே வேண்டியது; வேதகோஷ்டி ஆரம்பித்தவுடனே இந்த சந்தன வஸந்த விநியோகம் ஆகலாமே. இந்த கோவில் ஏற்பட்ட நாள்முதல் ஒரு காலாவது அப்படியுண்டோ வென்று கேட்கவேணும். இயல்கோஷ்டி ஆரம்பிக்கும்போதுதான் பெருமாளுடைய ஸாந் நித்யமே ஏற்படுகிறதென்று ப்ராசீனர்களின் அக்ருத்ரிமமான கொள்கை இருந்தபடியால் அந்தப்ராசீனர்கள் நியமித்த கட்டளை இற்றைக்கும் அழியாது அநுவர்த்தித்து வருகிறது.

acharya.org

இதே வஸந்தோத்ஸவத்தில் ஸமாப்தி தினத்தன்று [குதிரைதம்பிரானுத்ஸவம்] நாலுமாடவீதி புறப்பாடாகையால் அன்று ஸன்னிதியிலேயே இயல்கோஷ்டி தொடக்கமாகிறது; சந்தன வஸந்த விகியோகமும் அன்று அப்போதேயாகிறது. ஸ்ரீஜயந்திக்கு மறுநாள் கண்ணன் திருவீதிப்புறப்பாட்டில் எண்ணெய்காப்பு விகியோகமும் இயல்கோஷ்டி தொடங்கும்போது தான் எற்பட்டிருக்கிறது.

57. மார்கழித்திங்களில் ஆண்டாளுத்ஸவம் நாலு மாடவீதி புறப்பாடு பத்து நாளுண்டு; ஸன்னிதிவீதியின் கோடியில் திருவடி ஸன்னிதி பக்கத்தில் இயல்கோஷ்டி தொடக்கம். அதுவரையில் ஆண்டாள் தேவதேவ திவ்ய மஹிஷீத்வத்திற்குச்சேர பீதாம்பரத்தினுல் அவகுண்டனங்கொண்டே மாடவீதிகளெழுந்தருள்வது. இயல் தொடங்கும்போது "பிடாத்தை விழவிட்டு அத்யாபகர்களுக்கு ஸர்வஸ்வதானம் செய்வது" என்கிற முறையில் இயலுக்கு மரியாதையாக அவகுண்டனத்தைக் களைந்துவிடுவது. பிராசீன வழக்கங்கள் பலபல மாறிப்போய் மேலே குறித்த சிலசிலவே இற்றைக்கும் நடந்துவருவதால் அநுபவத்தில் காணுமவற்றை எழுதலானேம்.

58. ஸ்ரீ வைஷ்ணவக் கோவில்களில் திவ்யப்ரபந்த கோஷ்டிக்கே எற்றமென்பதும், எல்லாச் சிறப்புகளும் அந்த கோஷ்டிக்கே பூருவர்களால் நியமிக்கப்பட்டன வென்பதும் அபலபிக்க முடியாத விஷயங்கள். இயல் தொடங்கும் போதும் சாற்றும்போதும் கோஷ்டிக்கு ஸ்ரீசடகோபன் ஸாதிப்பதென்பது கோயில் திருமலை முதலான பெரிய திவ்ய தேசங்களில் மாத்திரமே யல்லாமல் ஸாமான்யக் கோவில்களிலுங்கூட அநாதிவழக்கமாக அமைந்திருக்கின்றது. அது இந்த தேவஸ்தானத்திலு மிருந்ததே. தாதாசாரியர்கள் ஒழுங்கான முறையில் இருந்து ஒழுங்காக நடந்துகொண்டவரையில் மேலே சொன்ன கோஷ்டி மரியாதையானது நிர்விவாதமாக நடத்தப்பட்டு வந்தது. அவர்கள் கோஷ்டியில் சில விஷமங்கள் செய்ய ஆரம்பித்து அனேகவித பங்கங்களை அடைய நேர்ந்தபின்பு, இயல் கோஷ்டிக்கிருந்த இந்த மரியாதையை நிறுத்தி வேதபாராயண கோஷ்டிக்குச் செய்ய முயன்றார்கள். தேவப் பெருமாள் அப்போது அர்ச்சகர்களின்மேல் ஆவேசித்து இந்த புதிய செய்கையைத் தடுத்து விட்டார். இதற்காக அர்ச்சகர்களை ஸன்னிதி கைங்கரியத்திலிருந்து எழெட்டு வருஷங்கள் விலக்கிவைத்து வழக்காடித் தோற்ற பின்பும் வீணை கலஹங்களை யுண்டுபண்ணி அனேகமான கிரிமினல் விவகாரங்களைக் கிளப்பி அபரிமிதமான தேவஸ்தான த்ரவ்யத்தைப் பாழ்படுத்தியது மிகவும் சோசநீயமான சேஷ்டிதம். சாஸ்த்ரங்களில் பகவதபசார பாகவதாபசாரங்களுக்குமேல் அஸஹ்யாபசாரமென்று ஒன்று சொல்லப்படுகிறது; அதற்கு ப்ரதாநலக்ஷ்யம் இவர்களே யென்பது பேரருளாளன் திருவுள்ளமறிந்ததோ ருண்மை.

எட்டாம் அத்யாயம் முற்றிற்று.

ஒன்பதாம் அத்யாயம்—வைசாகோத்ஸவ வாஹனக்ரமங்கள்.

59. வையங்கண்ட வைகாசித்திருநாளில் கண்டருளும் வாஹனங்களுங்கூட திவ்யப்ரபந்த ஸேவைக்கு அநுகுணமாகவே ஆதிகாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதையும் விவரிப்போம். முதல்நாள் காலை வாஹனஸேவை ஒன்றுமில்லை. திருப்பல்லாண்டு தொடக்கம் கேட்டருள்வதற்காக வாஹனாரோஹணத்தைத் தவிர்த்து ஸேவை ஸாதிக்கிற

acharya.org

க்ரமம். மாலே சிங்கவாஹனம்; அப்போது பெரியாழ்வார் திருமொழி மூதற்பத்து ஸேவை; அதில் * என்தொண்டைவாய்ச் சிங்கம் வா * என்று எம்பெருமானைச் சிங்கமாக வரும்படியழைத்த பாசுரம் வருவதால் அதை நோக்கிச் சிங்கவாஹன ஸேவை.

60. இரண்டாந்திருநாள் காலே * ஞானச் சுடர் விளக்கேற்றினேன் * என்று ஞான நூலைக் கொடுப்பதாகத் தொடங்கி * மறையாங்கென வுரைத்தமாலே * என்று எம்பெரு மானும் ஜ்ஞான ப்ரதானம் பண்ணினதைச் சொல்லுகிற இரண்டாந்திருவந்தாதி ஸேவை யாகையாலே, அன்னமாய் நூல் பயந்த அருளாளனுக்கு அன்னவாஹனஸேவை அமைக் கப்பட்டது. அன்றியும், முதல் நாளிரவு பெரியாழ்வார் திருமொழி ஸேவை முடிவுபாகத் தில் * பின்னிவ்வுலகினில் பேரிருள்நீங்க, அன்று அன்னமதாஞனே* என்று வருதலால் அதைக் கொண்டும் உடனே ஹம்ஸவாஹன ஸேவை மிகவும் பொருத்த மாயிற்று. அன்று மாலே பெரியாழ்வார் திருமொழி இரண்டாம்பத்து ஸேவையில் * அரவணையாயாயரேறே அம்மமுண்ணத் துயிலெழாயே—இன்னு முச்சி கோண்டதாலோ * என்று ஸூர்யோதய ப்ரஸ்தாவம் பண்ணிக் கண்ணனே யெழுப்புகிற பாசுரம் வருகையாலே ஸூர்யப்ரபை வாஹன மமைந்தது. இரவிலே ஸூர்யப்ரபையாவதற்கு இதுவே நிமித்தம்.

61. மூன்றாந்திருநாள் காலே மூன்றாந்திருவந்தாதி ஸேவையில் * பொலிந்த கருடன் மேல்கொண்டகரியான் கழலே * என்று வருதலால் கருடவாஹனஸேவை அமைந்தது. அன்றிரவு பெரியாழ்வார் திருமொழி மூன்றும்பத்து வேவையில் * அடங்கச் சென்றிலங்கையை யீடழித்த அனுமன் புகழ்பாடி* என்றும் * சீராருந் திறலனுமன் தெரிந்துரைத்தவடையாளம்* என்றும் சிறிய திருவடி ப்ரசம்ஸை வருதலால் சிறியதிருவடி வாஹன ஸேவை அமைந்தது.

62. நான்காந்திருநாள் காலே நான்முகன் திருவந்தாதி ஸேவையில் *ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவணையான் * என்றும் * விரித்துரைத்தவெந் நாகத்துன்னே * என்றும் ஆதிசேஷனுடைய ப்ரஸ்தாவம் வருதலாலும் *வைகுந்தச் செல்வனர் சேவடிமேல் பாட்டு * என்று வைகுண்டநாதன் திருவடிகளில் அவ்வாழ்வார் பாசுரம் பாடினதாகச் சொல்லுகையாலும் சேஷவாஹனத்தில் பரமபதநாதன் திருக்கோல ஸேவை அமைந்தது. அன்றிரவு பெரியாழ்வார் திருமொழி நான்காம்பத்து ஸேவையில் * நளிர்மாமதியைச் செஞ் சுடர் நாவலிக்கும் * என்று சந்திரனுடைய ப்ரஸ்தாவம் பண்ணியிருக்கையாலே சந்த்ரப்ரபை வாஹந ஸேவை அமைந்தது.

63. ஐந்தாந்திருநாள் காலே திருவிருத்தம் ஸேவை ஆழ்வார் தாமான தன்மையை விட்டு நாச்சியார் திருக்கோலம் பூண்டு அருளிச்செய்த திவ்யப்ரபந்தமதுவாகையாலே அதற்குச் சேர பேரருளாளன் நாச்சியார் திருக்கோலம் பூண்டு ஸேவை ஸாதிக்கிறபடி. திருவிருத்தம் என்பதற்கு, திரு—நாச்சியாருடைய, விருத்தம்—வ்ருத்தாந்தம் என்று பொருள். நாச்சியார் திருக்கோலம் பூண்ட ஆழ்வாருடைய செய்திகளைச் சொல்லும் ப்ரபந்தமென்றபடி. இதற்கு மிகவும் பொருத்தமாகவே அன்று நாச்சியார் திருக்கோலம் அமைந்தது. வேறு காரணமில்லே. அன்றிரவு யாளிவாஹனஸேவை ஏற்பாடு செய்திருக்கிறவர்களின் அபிப் ராயத்தை ஆழ்ந்து பார்க்கையில் வெகு ஆச்சரியமூண்டாகிறது. திவ்யப்ரபந்தங்களில் யாளியைப்பற்றின பேச்சுக்கள் சிலவிடங்களில் வருகின்றன. எங்கு வருகின்றன வென்று பார்த்தால் பெரிய மலைகளே வருணிக்கு மிடங்களில்தான் வருகின்றன. அஹோபிலம்

acharya.org

திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை பதரிகாச்ரமம் என்னுமித்தலங்களை வருணிக்கும்போது தான் யாளிகளைப்பற்றிப் பேசுவது வழக்கம் ; * நன்மணி வண்ணனூர் ஆளியுங் கோளரியும்* * செங்கனிவாளி யிட்டிறைஞ்சும்* இத்யாதி பாசுரங்கள் காண்க. ஐந்தாந்திருநாளிரவு திவ்ய ப்ரபந்த ஸேவையில் பதரிகாச்ரம மார்க்கத்திலுள்ள தேவப்ரயாகை யென்கிற கண்டமென்னுங் கடிநகர்ப் பாசுரங்களும், * தக்கச் சுழலையைச் சூழ்ந்துகிடந்த * என்று தொடங்கித் திரு மாலிருஞ் சோலைப் பாசுரங்களும் * சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையான் பாசுரங் களும் ஸேவிக்கப்படுவதால் அந்த திவ்யதேசங்களுக்கும் யாளிக்குமே ஸம்பந்தமுள்ள தென்றுகொண்டு யாளிவாஹன ஸேவையை அப்போது ஏற்படுத்தினார்கள். இவ்வளவு ஆழ்ந்து ஏற்பாடு செய்தவர்களின் புத்தி சாதுரியம் மிகவும் மெச்சத்தக்கதாக வுள்ளது.

64. ஆருந்திருநாள் காலை திருச்சந்தவிருத்தம் ஸேவை. அதில் * ஒன்றிரண்டு தீயுமாகி ஆயனுயமாயனே * என்றும் * ஆயனாகி ஆயர்மங்கையதோள்விரும்பினாய் * என்றும் * ஆனகாத்தொரானைகொன்று அதன்றியாயர்பிள்ளையாய் ஆனமேய்த்தி ஆநெயுண்டி * என்றும் * ஆதியாகி ஆயனுய மாயமென்ன மாயமே * என்றும் கொள்ளை கொள்ளையாக கோபாலக்ருஷ்ண ப்ரசம்ஸை வருதலால் அதற்குச் சேர கோபாலக்ருஷ்ணன் திருக்கோலம் பூண்டு ஸேவை ஸாதிக்கிறபடி. அன்றிரவு யாளிவாஹனஸேவை. அது நாச்சியார் திருமொழி ஸேவைக்கு மிகவும் பொருத்தமாக அமைந்தது. நாச்சியார் திருமொழியில் * மங்கலவீதி வலஞ்செய்து—அங்கு ஆனமேல் * என்கிற பாசுரம் ஸேவிக்கப்படுவதற்குப் பொருத்தமாகவே இது அமைந்தது. இதில் மற்றொரு விசேஷமும் கவனிக்கவேண்டும்; அதாவது—ஆனவாஹனப் பாசுரமாக மேலேயெடுத்துக்காட்டின பாட்டில் * குங்குமமப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து * என்று சூர்ணாபிஷேகம் சொல்லியிருக்கையாலே இதுவும் அன்று காலை வைதிகச் சடங்காக நடத்தப்பட்டுவருகிறது.

65. ஏழாந்திருநாள் திருத்தேர். திருமங்கையாழ்வார் திருத்தேர்ப் பிரபந்தமாகத் திருவெழுகூற்றிருக்கை ஸாதித்தது உலகமறியும். அது ரதபந்தத்தில் அமைந்தது. அந்த திவ்யப்ரபந்த ஸேவைக்குச் சார்பாக ரதோத்ஸவம் வெகு பொருத்தமாக அமைந்தது. திருத் தேர் நிலை சேர்ந்தபின்பு பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளுகையில் திருமடல் முடிந்தபின் நாச்சியார் திருமொழியின் சேஷம் ஸேவிப்பது வழக்கம். * கருப்பூரம் நாறுமோ * என்கிற ஒரு பதிகம் ஸேவித்து முடிப்பார்கள். அதில் * செங்கண்மால் தன்னுடைய வாய்த் தீர்த்தம் பாய்ந்தாடவல்லாய் * என்கிற பாசுரம் வருவதை நோக்கி அன்று பகலில் திருப்பாய்ந்தாடித் திருமஞ்சனமென்று நடத்தப்பட்டு வருகிறது.

66. அன்றிரவு திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி திவ்யப்ரபந்தத் தொடக்கம். அவ்வாழ்வாருடைய சரிதையிலுள்ள வேடுபறிகதைக்கு அநுகுணமாகவே பாதிவழியில் திரு மங்கையாழ்வாரை யெழுந்தருளப்பண்ணி அவர்க்கு மரியாதைச்சிறப்புகள் நடத்தி திவ்யப்ர பந்தத் தொடக்கம் செய்வது நாளைக்கும் வழக்கத்திலுள்ளது. * ஆடல்மாவலவன் கலிகன் றிக்காகவே பெருமாளும் ஆடல்மா வென்னும் குதிரைவாஹனம் கண்டருள்வது.

67. திவ்யப்ரபந்தங்களில் ஆழ்வார்களுடைய அநுபவப்ரகாரங்களில், நாச்சிமார்கள் எப்பெருமானை வெறுத்துத் தள்ளுதல் [மட்டையடி] என்பது ஒரு விலக்ஷணானுபவம். நம்மாழ் வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய மூவரும் இதுவிஷயமாக மூன்று பதிகங் கள் பாடியுள்ளார்கள். இவ்வநுபவம் ஒன்பதாநாள் காலையில் ஒரு நாடகமாக அபிநயம் செய்யப்பட்டு வருகிறது. பெருமாள் தனியே யெழுந்தருளிப் பட்டிமேய்ந்து வருவதாகவும்,

acharya.org

நாச்சிமார்கள் இவரை உள்ளே புகவொட்டாமல் தடுப்பதாகவும் நடந்துவருவது ஆழ்வா ரநுபவமேயாகும்.

68. மறுநாள் திருவாய்மொழி ஆயிரத்தையும் கேட்டருள்வதற்காகப் பன்னிரண்டு திருவாராதனங்கள் கண்டருளி இரவு இராமானுச நூற்றந்தாதிக்காக சிகிரோபசாரப் புறப் பாடு கண்டருளி உத்ஸவஸமாப்தியாகிறது. ஆக இப்படிகளே ஊன்றிநோக்குமளவில் திவ்ய ப்ரபந்த ஸேவையை யநுஸரித்தே வாஹனப் புறப்பாடுகளில் நியதி ஏற்பட்டிருக்கின்ற தென்பது கல்வெட்டாகத் தேறும்.

69. இப்படி நாம் நிரூபணம் செய்வதைக் காண்கின்ற பிறர் ஸஹஸா ஒரு வார்த்தை சொல்லி விடக்கூடும்; பெருமாள் வாஹனஸேவைகள் கொண்டருளுகிறபடிக்குத் தகுதியாக இவர்கள் திவ்யப்ரபந்த ஸேவைகளே அமைத்துக் கொண்டார்களே யல்லது, திவ்யப்ரபந்த ஸேவைகளுக்குத் தகுதியாக வாஹநஸேவை ஏற்படுத்தப்படவில்லை—என்று.

70. இது பொருத்தமான வார்த்தையாகாது; திவ்யப்ரபந்த ஸேவை இஷ்டமானபடி பொறுக்கிப்பொறுக்கி யெடுத்து அமைத்திருக்கவில்லை; காலிவேளைகளில் இயற்பாஸேவை வரிசையாகவும், மாலை வேளைகளில் முதலாயிரம்ஸேவை வரிசையாகவும் நடந்துவரு வதால், வாஹனஸேவைகளுக்குத் தக்கபடி பாசுரஸேவையை அமைத்துக்கொண்டதாகச் சொல்வதற்கு அவகாசமேயில்லை. இதர திவ்யதேசங்களில் வாஹனக்ரமங்கள் வேறுவேறு விதமாக இருப்பினும், தேவப்பெருமாள் ஆழ்வார் ஸ்ரீஸூக்திக்கென்றே இட்டுப் பிறந்தவராத லாலும், அந்த ஸ்ரீ ஸூக்தியில் வியாமோஹம் காரணமாகவே உடையவரையும் இழந்தவராத லாலும் இத்தேவப்பெருமாள்ஸன்னிதி ஸம்பந்தப்பட்டவரையில் நாமிங்கு நிரூபித்த திவ்ய ப்ரபந்தப் பொருத்தங்களும் ஏற்றங்களும் அசைக்கமுடியாதவை.

ஒன்பதாம் அத்யாயம் முற்றிற்று.

— பத்தாம் அத்யாயம் —

வைஷ்ணவக்கோவில்களுக்கு நிர்வாஹ அதிகாரிகளாக வருகிறவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களை விளக்குகின்றோம்.

71. இந்த தேவஸ்தானத்தில் இதுவரையில் 6, 7 டிரஸ்டிகள் வேலைபார்த்து விலகி னர்கள். இப்போது சில மாதகாலமாக ப்ரஹ்மஸ்ரீ V. R. விச்வநாதர் அவர்கள் வந்து சேர்ந்து வேலை பார்த்து வருகிறார். இவர் யுவாவாயும் புத்திமானாயிருப்பதால், நாம் நல்ல எண்ணத்துடன் தகுந்த ஆதாரங்கள் முன்னிலையாக யதார்த்தமாய்த் தெரிவிக்கும் விஷயங்கள் இப்பெரியார்க்கும், க்ரமேண இவருடைய பதவியை அலங்கரிக்க வரும் மஹான்களுக்கும் மிகவும் பயன்படுமென்று நம்புகிறோம். பொதுவாக விஷ்ணுகோவில்களுக்கெல்லாம் திவ்ய ப்ரபந்தமே உயிர் நிலையாயிருந்தாலும், இந்த தேவராஜஸ்வாமி தேவஸ்தானத்திற்கு விசேஷித்து அதுவே உயிர் நிலையானதென்பதை தேவஸ்தான அதிகாரிகள் பெரியார்கள்வாய்க் கேட் டுணரவேணும்.

72. இந்த ஸ்தல விஷயமாகப் பிரபந்தம் பாடின வேதாந்த தேசிகர் அதன் முடிவில் "தொண்டைமண்டல வேதியர் வாழவே தூயதென்மறைவல்லவர் வாழவே" என்று, தமிழ்மறை வல்லவர்களே தொண்டமண்டலவேதியரென்று நிரூபித்து அப்படிப்பட்ட தமிழ்வேதம் வல்ல வர்கள் நீடூழி வாழ்ந்திருக்க வேணுமென்று வாழ்த்தியுள்ளார். அந்தவாழ்த்துதான் ஒரு நாளும் பழுதுபடாமல் அந்நாள் தொடங்கி இந்நாள் வரை ஓங்கி விளங்கி வருகிறது.

acharya.org

73. பகவான் ஐந்து நிலைமைகளையுடையனாக சாஸ்த்ரங்களில் கூறப்படுகின்றன். பர வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்க ளென்னுமிவையே ஐந்து நிலைமைகளென்று ப்ரஸித்தம். ப்ரமேயங்களில் தலைமைபெற்ற எம்பெருமான் தன்னை இங்ஙனே ஐந்து வகையாக வகுத்துக் கொண்டது போல ப்ரமாணங்களில் தலையான வேதமும் இவ்வைந்து ப்ரகாரங் களுக்குப் பொருத்தமாகத் தன்னையும் ஐந்துவகையாக வகுத்துக் கொண்டது. இதனைச் சிறிது விவரிப்போம்.

74. எம்பெருமான் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை (1) பரத்வம் எனப்படும். க்ஷீராப்தியில் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தரூபேண வகுப்புண்டு நிற்கும் நிலை (2) வ்யூஹம் எனப்படும். ஸ்ரீராமக்ருஷ்ணாதிரூபேண அவதரித்து நிற்கும் நிலை (3) விபவம் எனப்படும். *கரந்தெங்கும் பரந்துளன்* என்று உள்ளே பதிந்து நிற்கும் நிலை (4) அந்தர்யா மித்வம் எனப்படும். கோவில்களிலும் க்ருஹங்களிலும் * தமருகந்த தெய்வருவமவ்வுருவமாய் நிற்கும் நிலை (5) அர்ச்சாவதார மெனப்படும். இவை, ப்ரமேயபூதனை பகவானுடைய பஞ்சப்ரகாரங்கள்.

75. இனி, ப்ரமாணத்தின் பஞ்ச ப்ரகாரங்களைக் கேண்மின்; (1) வேதம் பலவிடங்களி லும் எம்பெருமானுடைய பரத்வநிலையைப் பேசுகையாலே பரத்வத்திற்குச் சேர்ந்த ப்ரமாண நிலை வேதம். (2) எம்பெருமானுடைய வ்யூஹாவஸ்தையின் குணம் ரூபம் க்ருத்யம் முதலான வற்றைப் பேசுகைக்காக வேதமே பஞ்சராத்ரமாக வடிவெடுத்ததாகையாலே, பகவானுடைய வ்யூஹாவஸ்தைக்குச் சேர்ந்த ப்ரமாண நிலை—பஞ்சராத்ரம். (3) எம்பெருமானுடைய அந்தர்யா மித்வமானது அக்நி இந்திரன் வருணன் முதலான தேவதைகள் பக்கலிலேயுமுள்ளது; அவ்வோ தேவதைகளைக் குறித்து நாம் பண்ணுகிற கருமங்களானவை அந்தர்யாமியான எம்பெரு மானைச் சேருகின்றன வென்பது வேதாந்திகளின் கொள்கை. ஆகவே எம்பெருமானுடைய அந்தர்யாமித்வம் கருமானுஷ்டானத்திற்கு உரியதென்று தேறிற்று. அப்படிப்பட்ட கர்ம கலாபங்களை விவரிக்க மநுஸ்மிருதி முதலான தரும சாஸ்த்ரங்களாக அந்த வேதமே அவதரித்த படியாலே, அந்தர்யாமித்வத்திற்குச் சேர்ந்த ப்ரமாண நிலை—ஸ்மிருதிகள். (4) அப்பெருமா னுடைய ராமக்ருஷ்ணாதி விபவாவதார சேஷ்டிதங்களைப் பேசுவதற்காக அந்த வேதமே ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் முதலிய இதிஹாஸங்களாக ஆவிர்ப்பவித்ததாகையாலே எம்பெருமானுடைய விபவத்திற்குச் சேர்ந்த பிரமாண நிலை — இதிஹாஸபுராணங்கள். (5) விபவாவதாரங்களைச்செய்து ரக்ஷித்தருளும்பெருமான் அவதாரத்திற்குப் பிற்பட்டவர்களும் இழவாதபடி மிகவும் ஸுலபனாக அர்ச்சாவதாரமானவளவில் அதன் பெருமையைப் பேசுவ தற்காக அந்த வேதமே தானும் ஸர்வஸுலபமாய் ஸர்வாதிகாரமாகைக்குறுப்பாகத் தமிழ் வடிவாய்க் கொண்டு ஆழ்வார்கள் பக்கலிலே திவ்யப்ரபந்தமாகத் திருவவதரித்தது.

76. ஸ்ரீராமாயண பாராயணம் செய்பவர்கள் யாவரும் * வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா * என்கிற ச்லோகத்தை அநுஸந்தித்து வருவது நிர்விவாதம். வேத ப்ரதிபாத்யனான பரம புருஷன் சக்ரவர்த்தி திருமகனாய் அவதரித்தவளவில் அபௌருஷேயமான வேதமும் ஸ்ரீவால்மீகிபகவானிடத்தில் நின்றும் ஸ்ரீராமாயணமாகத் திருவவதரித்ததென்று இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதை ஒரு ந்யாய சிக்ஷையாகக் கொண்டு நம்முடைய பூர்வாசார்யர்கள் நிர்வஹித்த கட்ட

acharya.org

லீலையையே நாம் கீழேவிவரித்தோம். ப்ராமாணிகர்கள் இதில்ஸந்தேஹிக்கவோ ஆக்ஷேபிக்கவோ இடமில்லை.

77. பராத்பரனை எம்பெருமானுடைய பரத்வப்பெருமைகளை நாம் தெரிந்து கொள்ளவேண்டுமானால் வேதத்தைக்கொண்டே தெரிந்து கொள்ளவேண்டும். அப்பெருமானுடைய வ்யூஹாவஸ்தையில் விசேஷங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் பஞ்சராத்ரத்தைக் கொண்டே தெரிந்துகொள்ளவேண்டும். விபவாவதார வ்ருத்தாந்தங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் இதிஹாஸபுராணங்களைக் கொண்டே தெரிந்துகொள்ளவேண்டும். அந்தர்யாம்யாராதநரூப கர்ம கலாபங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமானால் மநுஸ்ம்ருதி முதலிய தர்மசாஸ்த்ரங்களைக்கொண்டே தெரிந்துகொள்ளவேண்டும். அர்ச்சாவதாரப் பெருமைகளைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளாகிய திவ்ய ப்ரபந்தங்களைக் கொண்டே தெரிந்துகொள்ளவேண்டும். ஆகவே திவ்ய ப்ரபந்தங்கள் அர்ச்சாவதார வேதமென்றே குலாவப்பட்டு வருகின்றன. உண்மையில், ராமகிருஷ்ணாதியவதாரங்களுக்குப் பிற்பட்டவர்களான நமக்குத் தஞ்சமான கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான திவ்ய தேசங்களின் [நூற்றெட்டுத் திருப்பதிகளின்] அநுபவம் நமக்கு திவ்யப்ரபந்தங்களாலல்லது வேறொன்றினாலும் ஸாத்யமன்றே. ஆழ்வார்களோ திவ்ய ஸூரிகள். அவர்கள் பாடின நூல்களோ திவ்ய ப்ரபந்தங்கள். அப்ரபந்தங்களுக்கு விஷயமோ திவ்ய தேசங்கள். இப்படி எல்லாம் திவ்யமாக அமைந்த அமைப்பு யாரறிவார்?

78. ஆழ்வார் திவ்யப்ரபந்த மருளிச்செய்யாதிருந்தால் விஷ்ணுவாலயங்களில் நடைபெறும் உத்ஸவங்கள் அந்தோ! அழகிழந்து கிடக்குமே யென்று கம்பர் சடகோபரந்தாதியில் * அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்த அரும் பொருளைச் செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத் தேவர்களும் தந்தம் விழாவு மழகு மென்னும் * என்கிற செய்யுளினால் கல்வெட்டாகக் கூறுகின்றார். வ்யாஸ பராசர வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகள் இதிஹாஸ புராணங்களை மிகவும் விசேஷமாக இயற்றியிருந்தும் அவர்களை எந்த இடத்திலும் எந்த கோவிலிலும் விக்ரஹ ப்ரதிஷ்டை செய்து ஆராதிப்பது காண்கின்றிலோம். விஷ்ணு கோவில் ஒன்று தப்பாமல் ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் விக்ரஹ ப்ரதிஷ்டை செய்து பகவானுடைய வைபவத்திற் காட்டிலும் அவர்களுடைய வைபவமே ஓங்கும்படி செய்திருப்பதைக் காண்கின்றோம். இப்படி ஆழ்வார்களை ப்ரதிஷ்டை செய்து ஆராதிக்குமிக் காரியம் எதோ ஸமீப காலத்தில் ஏற்பட்டதோ வென்று சங்கிக்க இடமில்லாதபடிக்கும், இது மிகவும் புராதனமே யென்று நிச்சயிக்கும்படிக்கும் ஸ்ரீராமாநுஜர் காலத்திய நூல்களில் இது பொறிக்கப் பெற்றுள்ளது.

79. இவ்விஷயத்தைப்பற்றி ஒன்றே எடுத்துக் காட்டுவோமிங்கு. கூரத்தாழ்வானுடைய திருக்குமாரரான பட்டர் உடையவர்காலத்தில் திருவவதரித்து உடையவர் ஸ்தானத்தில் அபிஷிக்தர் என்பது ஜகத்ப்ரஸித்தம். அவர் தாம் அருளிச் செய்த ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் நாற்பத்தோராவது ச்லோகத்தில் * யாமாகூய ஸ்ரீ: வ்யதத வராங்கோ நிஷேதிவாம்ஸோ உஸ ராம ஏயொ—பராங்குசாத்யா: ப்ரதமே புமாம்ஸோ நிஷேதிவாம்ஸோ தச மாம் தயேரந் * என்றுள்ளது. சந்த்ர புஷ்கரிணியின் கீழ்த்திசையில் பரவாஸுதேவப் பெருமாள் ஸன்னிதியில் ஆழ்வார்கள் பதின்மரும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு எழுந்தருளியிருப்பதை மேலேகுறித்த பட்டர் ஸ்ரீஸூக்தி விளக்கியுள்ளது. ஆகவே ஆயிரமாண்டுகட்கு முன்னமே ஸ்ரீரங்கம் கோயிலில் ஆழ்வார்கள் ப்ரதிஷ்டை பெற்றிருந்தார்களென்பது பேர்க்கவும் பேராதபடியுள்ளது. கீழே நாம் விரிவாக நிரூபணம் செய்தபடி அர்ச்சாவதார வேத

acharya.org

மாகிய திவ்ய ப்ரபந்தங்களுக்கே எற்றமானது பற்றியே விஷ்ணு வாலயங்களில் ஆழ்வார் களுக்கு இவ்வளவைபவம் அமைந்தது.

80. பெரியார்கள் ஆழ்வார்களின் பாடல் பெறுத விஷ்ணு கோவில்களில் பிர வேசிக்கத் தயங்குவது போலவே, ஆழ்வார்களின் விக்ரஹப்ரதிஷ்டையும் திவ்யப்ரபந்தாநு ஸந்தானமுமில்லாத கோவில்களில் பிரவேசிக்கவும் தயங்குவர்கள். ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளில் பிரவேசமில்லாதவர்களுக்கு மோக்ஷமே கிடையாதென்பதை ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் பாதுகாஸஹஸ்ரத்தில் கூசாது கூறுகின்றார். ஒரு ச்லோகமே இங்கெடுத்துக் காட்டுகின்றேன்;— "ஸ்ரீவைஷ்ணவதிவ்யஸூக்திஷு நஸ்தாநவி ஜ்ஞாநாயதொ அயிஷ்யநு= த்ரமிடோபநிஷந்நிவேச சூந்யாநபி லக்ஷ்மீரமணய ரோசயிஷ்யந்" என்பது. இந்த ச்லோ கத்தின் தாற்பரிய மென்னவென்றால், ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளில் பிரவேச பாக்யமில்லாத வர்களைத் திருவுள்ளம் பற்றுவதில்லையென்று எம்பெருமான் விரதம் கொண்டிருப்பவனும். இப்படி யிருந்துவிட்டால் இவ்வுலகில் பலபல பேர்கள் எம்பெருமானுடைய திருவுள்ள வுகப்பை இழந்தே போகவேண்டிவரும். எனென்றால், ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகள் தமிழ்ப் பாஷையில் அவதரித்திருப்பதாலும் அந்தப் பாஷையை அறியாதவர்களே உலகில் அதிக அதிக ஸங்க்யையாக இருப்பதாலும் அவர்களெல்லாரும் எம்பெருமானுடைய திருவுள்ள வுகப்பைப் பெறுவதற்கு ப்ரஸக்தியில்லையாய் விடுகிறது. உலகில் ஒருவர் தப்பாமல் எல்லாருமே எம் பெருமானுடைய இன்னருளுக்கிலக்காகி உய்வு பெறவேண்டுமென்று விசாலமான திருவுள் ளங்கொண்ட நம்மாழ்வார் ஒரு உபாயம் செய்தாராம். அவர் பாதுகையில் ஆவேசித்து சடகோபனென்றும் சடாரியென்றும் தம்முடைய திருநாமத்தையே பாதுகைக்கு ஆக்கி, பெருமாளருகே வருகிற எல்லாருடைய தலையிலும் ஏறி வீற்றிருந்து, இவ்வழியினாலே எல்லாரும் ஒருவாறு ஆழ்வார் ஸம்பந்தம் பெற்றவர்களாகி உஜ்ஜீவிக்கும்படி செய்துவிட்டா ராம். இப்படி யருளிச்செய்தவர் வேதாந்தவாசிரியர். இதனால், எதேனுமொருவிதமாக ஆழ்வாருடைய ஸம்பந்தம் பெற்றவர்களுக்கே முக்தியுண்டென்றும் அது பெறுதவர்களுக்கு முக்திகிடையாதென்றும் ஸ்ரீ வைஷ்ணவ பரமாசார்யர்களின் ஸித்தாந்தம் கல்வெட்டாக இருந்ததென்று யாரும் காணலாம். எம்பெருமானுடைய திருவடி நிலைக்கு ஆழ்வார் திருநாமமன்றோவுள்ளது.

81. இப்படி ஆழ்வார்களாலும் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளாலுமே மேன்மை பெற்ற விஷ்ணுவாலயங்களில் தரும பரிபாலனம் செய்யுமதிகாரபதவியை ஆளுமவர்கள் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் எதுவென்பதை இனி நாம் விவரிக்கவேண்டிய அவசிய முளதோ? ஆழ்வார்களின் திருநக்ஷத்ரபரிபாலனதிகள் செவ்வனே நடைபெறுகின்றனவா? என்பதையே முக்கியமாக முன்னம் கவனிக்கவேண்டும். அவ்வாழ்வார்களின் ஸ்ரீ ஸூக்தி களை ஓதுமதிகாரம் பெற்ற பெரியார்களைப் புரஸ்கரிக்கவேண்டிய முறைகளில் வழுவொன்றும் நேராதபடி கவனித்துக்கொள்ளவேண்டியதும் முக்கியம். இப்போது விஷ்ணுவாலயங்களில் பெரும்பாலும் ஸ்ரீ வைஷ்ணவர்களல்லாத ஸ்மார்த்தர்களும் மாத்வர்களுமே எக்ஸிக்யூடிவ் டிரஸ்டி பதவியில் நியமனம் பெறுகிறார்கள். உண்மையில் இவர்கள் விஷ்ணு த்வேஷமற்ற வர்களாயும் விஷ்ணு பக்தியுக்தர்களாயுமிருப்பதால் விஷ்ணுவாலயங்களில் தர்ம பரிபாலக பதவிக்கு உரியவர்களேயாவர். ஆனால் இவர்கள் தங்களுடைய உரிமையை முழுதும் முணர்ந்து செவ்வனே செலுத்துதல் வேண்டும். ஆழ்வார்களிடத்திலும் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளிடத்திலும் ஸ்ரீஸூக்தி வல்லவர்களிடத்திலும் இவர்களுக்கு ஸ்வத: பக்தியிருக்கக்

acharya.org

காரணமில்லையானாலும் ஆலய தர்ம பரிபாலனஞ்செய்ய நியமனம்பெற்று வந்துவிட்டபடியால் அந்தந்த ஆலயங்களின் நிபந்தனைகளுக்குப் பணிந்து ஒழுங்கான முறையில் நடக்கவேண்டியது கடமையாகும். ஒரு பெண் ஒருவர்க்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப் படுகிறாள். இறந்துபோன மூத்தமனைவிக்குச் சில மக்கள் இருந்தால் அந்த ப்ரஜைகளின் போஷணையும் இந்த இளையமனைவிக்கே கடமையாகிறது. உண்மையில் அந்த ப்ரஜைகளிடத்தில் இவளுக்கு அன்புநிலை அளம்பாவிதமானாலும் கைப்பிடித்த கணவனது முகமலர்ச்சிக்காக அந்த ப்ரஜைகளிடத்தில் மிக்க அன்பு காட்டிக் கணவனேடொப்ப அக்குழந்தைகளையும் போஷித்து நல்ல புகழ் பெறுகின்றாள். அதே முறைமையை இங்கும் ஆவாஹனம் செய்துகொள்ளவேண்டும்.

82. பிராமாணிகர்களாய் கம்பீரப்ரக்ருதிவாய்ந்தவர்கள் தாம் ஏற்றுக்கொண்ட பதவியைச் சிறிதும் பழிப்புக்கிடமில்லாதபடியே யசஸ்கரமாகவே நடத்திக்கொண்டுவருகிறார்கள். ஒரு நிதர்சனம் காட்டுகிறேம். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே அஸாதாரணமான திவ்யப்ரபந்த பாராயணம் முதலிய சிலவிஷயங்களில் வழக்குகள் உண்டாகி நியாயாலயங்களுக்குப் போக நேர்ந்திருக்கிறது; முன்ஸீப் கோர்ட்டு ஜில்லாகோர்ட்டு ஹைகோர்ட்டு பார்லிமெண்டு என்னப்படுகிற எல்லா நீதிமன்றங்களிலுமே மூடி வழக்குகள் சென்றிருக்கின்றன. ஒவ்வொரு நீதிமன்றத்திலும் வழக்குகளைப் பரிஷ்காரம் செய்தவர்கள் பெரும்பாலும் ஸ்ரீவைஷ்ணவரல்லாதாரும் பிராமணரல்லாதாருமே. அவர்களெல்லார்க்கும் திவ்யப்ரபந்தங்களில் அப்ரதிபத்தியும் விப்ரதிபத்தியும் இயற்கையாகவுண்டு. கோவில்களில் திவ்யப்ரபந்த பாராயணங்களை அறவே நீக்கிவிடவேணுமென்கிற அபிப்ராயமுடையாரது வகுப்பில் சேர்ந்தவர்களே அவர்கள் பெரும்பாலும். ஆயினும், நீதிபதிஸ்தானத்தை வஹிக்கின்ற நாம் நியாயப்படாதாக நடந்துகொள்வது கூடாது என்கிற தருமத்திற்குக் கட்டுப்பட்டே அவர்கள் திவ்யப்ரபந்தங்களுக்கு விஷ்ணுவாலயங்களிலுண்டான கௌரவத்தைச் சிறிதும் போக்காமல் அநாதியான வழக்கங்களை உண்மையான ரிகார்டுகளினாலும் பல முகாந்தரங்களினாலும் தெரிந்துகொண்டு நீதி நன்னெறியையே செலுத்தியுள்ளார்கள். திவ்யப்ரபந்த பாராயண விஷயமாக கோர்ட்டுகளில் வழக்கு உண்டாகப்பெற்ற விஷ்ணுவாலயங்கள் மிகச் சிலவேயாகும். உண்டான வழக்குகளைத் தீர்த்தவர்கள் ஸ்மார்த்தர்களும் மாத்வர்களும் ஜைனர்களும் யவனர்களும் கிறிஸ்தவர்களுமே பெரும்பாலுமாவர். அவர்கள், தங்களுடைய சொந்தக்கொள்கைக்கு மதிப்புக்கொடுத்து நீதிநன்னெறிக்குமாறாக ஜட்ஜ்மெண்டுகள் எழுதியிருந்தார்களாகில் திவ்யப்ரபந்தங்கள் மறைந்தே போயிருக்கும். அவ்வதிகாரிகள்யாவரும் திவ்யப்ரபந்தமே அர்ச்சாவதார வேதமென்கிற உண்மையை உள்ளபடி உணரப்பெற்று எள்ளளவும் நியாயவிபரீதம் செய்யாமல், தங்களுடைய சொந்தக் கொள்கையை வெகு தூரத்தில் விலக்கி உண்மையான நீதிபதிகளாய் நடந்துகொள்ளவேதான் திவ்யதேசங்களில் திவ்யஸூரிகளின் பெருமைகளும் திவ்யப்ரபந்தங்களின் பெருமைகளும் "படிக்குப்பாதி" என்கிற முறையிலாவது விளங்கிக்கொண்டிருக்கின்றன.

83. அப்படிப்பட்ட ஆலயங்களுக்கு தர்ம நிர்வாஹகர்களாய் நியமிக்கப்பட்டு வந்து கைங்கரியம் பார்க்கின்ற டிரஸ்டிகளும் அந்த நியாயத்திற்குக் கட்டுப்பட்டு அந்தப்பெருமைகளுக்குச் சிறிதும் குறை ஏற்படாதபடிக்கு தர்ம பரிபாலனஞ் செய்துபோகவேண்டியதே கன்மையாகும்; கடமையுமாகும். ....

பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

acharya.org

பதினேராவது அத்யாயம்—அத்யாபக வ்யவஹாரதத்வம்.

84. கி. பி. 1842ல் இந்த தேவஸ்தான நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்ட தாதாசாரியர்கள் 1865 ஆம் வருஷத்தில் அத்யாபகஸம்பந்தமாக விஷமங்கள் செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது, ஸர்க்கார் மதவிஷயங்களில் பிரவேசிப்பதில்லையென்றுகொண்டு அதை பஹிரங்கப் படுத்தியிருந்தார்கள். அதனால், நாம் எது செய்தாலும் கேட்பாரில்லையென்று துணிவு பூண்ட தாதாசாரியர்கள் 1865ல் ராமாநுஜாபாத்ரம் சொல்லி தாங்கள் தனியாகவே பிரபந்த சேவாகாலம் செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது தென்கலையார்கள் தாவா செய்ய, ஜாயிண்டு மேஜிஸ்ட்ரேட் மிஸ்டர் பர்னல்துரை "தர்மகர்த்தாக்களிஷ்டம்" என்று சொல்லி தாவாவைத் தள்ளிவிட்டார். அதன்மேல் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது. 1867ஹு கி. செ. 66ல் ஜட்ஜுகள்—மிஸ்டர் ஹால்வே, மிஸ்டர் யன்னீஸ் துரையவர்கள், "தர்மகர்த்தாக்களுக்கு கோவில் கட்டிடங்களைக் காப்பாற்றவும் உப்பு புளி வாங்கிப்போடவும் அதிகாரமேயொழிய வழக்கவிரோதமான காரியங்களைச்செய்யவோ செய்விக்கவோ அநுமதிக்கவோ உரிமையில்லை; ஆதலால் இந்த தாவாவை ஸ்ரியாய் விசாரித்து முடிவு செய்யவேண்டியது" என்றெழுதி விசாரணைக்கு ரிமாண்டு செய்தார்கள். ஜாயிண்ட் மேஜிஸ்ட்ரேட் ஏதோ சாக்கு சொல்லி மறுபடியும் தாவாவைத் தள்ளிவிட்டார். பிறகு தென்கலையார் செங்கற்பட்டு ஜில்லா கோர்ட்டில் தாவா செய்ய, ஜில்லாஜட்ஜும் மதவிஷயத்தில் தலையிடமாட்டோமென்று தள்ளிவிட்டார். ஹைகோர்ட்டாரும் அதைக் காயம் செய்துவிட்டார்கள்.

85. பிறகு தென்கலையார் ஸிமைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள ஹைகோர்ட்டாரிடம் ஸாங்ஷன் கேட்க, அதுவும் அனுமதிக்கமுடியாதென்று தள்ளப்பட்டது. பிறகு தென்கலையார் நேரே பார்லிமெண்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். அப்போது திருப்புட்குழியப்பா தாதாசார் ஸ்வாமிகள் வைகுண்ட அப்பீல் என்று பரிஹாஸம் செய்துகொண்டிருந்தாராம். அந்த ஸிமையப்பீலுக்காக ஸம்மன்வந்து அவரிடம் ஸார்வு செய்யப் போனபோது 'இது என்ன?" என்று அவர் கேட்க, "வைகுண்ட அப்பீலென்று ஸாதித்ததே; அந்த வைகுண்டத்திலிருந்து நித்யமுக்தர்கள் இது கொண்டுவந்திருக்கிறார்கள்; திருவெழுத்து சாத்தி ஸ்வீகரித்தருளவேணும்" என்று ஸ்ரீமத். ஈச்சம்பாடி நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி ஸாதிக்க, திருப்புட்குழி ஸ்வாமி திருவெழுத்து சாத்தி ஸம்மான ஸ்வீகரித்தார். ஷி பார்லிமெண்டு அப்பீலில் என்ன முடிந்ததென்றால் "தென்கலையாருடைய அத்யாபகமிராசானது வருமானமுள்ளதென்று தெரியவருகிறபடியால் வரும்படியுள்ள மிராசு பாத்தியங்களை ஸர்க்கார் காப்பாற்றிக்கொடுக்கவேண்டியது அவசியமே; ஆதலால் இதை பூர்த்தியாக விசாரணை செய்து நியாயம் செலுத்தவேண்டியது" என்று முடித்து புநர் விசாரணைக்கு ரிமாண்டு செய்யப்பட்டது.

86. அப்போது வடகலை தாதாசாரியர்கள் விசித்திரமான ஆன்ஸர் போட்டார்கள்; "காஞ்சீபுரத்துத் தென்கலையார் எல்லாருக்கும் அத்யாபகபாத்யதை இல்லை, நாலைந்து பேர்களுக்குத்தானுண்டு; அதுவும் பெருமாள் ஸன்னிதியில் மட்டுமேயுள்ளது. மற்றவிடங்களில் இல்லை; சிலகாலங்களில் இல்லை; அவ்வளவு வருமானம் கிடையாது; அவர்களை நாங்கள் தள்ளியும்விட்டோம்" என்று இதுமுதலானவற்றைக்கண்டு ஆன்ஸர் கொடுத்தார்கள். [இடையில் ஒரு விஷயம்.] அதற்கு முன்னே தென்கலையாரை உள்ளேவிடாமல் தடுப்பதும் செய்தார்

acharya.org

கள். அப்போது தேவஸ்தானத்திலிருந்து வருஷம் இரண்டாயிரம் ரூபா செலவு செய்து 10 போலீஸ் கானிஸ்டேபில்களை கோபுரவாசலில் 4-ஐ காவல் வைத்திருந்தார்கள். பார்லி மெண்டில் ரிமாண்டு செய்யப்பட்டபிறகே போலீஸ்காவல் எடுபட்டது.

87. பிரிவிகவுன்ஸில் அத்யாபக அப்பீல் 22—3—1879ல் கீழ்க்கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்யப்பட்டவகையில் கோர்ட்டு காஸ்ட் 140 பவுன், 13 ஷி. 4 பென்சு.

88. இதன் பிறகு ஹைகோர்ட்டு வரையிலுள்ள ஸகல நியாயாலயங்களிலும் லிவில் கிரிமினல் ஆகிய இரண்டுவழிகளிலும் முடிவுபெற்ற வியாஜ்ஜியங்கள் அனேகங்கள். அவை களில் தென்கலையார்களே வாதிகளாகச் சென்று, தாதாசாரியர்களாலும் இதரர்களாலும் சேர்ந்த கஷ்டங்களை முறையிட்டு நியாயம் பெற்றார்கள். ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை நாமும் ஆனந்தமாக அநுபவிப்போமென்கிற நல்லெண்ணம் சிறிதுமில்லாமல் ஹிம்ஸைபண்ணித் தொலைக்கவேணுமென்கிற கெட்ட எண்ணங்கொண்டும், மாமூல் வழக்கங்களை மாறுபடுத்தி யதேஷ்டமாக நடந்துகொள்ளவேணுமென்று கருதியும் தூராக்ருதமாகவே நடந்துகொண்ட தாக அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு இது பல ரிகார்டுகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு எந்தவழியிலும் பங்கமேயாயிற்று. கடைசியாக அத்யாபகவ்யவ ஹாரம் முடிந்தவிதம் இனி ஸங்க்ரஹிக்கப் படுகிறது.

89. அனேக வருஷகாலம் மும்மரமாக நடந்து கொண்டு வந்த இந்த அத்யாபக வ்யவஹாரமானது 13—9—1938 தேதியோடு நிச்சேஷ சாந்தி பெற்றதாயிற்று. தூப்புல் விளக்கொளி ஸன்னிதியுட்பட ஸ்ரீ தேவராஜஸ்வாமி ஸன்னிதியில் காஞ்சீபுரம் ஸ்ரீவாலிக ளான ஸகலதென்கலையார்களும் அத்யாபகைங்கரியபரராகுதாரர்களென்றும், ஸ்ரீசைலேசதயா பாத்ரமந்த்ரம் தான் அநுஸந்திக்கத்தக்கதென்றும், வடகலையார்கள் விரும்பினால் இந்த கோஷ்டியில் ஸாதாரண ஸேவார்த்திகளாய்க்கலந்து தென்கலையார்களுடைய கட்டுதிட்டங்களுக்குட் பட்டு அவர்கள் ஸேவிக்கிற மந்த்ரப்ரபந்தங்களையே ஸேவிக்கலாமே தவிர, வேறு தனிகோஷ்டி யாக திவ்யப்ரபந்தம் ஸேவிக்கக்கூடாதென்றும் 38 வருஷங்களுக்கு முந்தியே ஹைகோர்ட்டு தீர்ப்பு ஏற்பட்டது. அதன்பிறகு வடகலையார்கள் மறுபடி தென்கலை கோஷ்டியில் சேர ஆரம் பித்துப் பல வீண்கலஹங்களை யுண்டுபண்ணி, அதனடியாக அனேக கிரிமினல் கேஸுகளுக்கு இடமுண்டாயிற்று. மறுபடி கேஸ்களிலும் வடகலையார்பலர்க்கு அபராதங்களும் தேஹதண்டனை யும் ஏற்பட்ட பின்பு ஒருவாறு கலஹம் சாந்தமாயிற்று. பிறகு வடகலைபார்கள் காஞ்சி. டி. மு. கோர்ட்டில் ஒரு காவா தொடுத்தார்கள். இதில் முக்கியமானவை மூன்று விஷயங்கள்:— (1) தென்கலை அத்யாபககோஷ்டியில் முன்வரிசைகளில் நாங்களும் கலந்துசெல்ல பாத்யதை உடையவர்கள்; இப்படியிருந்தும் எங்களை க்ரிமினல் கோர்ட்டார் அடிக்கடி 144 ஸெக் ஷன்படி ஆர்டர்களினால் தடைசெய்து எங்களைக் கஷ்டப்படுத்திவருகிறார்கள்; இந்த கஷ்டத்தை நிவ்ருத்தி செய்யவேணும். (2) தென்கலையார்கள் ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் என்கிற தனியன் மாத்திரம் சொல்லி உடனே ஆழ்வார்களின் பிரபந்தங்களை ஸேவிக்கவேணுமேயல்லது, மற்ற ஆழ்வாராசாரியர்களின் தனியன்களையாவது, மணவாளமாமுனிகளின் உபதேசரத்தினமாலை முதலிய திவ்ய ப்ரபந்தங்களையாவது, மணவாளமாமுனிகள் விஷயமான வாழித் திருநாமத்தை யாவது சொல்லக் கூடாதென்று தடையுத்தரவு பிறப்பிக்கவேண்டும். (3) தென்கலையார்கள் எந்தவேளையிலும் திவ்யப்ரபந்த ஸேவா காலமென்று பிரபந்தத்தைச்சொல்லி இதர கைங்கர்

acharya.org

யங்களுக்கு இடைஞ்சல் உண்டுபண்ணுகிறார்கள். அப்படி செய்யாதபடி பிரபந்த சேவா காலத்திற்கு காலநியமம் பண்ணவேணும்." என்பதாக.

90. இந்த மூன்று விஷயங்களில் பரிஹாரமடைவதற்காகவே வடகலையார்கள் தாவா பண்ணினார்கள். இந்த விஷயங்களில் பரிஹாரம் கொடுக்க நியாயமில்லையென்றும், தென்கலை கோஷ்டியில் முன் இரண்டு வரிசைகளில் வடகலையார்கள் பிரவேசிக்கக்கூடாதென்றும், மிராசுதாரர்களான தென்கலையார்கள் உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஸகல தனியன்கள், வாழித்திருநாமங்கள் எல்லாம் மாமூல் வழக்கப்படி ஸேவிக்க அதிகாரமுள்ளவர்களாகையால் அதைத் தடைசெய்ய முடியாதென்றும், திருவாராதனத்திற்காக மணியடித்ததுமுதல் தீர்த்தப்ரஸாத விநியோகம் வரையில் திவ்யப்ரபந்த ஸேவை பண்ணுவதற்குக் காலமென்று முன்னமே தீர்ந்திருக்கிறபடியால் இதில் இப்போது விசாரம் எடுத்துக் கொள்ளவேண்டிய பிரமேயமேயில்லையென்றும் ஏற்கெனவே இரண்டு கோர்ட்டுகளில் தீர்ப்பாகி வடகலையாருடைய தாவா கோர்ட்டுகாஸ்டுடன் தள்ளுகடை செய்யப்பட்டிருந்தது. அது சென்னை ஹைகோர்ட்டில் ஸெகண்டு அப்பீலாக வந்திருந்து கனம் ஜட்ஜ் வார்ட்ஸ்வோர்த் துரையவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கோர்ட்டுகளில் முடிவானபடிகனே விரிவாக எழுதி 13-9-38ல் கோர்ட்டு காஸ்டுடன் அப்பீல் தள்ளப்பட்டது. ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் வடகலைதரப்பிலும், ஸ்ரீ வி. நரஸிம்ஹாசாரியர் தென்கலை தரப்பிலும் வாதித்தார்கள்.

91. கீழே முடிந்த ஹைகோர்ட்டு தீர்ப்புக்குப் பிறகு அத்யாபக கைங்கரிய விஷயத்தில் விவாதம் அடங்கிவிட்டது எனினும் "ஏதத் தத் புநரபி தைவதுர்விபாகாத் ஆலர்க்கம் விஷமிவ" என்று உத்தரராமசரிதத்திலே பவபூதி சொல்லுகிற ரீதியில் சிற்சில ஸமயங்களில் நாய்க்கடி விஷம்போல் தலைகாட்டிவருவதுண்டு. நேற்று ஜயஹே புரட்டாசி மாதத்தில் தேசிகன் சாத்துமுறையன்று அதர்க்கண சேஷ்டிதமொன்று ஆரம்பித்து எண்டோமெண்டு போர்டில் உத்தமாதிகாரிகளால் இது தவறுன செயல் என்று கண்டிக்கப்பட்டிருக்கிறது. எதாவது கலஹத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கவேணுமென்றே தீக்ஷையுடனிருப்பவர்கள் சிலருளர். தேசிகன் "நன்றே வருவதெல்லாம் நமக்குப் பரமொன்றிலே" என்பதை அமிருதரஞ்சனியிலும் அத்திகிரிமாகாத்மியத்திலுமாக இருமுறை பேசியிருப்பது கண்டிருப்பார்க்குக் கவலை எதுமில்லை. அதற்கணக்கிளர்ச்சி எது தோன்றினாலும் சேஷமாயவே. இது நெடுநாளாக அநுபவத்தில்கண்ட விஷயம்.

பதினேராம் அத்யாயம் முற்றிற்று.

பன்னிரண்டாமத்யாயம்—ஸர்க்கார் ரிகார்டுகளால் உண்மையை விளக்குதல்.

92. இதுகாறும் நம்முடைய ஸொந்த வார்த்தைகளால் இந்த வரலாற்றுநூல் எழுதப்பட்டு வந்தது; ஆனாலும் ஒவ்வொரு விஷயமும் ஸப்ரமாணமாகவே நிரூபிக்கப்பட்டிருப்பதால் மத்யஸ்தர்கள் எந்த விஷயத்திலும் அத்ருப்தியடையக் காரணமில்லை. சில முக்கியமான விஷயங்களுக்கு நியாயஸ்தான ரிகார்டுகளை அப்படியப்படியே எடுத்துக்காட்டினால் இன்னமும் பரமத்ருப்தி ஏற்படுமென்று தோன்றி இனிச் சில ரிகார்டுகள் காட்டி அவற்றின் ஸாரம்சங்களையும் மொழிபெயர்த்தெழுதுகிறோம். இவற்றால், இந்த தேவஸ்தானத்தை முன்பு நிர்வஹித்துவந்த தாதாசாரியர்களின் பிரபாவங்களும் மற்றும் பல மருமங்களும் நன்கு வெளியாகும். இதுவே வியாஜமாக மற்றும் பல ரிகார்டுகள் க்ரமேண வெளிவரும்.

acharya.org

93. நம்மாழ்வார் சன்னிதியை வடகலையாக்க முயன்றபோது.

In the Court of the additional Dt. Munsiff of Chingleput.

O. S. Nos. 6 & 7 of 1912.

Present:—M. R. Ry. R. V. Krishna Ayyar M. A , B. L.,
Additional Dt. Munsiff.

Monday 31—8—1914.

Paras 106 to 113 களில் உள்ள விஷயம்.

"In this connection, the facts which immediately gave rise to and culminated in this litigation become pretty important. .....The plaintiff's case is that at a time when the outer gates of the temple were closed for the purpose of restraining a temple elephant which had gone mad, the Vadagalais forcibly entered the suit shrine and carried away the Utsavar idols of Nammalwar and his attendants with a view to alter their namams. The defendants, on the otherhand, state that in connectlon with Pagalpathu festival .....it was usual to take Nammalwar idols up the hill every year and that it was in accordance with the custom, and not for any sinister purpose that the idols were removed from the suit shrine..... The parties have consequently adduced a very considerable body of evidence in respect of the events of the 27th of December 1908 and the following days.

It appears to me to be unnecessary to discuss this evidence at length, and I will content myself with stating a few facts established by it.

There were immediately complaints by the plaintiffs to the Police and Magistrate against the Vadagalais whose motives were then and there attacked as improper. The police forthwith appeared on the scene with Sub-Inspector Neelakanta Iyer, P. W. I, at their head. Neelakanta Iyer discovered the idols in the uphill-shrine and on the same day drew up the mahazar, Exhibit A, in the presence of the Vadagalai Receiver and several others. In that mahazar, there is reference to the fact that, though the idols, for the time being, wore Vadagalai Namams, yet, when washed out and inspected they contained doubtful Thengalai traces. As regards the Plaintiff's complaint to the Magistrate it ended in the conviction of several of the Vadagalais Exibit N. One of the grounds on which the conviction was upheld on appeal was that the vehicle called Tholukkinian on which, if the idols had been removed in connection with the festival they must have been carried, was found on inspection to have been totally unused. Now

acharya.org

all these facts, the immediacy of the Plaintiff's complaints, the alleged Thengalai traces on the idols, the unused character of the Tholukkinian greatly probablise the Plaintiff's version of a forcible removal.

Side by side with these facts there is also the incredibility of the justification attempted by the Defendants for the removal of the idols in question. From exibits L, EE. GG, and RR and from the oral evidence in the case it is clear, that, **for long years**, the Alwars and Acharyars have never taken part in the Pagalpattu festival at Conjeeveram. As regards the suit year itself, the receiver had **admittedly** not given any permission to carry the idols up hill. It is therefore impossible to suppose that the Defendants' removal of the idols from the Nammalwar shrine was a bonafide act done in the ordinary course of the Pagalpathu festival.

On 28—12—1908 the idols were restored to the suit shrine by an order of the stationary Sub-Magistrate of Conjeeveram.

But the police continued to guard the shrine until 6—1—1909. On that day, the shrine itself was handed over to the Plaintiffs and a mahazar, Exhibit T, was drawn up. In that mahazar it is stated that the Moolavar of the Nammazhwar had clearly visible Thenkalai Namam on his forehead, that Thenkalai Namams were also found on various articles and vessels within the shrine and on the Brindavanam opposite to it and that the namams on Mathurakavi and Nathamuni were not clearly visible. It is agreed, by the way, that Mathurakavi and Nathamuni could not have namams different from what Nammalwar wore.

....

It is unnessary to discuss the Namam question further.

From all the facts and the circumstances of the case, it is conclusively established that the namams customarily worn by Nammalwar and his attendant deities were only Thengalai namams and not Vadagalai namams."

இதன் ஸாரமானகருத்து கீழ்வருமாறு:—

94. இந்த சந்தர்ப்பத்தில் இந்த வியாஜ்ஜியம் ஏற்பட்டதற்கு முன் நடந்த விஷயங்களைக் கவனிக்கவேண்டியது முக்கியமாகிறது. (தென்கலை) வாதிகளின் வழக்கு என்னவென்றால்:— "கோவிலின் யானைக்கு மதம்பிடித்து கோபுரவாசலின் கதவுகளை மூடியிருந்தபோது வடகலை யார்கள் பலவந்தமாக நம்மாழ்வார் சன்னிதிக்குள் நுழைந்து, திருமண்காப்புகளை மாற்றுவதற்

acharya.org

காகவே நம்மாழ்வாருடையவும் அவருடன் சேர்ந்திருந்தவர்களுடையவுமான" (நாதமுனிகள் மதுரகவிகள்) விக்ரஹங்களை அப்புறப்படுத்திக் கொண்டு போய்விட்டார்கள். இதற்கு மாறுக பிரதிவாதிகள் (வடகலையார்) பகல்பத்து உத்ஸவம் நடத்துவதற்கே வழக்கம்போல் ஷி விக்ரஹங்களை எள்ளப்பண்ணிக்கொண்டு போனதாகச் சொல்லுகிறார்கள். இருதரத்தாரும் 27—12—1908ல் நடந்த சம்பவத்தைப்பற்றி அனேக சாக்ஷியங்களையும் ரிகார்டுகளையும் கொடுத்திருக்கிறார்கள். இவைகளால் ருஜுவான விஷயங்கள் கீழ்வருமவை:— அன்றைய தினம் உடனே போலீசாரிடத்திலும் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையிலும் வடகலையாரின் பேரில் பிராதுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சப் இன்ஸ்பெக்டர் நீலகண்டய்யர் உடனே சில போலீஸார்களுடன் கலகம் நேர்ந்தவிடத்திற்குச் சென்றிருக்கிறார். நீலகண்டய்யர் ப்ரஸ்தாப விக்ரஹங்களை ஷி தேவஸ்தானத்தின் மஹிமேல் கண்டு பிடித்தார். உடனே ஒரு மஹஜர் (exibit A.) வடகலை ரெவீவர் (தோ. ரா.), சில பிரமுகர்கள்முன்பாக தயார் செய்தார். அந்த மஹஜரில் அந்தசமயம் தாற்காலிகமாக ப்ரஸ்தாப விக்ரஹங்களில் வடகலை நாமம் சாற்றப்பட்டிருந்தாலும் விக்ரஹங்களை அலம்பி பரிசோதித்தபோது தென்கலை யென்று சந்தேஹிக்கக் கூடிய சின்னங்களிருந்தன வென்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த கேஸில் அனேக வடகலை யார்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அப்பீலிலும் காயமானதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், ப்ரஸ்தாப விக்ரஹங்களை எள்ளப்பண்ணிக்கொண்டு போவதற்காக உபயோகிக்கப்பட்டதாய்க் காட்டப்பட்ட தோளுக்கினியான் வெகுகாட்களாக உபயோகப் படுத்தாமலிருந்ததாக நிரூபிக்கப்பட்டதும், உடனுக்குடனே பிராது கொடுக்கப்பட்டதும், தென்கலை சின்னங்கள் காணப்பட்டதுமாம். இவைபோன்றவைகளைக் கவனித்தால் பலவந்த மாக ஷி விக்ரஹங்களை அபஹரித்ததாகவே கொள்ளவேண்டியிருக்கிறது. இந்த விஷயங்க ளோடு இதையும் கவனிக்கவேண்டும். Exibit L, EE, GG, and RR. இந்த ரிகார்டு களிலிருந்தும் வாக்குமூலங்களிலிருந்தும் ஆழ்வார் ஆசாரியர்களின் பகல் பத்து உத்ஸவம் அனேக வருஷங்களாக நிறுத்தப்பட்டிருந்தது ஏற்படும்; ப்ரஸ்தாப வருஷத்திலேயும் விக்ரஹங்களைக் கொண்டுபோய் பகல்பத்து உத்ஸவத்தை நடத்தும்படி உத்தரவிடவில்லை யென்றே ரிஸீவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகையல் பகல்பத்து உத்ஸவத்திற்கு இந்த விக்ரஹங்களைக் கொண்டுபோனதாகச் சொல்வது அடியோடு நம்ப முடியாது. காஞ்சீபுரம் ஸ்பேஷனரி சப்மேஜிஸ்ட்ரேட்டின் உத்தரவின்பேரில் 28—12—1908ல் அந்த விக்ரஹங்கள் நம்மாழ்வார் ஸன்னிதிக்கே திரும்பக்கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன; ஷி ஸன்னிதி யைப் போலீஸார் 6—1—1909 வரையில் பாராபோட்டு காத்துக்கொண்டிருந்தார்கள். அன்றையதினம் வாதிகளிடம் ஷி ஸன்னிதி ஒப்புவிக்கப்பட்டபோது ஒரு மஹஜர் தயார் செய்யப்பட்டது. அந்த மஹஜரில் நம்மாழ்வாரின் மூலவருக்குத் தென்கலை திருமண்காப்பே வெகு ஸ்பஷ்டமாகப்பார்க்கலாம்படி இடப்பட்டிருந்ததென்றும், மற்றும் பாத்திரங்கள், சாமான்கள் முதலியவற்றில் தென்கலை நாமங்களே இருந்தன வென்றும், ஆழ்வார் ஸன்னிதியி லுள்ள (கருங்கல்) ப்ருந்தாவனத்தில் தென்கலை திருமண்காப்பே யிருந்ததென்றும் கூறப்பட் டிருக்கிறது.

இதற்குமேல் இந்த நாம விஷயத்தைப்பற்றி விவரிப்பது அனுவசியம். நடந்த விஷயங் களையும் சூழ்நிலைகளையும் கொண்டு நம்மாழ்வாரும் அவரைச்சேர்ந்த விக்ரஹங்களும் தொன்று தொட்டுள்ள ஆசாரப்படி தென்கலையே என்பது முடிவாக நிர்ணயிக்கப்பட்டு விட்டது. இவை வடகலை யல்ல.

acharya.org

ஆழ்வாராசாரியர்களின் பகல்பத்து உத்ஸவாதிகளையும் புறப்பாட்டு உத்ஸவங்களையும் வடகலை தாதாசார்ய தர்மகர்த்தாக்கள் நிறுத்தியகாரணம் S. A. Nos. 137, 138 and 269 of 1902 (on the file of the High Court)ல் T. M. ஸ்வாமிநாத அய்யர் நிர்ணயம் (finding) பாரா 17ல் கூறியுள்ளது யாதென்றால், ஆழ்வாராசாரிய விக்ரஹங்களுக்கு புறப்பாடு உத்ஸவம் நடத்தி மணவாளமாமுனிகளுக்கு உத்ஸவம் நடத்தாவிட்டால் விரோதமாகவும் சங்கடமாகவும் இருக்குமே என்ற காரணத்தைக் கொண்டே எல்லா பக்த விக்ரஹங்களுக்குமே ஷை உத்ஸவத்தை இக்கோவிலில் நடத்துவதை நிறுத்திவிட்டார்கள். ("It is also clear that seeing how strange and unsound the theory that Manavala Mahamuni is not entitled to any procession will look when the other Alwars and Acharyas has such processions The plaintiffs (Vadagalai Thathachar trustees) have evidently thought it best to stop such processons to all for the present" இது ஹைகோர்ட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. .... (12.)

பதின்மூன்றும் அத்யாயம்—இதுவும் ரிகார்டுகள் காட்டுவது.

தேவராஜஸ்வாமி சன்னிதியிலுள்ள தென்கலை பாத்யதைகள் விஷயம்.

In the High Court of Madras.

A. S No. 212 of 1909.

JUDGMENT 26—4—1912.

by Hon'ble Mr. Justice Abdur Rahim &

,, ,, ,, Sundara Iyer.

பதினோராவது பேஜில் இரண்டாவது பாராவில் கூறியுள்ளவை:—

"We are, however, of opinion that, having regard to the past management of the temple, it is desirable to provide some authority to supervise the administration by the trustees. Several members of the Thengalai community hold offices in the temple, and the Thengalai, as a body, have important interests connected with it It has been decided that the invocation before the recitation of the Prabandam or Thirvoimozhi in the temple should be addressed to the Thengalai Saint, Manavala Mahamuni. The Thengalais possess the right to the Adhyapakam office. These rights led to long litigation between the Thengalai and Vadakalai communities (see Krishnaswami Thathachariar V. Krishnamachar I L. R, 5 Madras 313). There is a shrine of Manavalamahamuni within the precints of the temple as well as a shrine of Nathamuni,..... The Thengalai own the right to a good proportion of the Thirtam offices. Many of the Namams in the temple are Thengalai namams. The Thengalais have also the right of Asirvadam and a Thengalai is entitled to the office of Mulji Dharmakarta. All these have led to constant disputes and litigation between the communi-

acharya.org

ties and it is complained with reason that the fact that all the trustees are Vadagalais has tended to impede the vindication of the rights of the Thengalais and the Thengalai office holders. ... .

It is also urged that the Thathachar Dharmakartas have repeatedly attempted to introduce innovations contrary to the interests of the Thengalais. They attempted to introduce an idol of Thathachar but the attempt failed. ... .

We have therefore considered it desirable, in appointing a Board of Supervision, to provide that one of the members of the Board should be a Thengalai gentleman not holding any office in the temple."

இதனுடைய ஸாராம்சம்வருமாறு:— (தமிழ் மொழிபெயர்ப்பு.)

முதலில் தோன்றிய வ்ஸீம்வஸூட்டை முடிவு செய்த ஹைகோர்ட்டு ஜட்ஜுகளான (கனம்) அப்துல் ரஹிம் & ஸுந்தரமையர் இவர்கள் எழுதியிருப்பது—

"தென்கலையாருக்கு அனேக முக்கியமான பாத்யதைகள் ஷை தேவஸ்தானத்தில் இருக்கின்றன. திருவாய்மொழி முதலிய ப்ரபந்தங்கள் தொடங்கும்போது தென்கலை யாசார்யராகிய மணவாளமாமுனிகளின் தனியனைச் சொல்லியே எப்போதும் தொடங்கவேண்டியதென்று கோர்ட்டுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அத்யாபக ஆபீஸ் தென்கலையார்களுடையதே. தேவஸ்தானத்திற்குள்ளேயே தென்கலை ஆசார்யர்களான மணவாளமாமுனிகளின் ஸன்னிதியும் நம்மாழ்வார் ஸ்ரீமன் நாதமுனிகளின் ஸன்னிதியும் இருக்கின்றன. தீர்த்த மிராசு பாத்யதைகளில் ஒரு பெரும்பாகம் தென்கலையார்களுடையதே. ஷை தேவஸ்தானத்திற்குள்ளிருக்கும் திருமண்களில் அனேகம் தென்கலை திருமண்காப்புகள் உள்ளன. அனேக தென்கலையருக்கு ஆசீர்வாத பாத்யதைகளும் உண்டு. மல்ஜிதர்மகர்த்ருத்வம் ஒரு தென்கலை ஸம்ப்ரதாயஸ்தரையே சேர்ந்தது. தென்கலையாருக்கு இவ்வளவு பாத்யதைகள் ஷை தேவஸ்தானத்தில் இருப்பதாலும் தர்மகர்த்தாக்கள் எல்லாரும் வடகலையாயிருப்பதாலும் தென்கலையார்கள் தங்களுடைய பாத்யதைகளைச் சரிவர அனுபவிக்கமுடியாமல் இருக்கும்படி தடைசெய்யப்படுகிறார்கள் என்று தகுந்த காரணத்துடன் நிரூபணத்துடன் குறை கூறப்படுகிறது இது அனேக கிளர்ச்சிகளுக்கும் கோர்ட்டு விவகாரங்களுக்கும் இடம் தந்திருக்கிறது. தென்கலையார்களின் பாத்யதைகளுக்கு விரோதமாக அனேக புதிய ஆசாரங்களை வடகலை தாதாசார்ய தர்மகர்த்தாக்கள் நுழைக்க அடிக்கடி முயற்சி செய்கிறார்களென்று வற்புறுத்தப்படுகிறது. ஒரு தாதாசார்ய விக்ரஹத்தை புதியதாய் கோவிலில் ஸ்தாபிக்கச் செய்த முயற்சி பலிக்கவில்லை. இக்காரணங்களைக்கொண்டு தாதாசார்ய தர்மகர்த்தாக்களுக்குமேல் நாங்கள் ஏற்படுத்தவிருக்கும் Board of Supervisionல் ஒரு தென்கலை சம்ப்ரதாயஸ்தர் இருக்க வேண்டுமென்று கருதி அப்படியே தீர்மானித்திருக்கிறோம்".

acharya.org

95. கனம் ஹைகோர்ட் ஜட்ஜ்கள் இந்த தேவஸ்தான ரிகார்டுகளை யெல்லாம் ஆர அமரப் பரிசீலனை செய்தே மேலே குறித்த வாசகங்களை எழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதியிருக்கிற விஷயங்களெல்லாம் நடைமுறையில் நன்கு காண்பவையே. "தீர்த்த மிராசு பாத்யதைகளில் பெரும்பாகம் தென்கலையாருடையதே" என்றதில் ஐயமுண்டோ? பிற்காலத்தில் கலாபரிபாலயமடைந்த தாதாசாரியர்கள் தவிர மற்ற ஸகல தீர்த்தகாரர்களும் தென்கலையார்களே. மலையாளநாச்சியார் ஸன்னிதிக்கு எதிரில் திருமலை ப்ராகாரத்தில் ஒரு கல்வெட்டு இருப்பதை நாமெல்லாரும் யாவரும் எளிதில் காணலாம்; அதாவது, வாதிபீகர ரக்ஷாசக்ரம் என்று மகுடம் கொடுத்து பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீரங்காசாரியர்க்கு முதல் தீர்த்த அருளப்பாடு என்று ஸ்பஷ்டமான எழுத்திலுள்ளது. இது உயரத்திலில்லை. தரையில் நின்றுகொண்டு சுகமாக வாசிக்கலாம். இது கோர்ட்டு தஸ்தாவேஜுகளில் எறியிருப்பதால் இதை யழிக்க முயன்றும் பயனில்லை. தாதாசாரியர்களுக்கு இங்கே தீர்த்தமிராசு எப்போது கிடைத்தது எவ்வண்ணம் கிடைத்தது என்பது பற்றின நிரூபணங்கள் அடுத்த பிரசுரத்தில் விரிவாக வெளிவரும். அவற்றை அட்வகேட் அவர்களே வெளியிட்டிருக்கலாம்.

96. மேலே குறித்த கனம் ஹைகோர்ட் ஜட்ஜுகளின் தீர்ப்பில் அடுத்த வாக்கியம் என்னவென்றால் "மேடி தேவஸ்தானத்திற்குள்ளிருக்கும் திருமண்களில் அனேகம் தென்கலைத் திருமண்காப்புகள் உள்ளன" என்பதே. அந்த தாவாவில் எக்ஸிபிட்டாக தாக்கல் செய்யப்பட்ட திருமண் ரிகார்டுகள் பலவற்றையும் ஜட்ஜ்கள் பரிசீலனை செய்தன்றோ இவ்வண்ணம் எழுதியிருக்கிறார்கள். இதைப்பற்றின தத்துவங்களை இப்போது நாம் விவரிப்பதில் பலன் இல்லையாயினும் பழைய வரலாறுகளைத் தெரிவிக்கவே இந்நூல் அவதரிப்பதால் அதைப்பற்றிச் சுருக்கமாக மேலே தெரிவிப்போம்.

பதின்மூன்றாமத்யாயம் முற்றிற்று.

பதினன்காமத்யாயம்—இந்த தேவஸ்தானத்தின் கலையைப்பற்றி.

97. "தேவராஜஸ்வாமி தேவஸ்தானம் வடகலை" என்று கோவிலில் சில விடங்களில் திருமணலும் சிமைச்சுண்ணாம்பாலும் வர்ணத்தாலும் எழுதியிருப்பதுண்டு.- உலகில் வடகலைக்கோவில், தென்கலைக்கோவில் என்று வழங்கி வருவதானது எதைக்கொண்டு என்பதை விமர்சிக்கவேண்டும். கலை என்கிற சொல்லுக்கும் புண்ட்ரத்திற்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. ஆனாலும் ஒரு ரூடியான வ்யவஹாரம் நிகழ்ந்துவருவதால் அதை யொட்டிப் பேசுவோம். இங்கு மதில்களிலும் சுவர்களிலும் தூண்களிலும் வடகலை நாமங்களைப் போட்டிருப்பதால் இது வடகலை தேவஸ்தானமேயென்பதில் என்ன தடையென்று பலர் நினைக்கலாம். தேவப்பெருமாள் மூலவர் திருநெற்றியிலும் சில வாஹனங்களிலும் இந்த புண்ட்ரம் எறியிருப்பதால் இப்போது இது வடகலை தேவஸ்தானமன்று என்று சொல்லுவது ப்ராமாணிகமாகமாட்டாது. இதைப்பற்றின தத்துவங்களை உலகம் தெரிந்து கொள்ளவேண்டியது மிக அவசியமென்று கருதி ரிகார்டுகளின் வழியைச் சிறிதும் மீறாமல் அதையொட்டியே சரித்திரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

98. முன்னம், இக்கச்சிமாநகரிலேயே உள்ளதான விளக்கொளி கோவிலென்கிற தீபப்ரகாசர்ஸன்னிதியைப்பற்றினவொரு வரலாறு தெரிவிக்கப்படுகிறது. அதனால் இந்த

acharya.org

தேவஸ்தானத்தின் மருமங்களை எளிதாக வுணர்ந்துகொள்ளமுடியும். தேசிகனுடைய திரு வவதாரஸ்தலமாகிய தூப்புல் விளக்கொளி தேவஸ்தானம் நெடுநாளாக கைக்கோளர்களின் பரிபாலனத்திலிருந்துவருகிறதென்பதும் அந்த தேவஸ்தானத்திற்கு அவர்களே தருமகர்த்தாக் களென்பதும் நாடறிந்தவிஷயம். இற்றைக்கும் இது மாறுபாடு அடையவில்லை. இந்த கோவிலின் நிர்வாஹம் அவர்களுக்குப் பரம்பரைமிராசென்று சொல்லப்படுகிறது. தாதா சாரியர்கள் தூப்புல் தேசிகன் ஸன்னிதிக்கு மட்டும் நாங்களே தர்மகர்த்தாக்களென்று விவாதிக்க ஆரம்பித்தார்கள். அப்போது கைக்கோளர்கள் நீதிமன்றத்தில் தாவா செய்ய நேர்ந்தது. அதில் தாதாசாரியர்களின் எதிர் வாதம் என்னவென்றால்—இங்கு தேசிகர் ஸன்னிதியானது தீபப்ரகாச தேவஸ்தானத்தைச் சேர்ந்ததன்று ; இது தனிப்பட்ட கோவில். தீபப்ரகாச தேவஸ்தானத்திற்கு கைக்கோளர்களே டிரஸ்டிகளென்பதை நாங்கள் ஆக்ஷே பிக்கவில்லை ; தேசிகர் கோவிலின் நிர்வாஹத்தில் அவர்களுக்கு யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. நாங்களே நெடுநாளாக நிர்வாஹிகள்—என்று தாதாசாரியர்கள் ஆன்ஸர் கொடுத்தார்கள். இந்த வ்யவஹாரத்தில் தென்கலையார்களுக்கு யாதொரு ஸம்பந்தமும் இருந்ததில்லை. கைக்கோளர்களுக்கும் தாதாசாரியர்களுக்கும் மட்டுமே நடந்ததிது.

99. இந்த தாவா முன்சீப்கோர்ட்டு, ஜில்லா கோர்ட்டு, ஹை கோர்ட்டு ஆகிய மூன்று கோர்ட்டுகளிலும் சென்று முடிவு பெற்றது. முதல் முன்ஸீப் கோர்ட்டில் கைக்கோ ளர்கள் பக்ஷத்தில் வெற்றி ஏற்பட்டது. இரண்டாவதாக ஜில்லா கோர்ட்டில் அது மாறுபட்டு தேசிகர் ஸன்னிதி நிர்வாஹம் தாதாசாரியர்களுடையதே யென்று முடிந்தது. பிறகு சென்னை ஹை கோர்ட்டில் 19—4—1883ல் பரிஷ்காரமாக முடிவுபெற்றது. மிஸ்டர். இன்னிஸ் துரையும், ஸுப்ரமணிய முத்துஸ்வாமி அய்யரவர்களும் ஆக இருவரும் ஜட்ஜு களாயிருந்து பரிபூர்ண விசாரணைகள் செய்து முடித்தார்கள். அது ஆங்கிலத்திலும் தமிழிலும் விரிவாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஸாரமாக ஒரே விஷயம் காட்டுகிறோம்.

> "தூப்புல் தேசிகர் ஸன்னிதியானது விளக்கொளி தேவஸ்தானத்தைச் சேர்ந்ததே; அந்த கோவி லின் வாஹன மண்டபமே தேசிகர்கோவிலாக ஆக்கப்பட்ட தென்று தெரியவருகிறது. விளக் கொளி தேவஸ்தானத்திற்கு யார் டிரஸ்டிகளோ அவர்களே அதைச் சேர்ந்த தேசிகர் கோவிலுக் கும் டிரஸ்டிகளாயிருக்கத்தக்கவர்களென்பதில் என்ன ஸந்தேஹம்? ஆகவே முன்சீப் கோர்ட்டு தீர்ப்பையே நாங்கள் ஊர்ஜிதப்படுத்துகிறோம். இதற்கு முக்கியமான காரணம் ஒன்று கவனிக்க வேண்டும் — விளக்கொளி கோவிலைப்போல் தேசிகர் கோவிலும் தென்கலை ஸம்பிரதாயத்தை யநுஸரித்திருக்கிற விஷயம் ஸ்பஷ்டமாக விருக்கிறது; தாதாசாரியர்களே தேசிகர்கோவிலுக்கும் டிரஸ்டிகளாக இருந்திருப்பார்களாஞல் அவர்கள் இங்கு தென்கலை ஸம்பிரதாயம் தொடர்ந்து வந்திருக்கும்படி பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதே."

என்று மூடி ஜட்ஜுகளால் எழுதிமுடிக்கப்பட்டிருக்கிறது. இது நாம் இந்திரஜாலமாகக் காட்டுவதன்று. மூன்று கோர்ட்டுகளில் நடந்த இந்த வியவஹாரத்தின் ரிகார்டுகள் — முக்கியமாக ஹை கோர்ட்டு ஜட்ஜ்மெண்டு மறைக்கவோ மாற்றவோ முடியாதது. ஸ்வல்ப பரிச்ரமத்தினால் யாவரும் காணக்கூடிய ரிகார்டே இது. மேலே நாம் எழுதியுள்ள வாசகங் கள் அந்த ஜட்ஜ்மெண்டில் இல்லையென்று நிரூபிக்கத் துணிவுடையவர்கள் நிரூபிக்கவேணும். மூடி ஹை கோர்ட் ஜட்ஜிமெண்டின்படி 1883-ம் வரையில் தேசிகன் ஸன்னிதியுட்பட தீபப்ரகாச தேவஸ்தானம் தென்கலை ஸம்பிரதாயமாக விளங்கி வந்த தென்பது நிஸ்ஸந்தேஹ

acharya.org

மாகத் தேறியிருக்கிறது. 1883-ம் ஜூ என்பது இற்றைக்கு (72) எழுபத்திரண்டு வருஷங்களுக்கு முந்தியதே யொழிய அதிக காலமாகவில்லை.

100. வருஷம் 1883க்கு முன்னே (8, 9 வருஷங்களுக்கு முன்னே) 1874-ம் ஜூத்தில் வடகலை வகுப்பினர் மேடி தேசிகர்கோவிலிலிருந்த (பெரிய) காரைக்கட்டிடமான தென்கலைத் திருமஞ்ஞை இடித்துத் தள்ளிவிட்டார்களென்று அப்போதே செங்கற்பட்டு ஜாயிண்டு மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாவா நடந்திருக்கிறது. அந்த தாவாவின் நம்பர். 72. அதில் பிரதிவாதியா யிருந்த (அக்யூஸ்டு) திருப்புட்குழியப்பா தாதாசார்ஸ்வாமி கொடுத்திருக்கிற வாக்குமூலம் (அதாவது) 19—8—1874ல் கலெக்டர் மிஸ்டர். குரூல்துரை முன்னிலையில் கொடுத்த ஸ்டேட்மெண்டு

"விளச்கோளி தேசிகன் ஸன்னிதிவாசலில் தென்கலை திருமண்தான் இருந்தது. 6, 7 மாதத்திற்கு முன் நான் வேளியூர் போயிருந்தபோது யாரோ வடகலையார் அதை இடித்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.....அந்த தேசிகன் ஸன்னிதியிலுங்கூட தென்கலையார்களே தென்கலை மந்திரம் சொல்லியே திவ்யப்ரபந்த ஸேவை செய்து வருகிறார்கள்; அங்கு வடகலையார் வடகலை மந்திரம் சொல்லிவாக்காணேம்". என்று

101. அந்த வாக்குமூலம் அச்சாகி விளங்குகின்றது. அது 1874-ம் வருஷத்தில் என்பது ஸ்பஷ்டம். அதன்பிறகு எழு வருஷங்கள் கழித்தே கைக்கோளர்களின் வழக்கு ஹை கோர்ட்டில் (1881-ல்) முடிந்திருக்கிறது. 1874-ல் வெளியிலிருந்த காரைக்கட்டிடமான தென்கலைத் திருமண்காப்பை இடித்துவிட்ட போதிலும், மற்றும் அழிக்கப்படாமலிருந்த திருமண்களைக்கொண்டு தென்கலை ஸம்பிரதாயமே அங்கு ஒங்கியிருப்பதாக ஹை கோர்ட் ஜட்ஜுகளிருவர் எழுதிவைத்திருப்பதிலிருந்து அறிகிறோம்.

102. ஸமீபகாலத்தில் தாதாசாரியர்களில் ஒருவர் வெளியிட்டிருக்கிற ஸம்ப்ரதாய ப்ரதீப மென்னும் புத்தகத்தில், இங்கு நாம் மேலே குறித்த திருப்புட்குழி ஸ்வாமியின் வாக்கு மூலத்தைப்பற்றி ஒரு விஷயம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதாவது—தூப்புல் தேசிகர் ஸன்னிதியில் இருந்த தென்கலைத்திருமண்காப்பை திருப்புட்குழி ஸ்வாமி போல்வார் இடித்துத் தள்ளினது யுக்தமே யென்றும்; பல வருஷங்களுக்கு முன்னே வடகலையாயிருந்த ஸன்னிதிகளை இடையில் தென்கலையார் ஆக்ரமித்துக்கொள்ள, அதை மறுபடியும் முன்போல் திருத்தவேண்டியது அவசியமாகிற தென்றும், திருப்புட்குழி ஸ்வாமி போல்வார் அந்த கைங்கரியத்தில் முனைந்து நின்றது யுக்தமே யென்றும் கண்டாடி யெழுதியிருக்கிறது.

103. எல்லா ஸன்னிதிகளும் ஆதிகாலத்தில் வடகலையாகவே யிருந்ததாகவும் இடையில் தென்கலையாரால் ஆக்ரமிக்கப்பட்டதாகவும் தத்துவம் கண்டு பிடித்து எழுதியுள்ள இந்த தாதாசாரியர், திவ்யதேசங்கள் வடகலையாயிருந்தகாலம் எது? தென்கலையாக மாற்றப்பட்ட காலம் எது? என்பதையும் கண்டுபிடித்து எழுதியிருக்கிறார். ஆனால் அவர் காஞ்சீபுரத்தைப் பற்றி விசேஷித்து எழுதவில்லை; திவ்யதேசங்களில் தலையாய் பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்க தேவஸ்தானத்தைக் குறித்து ஸ்பஷ்டமாக எழுதுகிறார். அவ்விடத்தில் நிர்ப்பந்தத்தினாலேயே புண்ட்ரம் மாறுபடுத்தப்பட்டதென்று (பக்கம் 65ல்) எழுதுகிறார். அப்படி நிர்ப்பந்தத்தினால் மாறுபட்டதென்பது எங்ஙனம் தெரிகிறதென்பதையும் விவரிக்கிறார். ஸ்ரீராமானுஜர் ஸ்ரீரங்கம்

acharya.org

சென்று சேர்ந்த காலத்தில் அந்த தேவஸ்தானநிர்வாஹம் முழுவதும் பெரியகோயில்நம்பி யென்று மறு பெயருடைய திருவரங்கத்தமுதனுக்கு ஸ்வாதீனமாக இருந்தது. அந்த ஆதீனத்தைக் கைப்பற்றிக்கொள்ள ஸ்ரீராமாநுஜர் அவகாசம் பார்த்திருந்தார்; இருக்கையில் அவ்வமுதனுருடைய தர்யார் பரகதியடைய, எகாஹ நிமந்த்ரணத்திற்கு ஒருவரையனுப்பும்படி அமுதனர் ஸ்ரீராமாநுஜரிடம் வந்து வேண்டினர். அவர் தமக்கு ஸர்வாத்மநாவிதேயரான கூரத்தாழ்வானை நிமந்த்ரணத்திற்குப் போகும்படி நியமித்தார். அவர் ஸ்வாமி ராமாநுஜ ருடைய குறிப்பறிந்து அப்படியே நிமந்த்ரணத்திற்குச் சென்று போஜநமுடிவில் த்ருப்தி சொல்லுகிற ப்ரகரணத்தில் கோவில் திறவுகோலை ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்துவிட்டால் ஸகலம் ஸம்பூர்ணம் சொல்லுவதாகக் கூறி அப்படியே திறவுகோலைப் பெற்றுக்கொண்டாரென்றும், அதுமுதலாகத் தென்னரங்கர் செல்வம்முற்றும் ஸ்வாமிராமாநுஜர்க்கு அதீனமாய்விட்ட தென்றும், க்ரமேண அந்த தேவஸ்தானத்தில் பல திருத்தங்களை ஸ்வாமி செய்தருளி னரென்றும் வாஸ்தவமான ஐதிஹ்யமுள்ளது. மேலே ப்ரஸ்தாவித்த தாதாசாரியர் இந்த ஐதிஹ்யத்தை ப்ரபல ஆதாரமாகக்கொண்டார்; உடையவர்வாழிதிருநாமத்தில் "தென்ன ரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே" என்றிருப்பதையும் குறிக்கொண் டார், அநாதிகாலமாக வடகலையாயிருந்த தேவஸ்தானத்தைத் தென்கலையாக்குவதற் காகவே ஸ்ரீராமாநுஜர் இந்த சூழ்ச்சி செய்தாரென்றுகொண்டு எழுதியுள்ளார். அவருடைய பங்க்திகள் வருமாறு;— "ஸீவை₂நாஎவ கூதவ₂ ட்₃ரவிடயாஹா: ஸவெ₂ ஸ்ரீரம ஜெவஜ்ஞாந ஸ₂ர₂ஷ:; ஜ₂ம் சகிஷ்ஹ்ருஸ₂மைஸ்₂ரி ஹெதிஹ்ஜ₂நவைத₂ஸ₂; ஸ்ரீஜெ ஸீஜ₂ஜ்ரிதெஸ்ரீ ஹொஜ₂நாஜை தூஜ்ரிகூயநா வஹஸெ....." இத்யாதி. இதைப்பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள், ஸமீப காலத்தில் நாம் வடமொழி தென் மொழிகளில் தனித்தனியே யெழுதி வெளியிட்டிருக்கிற ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கர நூலில் கண்டுகொள்வது.

104. இனி இந்த தேவஸ்தானத்தில் புண்ட்ர விஷயமாகத் தெரிவிப்போம். இங்கி ருந்த தென்கலைத் திருமண்களையெல்லாம் ஒவ்வொன்றாக மாற்ற ஆரம்பம் செய்தார்கள். தென் கலையார் நீதிமன்றங்களில் முறையிட்டுக்கொண்டதன்மேல் வடகலையாக்கப்படாத தென் கலைத்திருமண்களுக்கு கோர்ட்டுமனிதர்களே நேரில்வந்து லிஸ்டு எடுத்தார்கள். அப்போது, தேவப்பெருமாள் மூலவர்க்கு மாத்ரம் திருமண் மாற்றப்பட்டுப் போயிற்றென்றும் மற்ற பல விடங்களில் பழையபடியே யிருந்தனவென்றும் கண்டு 42 தென்கலைத் திருமண்களுக்கு ஜாபிதா எடுக்கப்பட்டது. மற்றொரு அதிகாரி வந்து இன்னமும் சோதனைகள் செய்து 18 தென்கலைத் திருமண்களுக்கு ஜாபிதா எடுத்தாராம். அப்போது மதலிஷயத்தில் ஸர்க்கார் ப்ரவேசிப்பதில்லையென்று இருந்தபடியால் மாற்றப்பட்டுப்போன திருமண்களை புராவா ஹநம் செய்விக்க முடியாமற் போயிற்று. அதனாலென்ன? மற்ற திவ்ய தேசங்களிற்போல் இந்த தேவஸ்தானத்திலும் புராதனமாக தென்கலைத் திருமண்காப்புகளே திகழ்ந்துவந்தன வென்பது ரிகார்டுகளினால் தேறியிருக்கிறது. அந்த ரிகார்டுகளெல்லாம் ஸீல் ஸுட்டில் தாக்கல் செய்யப்பட்டபடியால்தான் சனம் அப்துல்ரஹிம் & ஸுந்தரமையரவர்கள் எழுதிய (ஷெ ஸுட்) ஜட்ஜ்மெண்டில் "ஷெ தேவஸ்தானத்திற்குள்ளிருக்கும் திருமண்களில் அனேகம் தென்கலைத்திருமண்கள் இருக்கின்றன" என்றும் "தென்கலையார்களின் பாத்யதைகளுக்கு விரோதமாக அனேக புதிய ஆசாரங்களை வடகலை தாதாசார்ய தர்மகர்த்தாக்கள் நுழைக்க அடிக்கடி முயற்சி செய்கிறார்கள்" என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

acharya.org

எ. 1

தாயார் ஸன்னிதி வாசலுக்கு மேலண்டை பக்கத்திலுள்ள
திருமுற்றத்தில் இந்த குத்துக்கல் ஸேவிக்கத்தக்கது.

எ. 2

அபிஷேகமண்டபவாசற் கொடுங்கையில்
இந்த திருமண்காப்பு ஸேவிப்பது

acharya.org

நெ. 3

தேவப்பெருமாள் கங்கைகொண்டான்
மண்டபத்தில் சிறிய திருவடியின் தலைமேல்
பூர்வதன திருமண்காப்பு வைக்க.

acharya.org

105. பெருமாளுக்கு தினப்படியாக உபயோகப்பட்டுவருகிற கடகீப [வடகீவ]த்திலும் தீர்த்தக்குடங்கள் மூன்றிலும்தென்கலைத் திருமண்காப்பே காணலாம். வைசாகோத்ஸவத்தில் இரண்டு வேளையும் மண்டபப்படிகண்டருளும்கங்கைகொண்டான் மண்டபத்திலும்தென்கலைத்திருமண்காப்புதான் விளங்குகின்றது. வாஹனங்களில் யாளிவாஹனம்; மணிகளில் பெரியதிருமணி; அபிஷேகமண்டபக் கொடுங்கைத்திருமண்; தாயார்ஸன்னிதி முன்மண்டபத் திருமண், நூற்றுக்கால் மண்டபத்தில் கூர்மத்திற்கும், மேலே நான்கு கருடாழ்வார்களுக்கும் திருமண், யானைக்குத்திருமண், பல ஆழ்வாராசாரியர்கட்குத் திருமண் என்றிப்படி அனேக திருமண்கள் தீர்ப்புபெற்றவை. சில திருமண்காப்புகளுக்கு ஆப்டோன் ப்ளாக்கெடுத்து இதில் வெளியிடப்படுகிறது. அதனல் இப்போது ஸாத்யாம்சம் ஒன்றுமில்லையெனினும், கக்ஷிகளில் கலந்துகொள்ளாத மத்யஸ்தர்கள் உண்மையைத் தெரிந்துகொள்வர்கள்.

பதினன்காமத்யாயம் முற்றிற்று.

பதினேந்தாம் அத்யாயம்—ஆத்தான்ஜீயரைப்பற்றி

106. தேவப்பெருமாளுக்கு ஆத்தான் ஜீயர்செய்த விசேஷத் தொண்டுக்குப் பிரதிபலனாக இந்த தேவஸ்தானத்தில் ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தனியன் அநுஸந்திக்கும்படியாக அநுமதியளிக்கப்பட்டதென்று எழுதியிருக்கின்ற அட்வகேட், இதற்குமுன்பு இங்கே ராமாநுஜபாத்ரம் சொல்லப்பட்டு வந்தது போலவும், பிற்காலத்தில் ஸ்ரீசைலேசபாத்ரம் ஒரு காரணார்த்தமாக வந்து புகுந்துகொண்டதுபோலவும் காட்டி ஆப்யாயமடையப்பார்க்கிறார். பாத்ரத்தனியன் என்பது மணவாளமாமுனிகளின் காலத்தில்தான் அவர் விஷயமாகத்தான் அவதரித்து ஸ்ரீபகவதாஜ்ஞயா ஏககாலத்தில் திவ்யதேசமெங்கும் ஒருகுறையுமின்றிக்கே நித்யஸ்ரீர் நித்யமங்களமாக விளங்கிவருகின்றது. இடையில் சண்டைக்காகவே ராமாநுஜபாத்ரச்லோகம் கற்பனை செய்யப்பட்டு அது சொல்ல ஆரம்பித்த இடங்களிலெல்லாம் தடையுத்தரவுகளும் ராஜதண்டனைகளும் அபரிமிதமாக ஏற்பட்டுவந்திருக்கின்றன. இத்தகைய பல தத்துவங்களை நாம் வெகு விசதமாக விளக்கி ஸகல பாஷைகளிலும் * ராமாநுஜதயாபாத்ர பத்யசரித்ரமென்னும் விரிவானநூலை வெளியிட்டிருக்கிறோம். அது உலகமெங்கும் பரவியுள்ளது. அதனல் பிராமாணிகர்கள் யாவரும் உண்மையையுணர்ந்து தெளிந்திருக்கின்றார்கள், ஆதலால் இங்கு நாம் அதைப்பற்றி விரிவாக எழுத அவசியமில்லை.

107. ஆத்தான்ஜீயர் விசேஷத்தொண்டு செய்தது தேவப்பெருமாள் தேவஸ்தானத்திலொன்றிலேயேயன்றி தூப்புல் தலத்திலாவது, ஸ்ரீபெரும்பூதூரிலாவது, திருப்புட்குழியிலாவது, திருவள்ளூரிலாவது [மற்றெவ்விடத்திலாவது] உண்டோ? கிடையாது. தேவப்பெருமாள்ஸன்னிதியில் தொண்டு செய்தசற்காக ஸகல திவ்யதேசங்களிலும் ஸ்ரீசைலேசதயாபாத்திரம் சொல்லிக்கொள்ள அனுமதிகொடுக்கப்பட்டதென்றால் இது எவ்வளவு பெருத்தமானதென்பதை ப்ராமாணிகர்களே பரிசீலிக்கவேணும். ஸ்ரீபெரும்பூதூர் விவஹாரத்தில் முடிவாக ஏற்பட்ட ஜட்ஜ்மெண்டில் வடகலைபாருடைய நெடுநாளைய வக்கீலும், பிறகு ஹைகோர்ட் ஜட்ஜ் பதவியை அலங்கரித்துத் தீர்ப்புசெய்தவருமான ஸ்ரீ. கிருஷ்ணஸாமி அய்யரவர்கள் "தாதாசாரியர்கள் தங்களுக்குக் குலபரம்பரையில் வந்த ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தனியனில் மாச்சரியம் கொண்டது காரணமாகவே கௌரவங்களையிழந்து மரியாதைகளையுமிழக்க நேரிட்டது" என்று சிலாசாஸனம் செய்திருப்பதை நாடோறும் முச்சந்தியும் பாராயணம் செய்துவரலாம்.

acharya.org

108. இருநூறு வருஷங்களுக்குமுன் மைஸூரிலிருந்த ஒரு பரகாலஸ்வாமி ராமானுஜதயா பாத்ரத்தனியனைச் செய்து திருநாராயணபுரத்தில் சொல்ல ஆரம்பித்துவிட்டு, தெற்கிலும் சில திவ்யதேசங்களிலாவது இதை நுழைக்கவேணுமென்கிற அவாவுடன் தக்ஷிணயாத்திரை புறப் பட்டுக் காஞ்சீபுரம் வந்து தாதாசாரியர்களை இதற்கு நிர்ப்பந்திக்க அவர்கள் இசையாமல் மறுத்துவிட சாபோதகமிட்டுப் போய்விட்டாரென்பது யாவருமறிந்த சரிதை. அந்த பரகால ஸ்வாமியால் தூண்டப்பட்ட வேறு சில வடகலையார்கள் இங்கே சில வருஷங்கள் பொறுத்து ராமானுஜாபாத்ரம் சொல்ல ஆரம்பித்ததும் அது தடைபட்டுப்போனதும் கீழே விவரிக்கப் பட்டது. கோவில்களில் சண்டை ஆரம்பமானகாலம் ரிகார்டுகளில் ஸ்பஷ்டம். பல கோவில்களில் ஏககாலத்திலேயே சண்டை ஆரம்பமாயிற்றென்பதும் ஸ்பஷ்டம். அப்படி சண்டை ஆரம்பமாவதற்கு இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்புதான் ராமானுஜபாத்ரத் தனியன் தோன்றினது. தோன்றின நாள் முதல் எங்கும் பாதுகாஸஹஸ்ரபாக்யமே.

109. இந்த தேவஸ்தானத்தில் ஸ்ரீ சைலேச தயாபாத்ர தனியன் ஆத்தான் ஜீயர் காலத் தில் புதியதாக வந்து புகவில்லை யென்பதுபற்றின விவரணங்களை ரிகார்டு மூலமாகக்காட்டு வோமினி.

110. கி. பி. 1711ல் லக்ஷ்மீகுமார திருமலை தாதாசாரியரால் ஆத்தான் திருவேங்கடராமா நுஜ ஜீயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட உடன்படிக்கை. (இது A. S. No. 175 of 1910-ல் Exhibit A வாக எடுக்கப்பட்டிருக்கிறது.)

EXHIBIT A.

Sreemathe Ramanujaya namaha.

Odambadikka (agreement) executed on the 18th day of Chitri month of the current Khara year, being the 1633rd year of Swasti Sri Vijabhyadaya Sali Vahana Sakam and 4812 of the Kali (yuga) and 24th after Prabhava, to Srimat veda marga pratishtapana acharyobaya.....Athan Thiruvenkata Ramanuja Jeeyangar, Sakala Sri Karyatharandharulu of the Sannidhi of Sri.....Devarajaswami of.....Kanchi.....by Srimat..... Yedurumbadi Lakshmi Kumara Thirumala Thathacharyulu, in the presence of Maharaja Rajastri Lala Thondarmul Srinivasa dasagaru is to the following effect:—We shall, as has been done under existing mamul for a very long time of beginning with "Srisylaisa dayapathram" (Srisailesathayapatram Thodangi) for Divya Prabandham Thodakkam (at the commencement of the recital of the prabandam) during Nithya Niyamithika Varashochavams daily, periodical and yearly Ochavams in Sri Devaraja Swami and other 18 Divya Dhesulu (temple), in the Sanidhis (temples) of Nammalwar and all other Alwar Acharyalu, and and in those of Srimath Thiruukkachi Nambi, Koorathal-

acharya.org

wan, Velakkadi Emberuman and that of Vedantacharyulu Varu situated in front of the Sannidhi Gopuram (temple tower) and then of performing all Oothsavams, get Srisailesathayapatram commenced, as at the Koil (temple), by Sriramaiyengr in our Thirumaliga (house) and then perform all Oochavams torn. Besides this I shall get Srisailesa thayapatram commenced, as at the Koil, by Sriramaiyengar at the auspicious and inauspicious ceremonies in the Thrumaligais (house) of our people.....and all servants, as is done in the koil, and we shall get our maryad such as Agra Tamboolam (first betal nut) done to us. To this effect is the Odambadikkai got executed and delivered with consent in Nammalwar Sannidhi.

111. இந்த உடன்படிக்கை ஸ்ரீதேவராஜஸ்வாமி தேவஸ்தானத்தில் மாத்திரமல்ல, காஞ்சீபுரத்தில் மற்றுமுள்ள 18 திவ்யதேசங்களிலும் ஸ்ரீ வைஷ்ணவ ஆழ்வார் ஆசார்யர்கள் ஸன்னிதிகளிலும் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களின் க்ருஹங்களிலும் வெகுகாலமாக மாமூலாக ஸ்ரீசைலேசதயாபாத்ர தனியனே ஆசாரத்தில் இருந்ததான உண்மையை விளக்குகின்றது.

EXHIBIT B. (dated 16-10-1770)

Agreement executed on the 16th Arpisi of the year Vikriti (.....) to Chakravarti Venkatachariar, Venkatachariar son Prathivatibayankaram Rangachariar, Prabakaram Thirumalachariar, and Pullavagam Venkatachariar and other Thennacharyars by Adyapagam Sreeramaiyengar to wit:-

According to the rules laid down by Srimatu Thirumalai Thathacharyar and Athan Jeer, from the time of Araiyar we have been for a long time in the habit of going to the houses of Adhyabagars, Archakar, Paricharagar, Swayambaki, Mudali and Karnam during the performance of auspicious and inauspicious ceremonies and commencing the recital of the verse Srisailesadayapatram. Accordingly, after the death of our father, Thirumancholai Iyengar, while we were conducting his Thiruvatyanam ceremony in our house commencing in the same manner with the recital of the verse Srisailesadayapatram, Srimathu Thathachariar, with a mob forcibly conducted the ceremony commencing with the recital of the verse "Ramanujathayapatram. Consequently I was removed as being unworthy to conduct the Thodakkam (commencement) in this temple in as much as I failed to abide by the rules and conduct Thodakkam in our house according to the long standing practice obtaining in the temple of Sri Devaraja Swami Lord of the universe, and other temples, 18 in all, and in the Alwars, and Acharyas' Sannidhis attached thereto. I have therefore resumed the Thodakkam with the recital of the verse "Srisailesathayapatram", conducted Thiruvadyanam according to the custom observed for a long time and

acharya.org

commenced the Thodakkam as usual in the temples and given this agreement to you. Should we fail to act in accordance with the custom observed for a long time and in conformity with the rules. we bind ourselves to forfeit the Adyabagam Mirasu of these 18 temples. This is the deed of agreement written and given with our free will."

(Sd.) SREERAMAIYENGR,

இதனுடைய ஸாராம்சம்

112. தொடக்க மிராசுள்ள ஒருஸ்ரீராமய்யங்கார் தம்முடைய திருமாளிகையில் ப்ராசீன மாகவிருந்த நடைமுறைப்படியே ஸ்ரீசைலேசதயாபாத்ரம் சொல்லித்தொடங்கி தம்முடைய தகப்பனாரின் திருவத்யயனத்தைப் பண்ணிக்கொண்டிருக்கையில் ஒரு தாதாசார்யர் பெரும் வடகலைக் கூட்டத்துடன் பலவந்தமாக உள்ளே நுழைந்து ராமானுஜதயாபாத்ர தனியன் சொல்லி திருவத்யயனத்தை நடத்தினர். இதற்கு இசைந்திருந்ததற்காக அந்த ஸ்ரீராம அய்யங்கார் கோவிலில் தம்முடைய தொடக்க பாத்யதையை இழந்தார். பிறகு மறுபடியும் தம்முடைய தகப்பனாரின் திருவத்யயனத்தை ஸ்ரீ சைலேசதயாபாத்ரத்தனியனுடன் ஆரம் பித்து பூர்த்தி செய்தார். அதன்பிறகே கோயிலிலும் இன்னும் 18 திவ்யதேசங்களிலும் அவர் தம்முடைய அத்யாபக தொடக்க மிராசை மீண்டும் பெற்றார். இந்த உடன்படிக்கையில் இதைப் ப்ரஸ்தாவித்து, இனி வழக்கத்துக்கு மாறுக நடந்துகொண்டால் தம்முடைய மிராசை இழந்துவிடுவதாக எழுதிக்கொடுத்திருக்கிறார்.

EXHIBIT C. (dated 2—7—1774)

Kararnama executed on 20th Ani of Ananda year to Srinivasaragavachariar. Muthirakartha of Sri Devaraja Sami ..... by the STHALATHAR of Sri Devaraja Swami Pagoda is as follows;—

On sending for and asking us in respect of the disturbance relating to the mamool of Adyabakam in the Sri Swami Sannidhi what we know is:—According to the Agrees ment of Athan Jeeyangar it is only the members of Adhyapakam Sriramaiyangar-family used to commence and nobody else used to commence Srisailesadayapatram used to be recited in their houses also in auspicious and inauspicious occasions as in the temple as is done in our house This is the Kararuama that we know.

(Signed) Ragunathachari.
,, Sthanam Srirangaraja Batta
,, Mantapam Annachi

(Signed) Thirumalaiyengar.
,, Kanara Venkataraman.
,, Karnam Muthukrishnan.
(Sthalathar)

113. இந்த கரார்நாமாவில் ஷெிதேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்தலத்தார் யாவரும் கோயி லிலும் தங்களுடைய கிருஹங்களிலும் ஸ்ரீசைலேசதயாபாத்ரத் தனியனே வெகுகாலமாக ஆசாரத்திலிருந்தது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

acharya.org

EXHIBIT D. (dated 23—2—1799)

To the Amil (Thasildar) of Conjeevaram Parguna.

I understand that in the Pagoda (temple) of Vedantacharialu near Dipaprakasakala Pagoda, the prayar, "Ramanujadayapatram has been recited for some days, which was never before done, and which is contrary to religious doctrines. It is therefore very improper that it should be done so. You shouid therefore put a stop to the same, and order the prayer, Srisailesadayapatram" to be recited as usual. For such improper act of Ragunadacharyulu and Thiruppakuli Krishnamacharyulu among the Thathachariyars, and for their having given me the trouble of going and seeing that, you should levy from them a fine of ten Pagodas each and send the same.

Poonamallee,
23rd Feb. of Fasli 1208. } (Signed) JOHN HODGSON,
Collector.

இத்தால் சில தாதாசாரியர்கள் விளக்கொளிகோவில் வேதாந்ததேசிகன் சன்னிதியில் ஸ்ரீசைலேசதயாபாத்ராநுஸந்தான வழக்கத்துக்கு விரோதமாக ராமானுஜ தயாபாத்ர தனியன் சொன்னதற்காக நபர் ஒன்றுக்கு 10 வராகன் அபராதம் வசூலித்து அனுப்பும்படி தாசில்தாருக்கு கலெக்டர் ஹாட்ஸன் துரை உத்தரவளித்திருக்கிறார்.

Exhibit E ல் இந்த அபராதத்தை கலெக்டர் க்ரீன்வே (Edw. Greenway) 10—1—1801ல் காயப்படுத்தியிருக்கிறார்.

EXHIBIT G. (dated 19-2-1809.)

To Mr. CAZIRET.

Kararnama executed by Tatachary, etc. In the Sannidhi (temple) of Sri Devaraja Swami. Only "Srisailesadayapatram" is usualy recited, but "Ramanujadayapatram" was never recited. We were sent for and asked about the Vadagalai people having recited "Ramanujadayapatram" yesterday. In respect thereof (we say that) neither we, nor our Gumasta, nor (any person) under our orders recited it, nor did we hear them recite it, nor did we see. No such act contrary to custom will be hearafter done by us or by our Gumasta. If we so act in opposition to custom, we shall be liable for the fine that may be imposed by the Sirkar. Thus is the Kararnama executed by us with our free will.

19th Feb. 1809. (Signed) Kumaratatachariar.
,, Tirumala Sundaravaradatatacharyulu.

இதில் மேடி தேவஸ்தானத்தில் ஸ்ரீசைலேசதயாபாத்ரம்தான் நீண்டகால வழக்கமென்றும், ராமனுஜதயாபாத்ரதனியன் எக்காலத்திலும் வழங்கியதில்லையென்றும், வழக்கத்திற்கு

acharya.org

விரோதமாக நடந்துகொண்டால், அல்லது நடத்திவைத்தால் சர்க்காரால் ஏற்படுத்தப்படும் தண்டனைக்கு உள்ளாக ஒப்புக்கொண்டதாகவும் சில தாதாசார்யர்களே சர்க்காருக்கு உடன் படிக்கை எழுதிக்கொடுத்திருக்கிறார்கள்.

இது விஷயமாய் நேர்ந்த கிளர்ச்சிகளும், உடன்படிக்கைகளும், வியாஜ்ஜியங்களும், தண்டனைகளும் அபரிமிதமாக உள்ளன. இத்தகைய ரிகார்டுகளே ஆதாரமாகக்கொண்டே A. S. No. 175 of 1910 ல் ஹைகோர்ட்டில் கனம் ஸ்ரீ. சங்கரநாயர் அவர்களால் தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. பதினேந்தாமத்யாயம் முற்றிற்று.

பதினேழுமத்யாயம்—நிகமனம் செய்வது.

114. விவாத வரலாற்றுச் சுவடியில் ஒவ்வொரு விஷயமாக வெடுத்து விபுலமாக விமர்சித்து முடித்தோம். நியாயாலய தஸ்தாவேஜுகளினாலும் ஸர்வ ஸம்ப்ரதிபந்நப்ரமாணங் களாலும் எந்த ஸமயத்திலும் நன்கு நிரூபிக்கக்கூடிய விஷயங்களையே இதில் விளக்கியிருக் கிறோம். 'காஞ்சிமாநகரின் சிறப்பு, தேவப்பெருமாள் ஸன்னிதியின் ஸங்கிவேசங்கள்' என்று இப்படிப்பட்ட ஒன்றிரண்டு மகுடங்களில் மாத்திரமே விவாத வரலாற்றுச் சுவடியில் பிராமாணிகர்கள் அதிகமாக ஆக்ஷேபிக்க வேண்டாத விஷயங்களிருக்கலாம். அவை ஒரு புத்தகங்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டியவையுமல்ல. கச்சிக்கடைவீதிகளில் கிடைக்கக் கூடிய சரக்குகளையும், மார்க்கெட்டில விற்கப்படும் பண்டங்களையும், காஞ்சியிலுள்ள வீதி களையும் குளங்களையும் கச்சேரிகளையும் தபாலாபீசுகளையும்.....குறிப்பிட்டு ஒரு பெரியார் 'கச்சிவரலாறு' எழுதியிருக்கின்றார். ஆக்ஷேபிக்கத்தக்க விஷயமில்லாமை, பொய்புரை யில்லாமை என்னும் எற்றங்கள் அப்புத்தகத்திற்கு உண்டென்று கொண்டாடுகிறார்கள்.

115. படித்தவர்கள் எழுதும் புத்தகம் பண்டிதர்களுக்கும் விவேகிகளுக்கும் பரம போக்யமாக அமையவேண்டும். வயிறு நிரம்பிய மாச்சரியத்தையும், ஒரு தலையில் வீணை நம்பிக்கையையும், ஒரு வகுப்பினரின் மனத்தை அநாவச்யகமாகப் புண்படுத்தவேணு மென்கிற எண்ணத்தையுமேகொண்டு எழுதப்படும் புத்தகம் என்ன பயன்தரும்? 'நம்முடைய பொய்புரைகள் மூன்றும்நாளில் வெளிவந்தே தீரும்' என்கிற நிச்சயவுணர்ச்சி நன்முகவிருந் துங்கூட அதிஸ்வல்பகாலத்து மகிழ்ச்சியை நச்சிச் சில பாமரர்களின் புகழ்ச்சிக்காக வொரு காரியம் செய்வதென்பது அறிஞர்க்குத்த குதியோ?

116. விஷயங்கள் ஒருவாறிருந்தாலும் சொல்லின்பமாவது சிறந்திருக்குமேல் அழகி யதே. ஒன்றே காண்மின். பிரம்மா என்று அடிக்கடியுள்ளது. தமிழ் நெறியைப் பேணி னால் பிரமன் என்னவேணும்; ஸம்ஸ்க்ருத ரணியை யநுஸரித்தால் ப்ரஹ்மா என்னவேணும்; இரண்டுபடியிலும் சேராமல் மணிப்ரவாளத்திற்கும் பொருந்தாமல் பிரம்மா என்பது என்ன பாஷையோ? இது, மணற்சோற்றிலே கல்லாராய்வதொக்கும். முக்கியமாக எழுதப்பட வேண்டிய அபூர்வ விஷயங்கள் பல இருந்தும் அவற்றில் ஒன்றும் இடம்பெறவில்லை. [இதற்கு ஒன்றே காட்டுவோம்.] சித்ராபௌர்ணமிபுஷ்யத்தில் பாலாற்றில் ப்ரஹ்மாரா தனமென்பது புராணப்ரஸித்தமான பெரிய விசேஷம். தேவப்பெருமாள் க்ருதயுகத்தின் முடிவில் பிரமனுக்கு விடை கொடுக்கும்போது 'வருடந்தோறும் சித்திரைமாதத்தில் பௌர் ணமியன்று வந்து என்னை ஆராதித்துப் போகவேணும்' என்று நியமித்தது, அப்படியே

acharya.org

நடந்துவருவது முதலான விசேஷங்கள் அபூர்வமானவை. இவை அடியோடு தொடப் படவில்லை. "முன்பு ப்ருந்தாவனத்தில் யமுனையின் மணல் வெளியில் நடந்த ராஸக்ரீடை இப்போது பாலாற்றில் நடத்திக்காட்டப்படுவதாக" எழுதப்படுகிறது. அந்தோ! இதெல்லாம் தலைகாலில்லாத வார்த்தைகளல்லவா? ராஸக்ரீடையின் ஸ்மரணத்திற்கு இங்கு ப்ரஸக்திலேச மேனுமுளதோ?

117. பக்கம் 12, 13-க்கு இடையில் சவரிசாத்திய தேவப்பெருமாள் படமொன்று வெளியிட்டு சௌரி (வரத) ராஜன் என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு என்ன பொருளென்று கேட்கவேணும். திருக்கண்ணபுரத்தெம்பெருமானுக்கு சௌரிராஜனென்றும் சௌரிப்பெருமாளென்றும் திருநாமமுண்டு. "திருமுடியில் ஆச்சரியமான சவரி சாத்திக் கொண்டிருப்பதனாலே இந்தத் திருநாமம் வழங்கிவருகிறதென்று சில அம்மையார்கள் சொல்லுவதுண்டு. "ஸௌரயே (வஸு-தேவாய) சூரதனயாய—பௌளஸ்தி:"—சூரனை வஸு-தேவனுடைய புதல்வனுகையாலே சௌரி யென்று பட்டருடைய ஸஹஸ்ரநாம பாஷ்யம். ஸம்ஸ்க்ருதஜ்ஞர்கள் யாவரும் கொள்ளும் பொருள் இதுவே. சவரிக்கும் சௌரிக்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. சவரி சாத்திக்கொண்டிருக்கும் தேவப்பெருமாள் சௌரி வரதராஜனும். இங்ஙனே எழுதிப்போவதனால் நஷ்டமொன்றுமில்லை. மெய்க்கதைகளை மறைத்தும் பொய்க்கதைகளைப்புகுத்தியும் புத்தகம் வெளியிடுவதுதான் பொருத்தமற்றது.

118. ஸ்ரீ ஹஸ்திகிரியின்மீது ஏறினவுடனே அப்ரதக்ஷிணமாகத் திரும்பித் தெண்டன் ஸமர்ப்பிப்பதென்கிற ஸம்ப்ரதாயம் ஏறக்குறைய ஆயிரம் வருஷகாலமாக நடந்து வருகிறதென்பர் பெரியோர். நாடோறும் அருளாளன் (உத்ஸவமூர்த்தி) ஆஸ்தானத்தை விட்டுப் புறப்பட்டுக் கச்சிவாய்த்தான் மண்டபத்திலே யெழுந்தருளியிருந்து அங்கே திருவாராதநாதி விசேஷங்கள் கண்டருளி, பிறகு ஆஸ்தானத்திற்கு எழுந்தருள்வதாம். ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வாருக்கு இற்றைக்கும் தினப்படியாக நடந்துவருகிற க்ரமமிது. திருக்கச்சிநம்பிகளின் கைங்கரியமும் ஆறுவார்த்தை கேட்கப்பெற்றதுமெல்லாம் இந்த கச்சிவாய்த்தான் திருமண்டபத்தில்தான். முந்நூறு வருஷங்களுக்கு முன்வரையிலுங்கூட தினப்படியாக இந்த மண்டபத்திற்கெழுந்தருளியே திருவாராதனாதிகள் நடந்துகொண்டிருந்தனவென்றும், உடையார்பாளையத்தினின்று எழுந்தருளின பிறகே சில காரண விசேஷங்களை யிட்டு அந்த க்ரமம் நிறுத்தப்பட்டதென்றும் பெரியார் கூறுவர். இந்த மண்டபத்தெதிரில் ப்ரவசந கோஷ்டி நடத்த அணுமாத்ரமும் ஸௌகரியம் கிடையாதென்பதைச் சிறியாரு மறியப்பெறுவர். இங்கே அம்மாள்கோஷ்டி நடந்ததாகச்சொல்லுவது அசம்பாவிதம். தவறான ஐதிஹ்யங்களைக் கல்பனை செய்வதும், அவற்றைத் தலைமுறை தலைமுறையாக ப்ரசாரம் செய்துகொண்டுபோகப் பார்ப்பதும் விவேகிகளின் பணியாகமாட்டாது.

119. முந்நூறு வருஷங்களுக்கு முன்பு எழுந்தருளியிருந்த அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமிகள் இந்த ஸன்னிதியில் செய்திருக்கும திருப்பணிகள் எண்ணிறந்தவை. தாயார் ஸன்னிதி முன் திருமண்டபம், அபிஷேகமண்டப ஜீர்ணோத்தாரணம், ஆழ்வார் ப்ரதக்ஷிணத் திருமதில் (அதன் கோபுரமுட்பட), வாஹனமண்டபம், இப்படி பல திருப்பணிகள் செய்தது சிலாசாஸனத்திலும் அவருடைய வைபவ ப்ரகாசிகையிலும் எழுதியிருக்கிறது. ஆழ்வார் திருவீதி ப்ராகாரத்தில் அவருடைய திவ்யமங்கள விக்ரஹம் நின்ற திருக்கோலமாக சிலையிலே எழுதியருளப்பண்ணப்பட்டிருப்பதை நாளைக்கும் ஸேவிக்கலாம். திருவாபரணங்

acharya.org

களும் அவர் செய்வித்து ஸமர்ப்பித்தவைகளே அதிகமாக ஜ்வலிப்பவை. பெருமாளுக்கும் தாயாருக்கும் நித்யப்படி திருவாபரணங்கள்; (அதிகப்படியாக) அரைவடம், பதக்கங்கள், சங்கிலிகள், நீலவண்டு பதக்கம் முதலானவை அத்யாபி அவருடைய திருநாமத்தினாலேயே வழங்குவன. வாஹனங்களும் பல அவருடைய முயற்சியினாலேயே அமைந்தன. வெங்கடாத்ரி யென்கிற தென்கலை பக்தசிகாமணி ஸமர்ப்பித்த திருவாபரணங்கள் விலைமதிக்க முடியாதவை. நூறு வருஷங்களுக்குமுன்பு எழுந்தருளியிருந்த பிரதிவாதி பங்கரம் பெரிய அனந்தாசார்ய ஸ்வாமி ஸமர்ப்பித்த அநர்க்கமான திருவாபரணம் 'அனந்தாசார் மகரகண்டி' யென்றே நாளைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. திருவாபரணங்களுள் அதுவொன்று நடுநாயகமாக விளங்கி வருகின்றது. ஆக, திருப்பணிகளையோ திருவாபரணங்களையோ வாஹனங்களையோ இத்தலத்தில் சேமித்தவர்கள் தென்கலை ஸம்பிரதாயஸ்தர்களே யென்பது நாம் அபிமானமடியாக எழுதுவதன்று; ப்ரபலசாஸன ப்ரதிஷ்டாபிதமானது. இப்பெரியார்களைப்பற்றி ஒரெழுத்துமெழுதாமல், வீணை கலஹங்களுக்கு விதை விதைத்தவர்களும், அது சாகோபசாகமாக வளரும்படி செய்தவர்களும், நாளைக்கும் அஃதொன்றிலேயே ஊக்கமுடையர்களாயிருப்பவர்களுமான ஒரு வகுப்பினர்க்கு இல்லாத பெருமைகளை எற்றியெழுதியிருப்பனகண்டு உண்மையுணர்ந்த வொருவரும் மயங்கார்.

120. செங்கல்பட்டில் சிலகாலம் ஸப்கலெக்டராயும், பிறகு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாயும், பின்னர் ஹைகோர்ட் ஜட்ஜாயுமிருந்த மிஸ்டர் ரஸ்ஸல்துரையவர்கள் செங்கற்பட்டு ஜெஷன்ஸ் (1892ஹூ) கிரிமினல் அப்பீல் நெ. 2ல் 11-வது பாராவில் எழுதுகிறார்—"பூமார்க்கு டிரஸ்டிகள் கோவில் பணப்பை ஸ்வாதீனமாயிருக்கிற சாய்காலினால் அதிகாரிகளிடத்தில் தாற்காலிகக் கட்டளைகள் வாங்கியிருக்கிறார்கள்.....இவ்விடத்திற்குப் புதிதாகவரும் அதிகாரிகள் இந்த சண்டையின் சரித்திரத்தைத் தெரிந்துகொள்ளாமலே ஏமாந்து போகிறார்கள்" என்று. இவ்வண்ணமாகக் கையிலங்கு நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டத்தக்கவை எண்ணிறந்தவை. அவையெல்லாம் கிரமேண வெளிவரும். .... *

வெண்பா.

மன்னு மணவாள மாமுனிவன் மாண்புரைக்கும்
அன்னபுக ழுண்ணங்க ராகிரியன்—சொன்ன
அருளாளன் கோயில் வரலா றனைத்தும்
மருளார்ந்த மாந்தர் மருந்து.

ஸ்ரீவத்ஸ சிஹ்ந மிஸ்ர ஸுதாயை நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமத் வரவர முனயே நம:

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

வரதன் ஸன்னிதி வரலாறு

முற்றுப்பெற்றது.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.
நித்யஸ்ரீர் நித்யமங்களம்.

acharya.org